கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 27.12.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்





சத்யம் A/Cdts சாந்தி A/Cdts ஐநாக்ஸ் A/Cdts ஸ்வர்ணசக்தி அபிராமி A/Cdts
சங்கம் சினிமாஸ் A/Cdts சந்திரன் A/Cdts AVM ராஜேஸ்வரி A/Cdts MM.தியேட்டர் A/Cdts
மாயாஜால் A/Cdts ரோகிணி A/Cdts ஸ்ரீபிருந்தா A/Cdts ஆராதனா A/Cdts
4 காட்சிகள்
entertainment
Kalpathi S.Aghoram
presents
வெற்றி நடைபோடுகிறது
ESK Films International
T.D.ராஜா
நகுலன்
நடிக்கும்
கந்தகோட்டை
யாமிருக்க பயமேன்
சக்திவேல்.S தினா E.கிருஷ்ணசாமி
R.மோகன் K.V.ஜெயராம் அசோக்ராஜா
P.T.செல்வகுமார் N.செந்தில்பிரபு J.A.அப்துல்
கல்பாத்தி S.அகோரம் கல்பாத்தி S.கணேஷ் கல்பாத்தி S.சுரேஷ்


கல்கி
அடுத்தடுத்த
இதழ்களில்
கல்கி
• கல்லணைக்கு அண்ணன்
காசி விஸ்வநாதன்
• புழுக்கத்தில் புளியஞ்சோலை!
• கூவமாகும் உய்யக்கொண்டான்
• ஆக்ஷன் நெம்பர்!
• திருச்சியில் சபரிமலை!
இன்னும் இன்னும்...
திருச்சி மாவட்ட
ஸ்பெஷல்ஸ்...

தேவதையாகத் தெரியணுமா?

அழகாக இருக்க வேண்டும், தனக்கு மட்டுமல்ல பிறர் கண்களுக்கும் அழகாகத் தெரிய வேண்டுமென்பதே பெண்களின் ரகசியப் பிரார்த்தனை. அழகுக்காக பல ஸ்வீட் மெனக்கெடல்கள் செய்கிறார்கள். ஆனால், சரியாகச் செய்வதில்லை. எதைச் செய்ய வேண்டும். எதை விட வேண்டும் என ஒரு சின்னப் பட்டியல் ஃபாலோ பண்ணுங்க, ப்யூட்டி க்வீன் ஃபார் எவர் ஆகுங்க...

செய்ய வேண்டியவை:

★ ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று லிட்டர் தண்ணீர் பருகவும்.

★ ஆறு, ஏழு மணி நேரம் தூக்கம். (நோ செல் ஃபோன், நோ மெஸேஜ், நோ சீரியல்)

★ நார்ச் சத்து உணவுகள் அதிகமாக உட்கொண்டு, பச்சைக் காய்கறிகளைச் சமைக்காமல் சாலடாகச் சாப்பிடவும்.

★ தினமும் இருமுறை குளிக்க வேண்டும். எத்தனை அசதியாக, சோம்பலாக இருந்தாலும் படுக்கைக்குச் செல்லும் முன் குளித்து விட்டுப் படுக்கவும்.

★ உடலுக்கும் தலைமுடிக்கும் ரெகுலராக எண்ணெய் தேய்க்கவும்.

★ காஸ்மெடிக்ஸ் உபயோகித்தால் கூடிய வரை ஹெர்பல், நேச்சுரல் வகைகளையே பயன்படுத்தவும்.

★ பழங்கள் நிறையச் சாப்பிட வேண்டும்.

★ எக்ஸர்சைஸ் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். ஸ்லிம் ஃபிகர் வேண்டுமென்றால் நேரத்தை ஒதுக்கித்தான் ஆக வேண்டும். எனர்ஜி + ஃபிகர் இரண்டுமே கிடைக்கும்.

★ படுக்கச் செல்லும்முன் பால் ஒரு க்ளாஸ்! கால்ஷியம் கிடைக்கும். விடலாமா...?

செய்யக் கூடாதவை:

★ கூடிய வரை எக்ஸ்ட்ரீம் வெதர் கண்டிஷன்களுக்கு ஏற்றவாறு உடையணிய வேண்டும். கத்திரி வெயிலில் முகம், கைகள் கவர் பண்ணியிருக்க வேண்டும். மிக அதிக வெப்பம், மிக அதிகமான குளிர், இரண்டு நிலையிலுமே சருமத்தை எக்ஸ்போஸ் பண்ணக் கூடாது.

★ மிக அதிகமான வறுத்த, பொரித்த, ஸ்பைஸி உணவுகள் வேண்டாம்.

★ நள்ளிரவு வரை கண் விழிக்கக் கூடாது.

★ கெமிக்கல், ப்ரிஸர்வேட்டிவ் கலந்த பானங்கள், உணவுகள், காஸ் மெடிக்ஸ் வகைகள் வயிற்றுக்கும் சருமத்துக்கும் கேடு விளைவிக்கும். ஸோ, ஸே நோ!

செய்ய வேண்டியவை, வேண்டாதவை சொன்னால் போதுமா? ஏதாச்சும் டிப்ஸ் தர வேண்டாமா என்கிறீர்களா...?

ரோஜா இதழ்களை அரைத்து அதில் உருளைக்கிழங்கையும் (வேகாத) துருவிப் போட்டு, அரை மூடி எலுமிச்சையைப் பிழிந்து ஃப்ரீஸரில் இருபது



நிமிடங்கள் வைத்து எடுத்து கண்களின் கீழே தடவிவர, டார்க் சர்க்கிள்ஸ் (கருவளையம்) மறைந்துவிடும். சிலருக்கு கண்களின் வெளிப் பகுதியில் சுருக்கங்கள் இருக்கும். இதை 'க்ரோஃபீட்' என்பார்கள். அதுவும் காணாமல் போய்விடும். ஒரு வாரம் தொடர்ந்து செய்துவர பலன் கண்டிப்பாகத் தெரியும்.

அழகாகத் தெரிய வேண்டுமென்றால் கொஞ்சம் வேலைசெய்யத்தான் வேண்டும். ஹய்யோ, கஷ்டம் என்று புலம்பிப் பலனில்லை. கஷ்டப் படாமல் இருக்க வேண்டுமெனில் கஷ்டப்படுங்கள். (ஹய்யோ, தத்துவம்!)



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com


இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

எது அழகு? - ஒரு பத்து நிமிட விவாதத்துக்கு ஆண் மயில்களும் பெண் சிங்கங்களும் மோதிக் கொண்ட கருத்து யுத்தத்தின் ஒரு எபிசோடுக்கான கவர்ச்சியான சுருக்கம் இது...



● சரி ஆரம்பிப்போம்... அழகு என்பது இளமை. இளமையின் விசேஷமே அழகுதான்.

❐ தப்பாவே ஆரம்பிக்கிறது உனக்குப் பழக்கமா போச்சு. குழந்தையும் அழகுதான். ஆனா தூரிகைக்கு எளிதில் அகப்படாத பாட்டியின் முகச் சுருக்கமும் அழகில்லையா?

● வேலைக்குப் போகும்போது அழகான வங்களைத்தானே செலக்ட் பண்றாங்க?

❐ புத்தி மக்கிப்போய் அழகு மட்டும்

சுமாரான பொண்ணுதான்

டாலடிச்சா வேலை கிடைச்சுடுமா? கிடைச்ச வேலை நிரந்தரமா வேணும்ன்னா புத்தி அழகா இருக்கணும்.



● அழகான புத்தி அநேக கண்களுக்குத் தெரியாது.

❐ ஒபாமாவோட லீடர் குவாலிட்டி தானே அவருக்கு அழகு! அதுதானே ஜெயிச்சது!

● இங்க தமிழ்நாட்டுல ஜெயிக்கற வங்க எல்லாம் லீடர் அழகை விட்டர் விட்டரா வெச்சிக்கிட்டு இருக்காங்களா?

❐ அழகு என்பது அவங்க அவங்க பார்வையைப் பொறுத்து மாறும்.

● நீங்க அழகான பொண் ணைத்தானே ரசிப்பீங்க! சுமாரான பொண்ணுங்களை சாய்ஸ்ல விட்டுடுவீங்க...



❐ ரொம்பத் தப்பான கால்குலேஷன். பார்த்து ரசிக் கத்தான் அழகான பொண்ணு! ஆனா கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்த

காலேஜ் கலாட்டா!



ஸ்வீட்டபிள்!



● பேராசிரியைகள் கரோலின், கீதா

சுமாரான பொண்ணுதான் ஸ்வீட்டபிள்!

● அடப்பாவி ஏன்?

❒ என் பொண்டாட்டியை அடுத்தவன் ரசிக்கக் கூடாது. அழகு எங்கே தோத்துப் போகுது பாத்தியா?

● அட அப்புறம்...என்னதான் சொல்ல வர்ற?

❒ காந்திஜியின் தியாகம் அழகு. இந்திரா காந்தியின் புடைவை அழகு. தெரசாவின் இதயம் அழகு.

● ஆம்பிளைக்குப் பேராண்மை - பொம்பிளைக்கு நம்மைக் காத்து ரட்சிக்கும் பெண்மை.

❒ அப்ப அழகு இல்லேன்னு பியூட்டி பார்லர்ல பணத்தைக் கொட்டிக் கொடுக்க வேண்டியதில்லைன்னு சொல்லு.

● அது பித்தளைக்கு தங்க முலாம் பூசுற வேலை. தங்கமாவே மாத்தற வேலையில்லை.

❒ அஜித், விஜய்ன்னு ஹீரோ ஜாடையில் இருக்கானான்னு பாக்காம எங்களை நாங்களா பாருங்க!

● பெண்களையும் அப்படித்தானே நீங்க நினைக்கணும்?

❒ சரி உனக்கு நான் அழகு எனக்கு நீ அழகு!

(ஏய்! ஆர்கியுமென்ட் தான் பண்ணச் சொன்னோம்... அப்படியே சந்தடிச் சாக்குல லவ்வைச் சொல்லச் சொல்லலே!)

- செய்தி,

சித்திரம் :

ஆர்.பாலா



SRUSHTI (தமிழ்நாடு கைவினைப் பொருட் கலைஞர்கள் சங்கம்) பல அரிய வகை ருத்ராட்சங்களை விற்று வருகிறது "ருத்ராட்சத்தைப் பற்றிய பலவிதமான பரவலான கருத்துக்கள் பரவி வந்த காலம் போய், தற்காலத்தில் இந்த ருத்ராட்சத்தை அனைவருமே விரும்பி வாங்கி அணிகின் றனர்" என்கிறார்கள் ஸ்ருஷ்டியின் ஒருங் கிணைப்பாளர் சோமசுந்தரம் மற்றும் பொருளாளர் ஸ்ரீநிவாசன்.



பக்தி மணம் பரப்பும்

சமீபத்தில் ஸ்ருஷ்டியில் நடைபெற்ற ஆன்மிகப்பொருட்கள் கண்காட்சியில் 1 லட்சத்து 8 ருத்ராட்சங்களைக் கொண்டு அழகான ருத்ராட்சப் பந்தலை அமைத் துள்ளனர். ஐந்து ஆண்டுகளுக்கு முன் வரை எடுத்துக் கொண்டால், ருத்ராட்சத் தைப் பார்த்தாலே ஏனோ பெண்கள் ரொம் பவே பயப்படுவார்கள். வீட்டில் உள்ள ஆண்களைக்கூட ருத்ராட்சம் வாங்க அனுமதிக்க மாட்டார்கள். ஆனால், இன்று பல பெண்களே முன் நின்று ருத்ராட் சத்தின் மகிமையை அறிந்துகொண்டு தம் நலம், தம் குடும்ப நலம் வேண்டி, ருத்ராட்சங்களை வாங்கிச் செல்கின்றனர். இது ஆரோக்கியமான முன்னேற்றம். அதே போல சுத்த சைவ உணவு சாப்பிடுபவர் களாக இருந்தால் தான் ருத்ராட்சம் அணிய வேண்டும் என்ற ஒரு தயக்கமும் மக்களி டம் இருந்தது. அசைவ உணவு சாப்பிடு பவர்களாக இருந்தால் ருத்ராட்சத்திலிருந்து வரும் பாஸிட்டிவ் எனர்ஜி அவர்களுக்குச் சற்றே தாமதமாகக் கிடைக்கும். ஜாதி, மதம், இனம் கடந்து யார் வேண்டுமா னாலும் ருத்ராட்சத்தை அணிந்து கொள்ள லாம்.

ருத்ராட்சத்தில் ஒரு முகம் தொடங்கி பல முகங்கள் கொண்ட ருத்ராட்சங்கள் இருக்கும். ஒவ்வொரு முகத்துக்கும் ஒவ் வொரு விசேஷத் தன்மை உண்டு.

எங்களிடம், ஒன்று முதல் 21 முகங்கள் வரை கொண்ட ருத்ராட்சங்கள் இருக்கின்றன.

ஒரு முக ருத்ராட்சம்: இது சிவபெருமானையும், காமதேனுவையும் குறிக்கும். நாம் வேண்டும் வரத்தை எல்லாம் அளிக்கக்கூடிய சக்தி பெற்றது இது.

இரண்டு முக ருத்ராட்சம்: இது அர்த்த நாரீஸ்வர ஸ்வரூபத்தைக் குறிக்கக்கூடியது. தம்பதிகளுக்குள் ஒற்றுமை உணர்வு மேலோங்க இது வழி வகுக்கும்.

மூன்று முக ருத்ராட்சம்: அக்னியின் ஸ்வரூபமாவது இது. இதைப் பெண்கள் தங்கள் தாலிக் கயிற்றில் எப்போதும் அணியலாம்.

நான்கு முக ருத்ராட்சம் : இது படைக்கும் கடவுளான ப்ரும்மாவைக் குறிக்கக்கூடியது. ஒருவரது நினைவாற்றலை வளர்க்கக்கூடிய தன்மை வாய்ந்தது இது.

ஐந்து முக ருத்ராட்சம் : சிவபெருமானைக் குறிக்கும் ருத்ராட்சம் இது. ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த வல்லது இது.

ஆறு முக ருத்ராட்சம் : முருகப்பெருமானைக் குறிக்கக்கூடிய இந்த வகை ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு மனதைரியம் கூடிடும்.

SRUSHTI

ஏழு முக ருத்ராட்சம் : மஹாலட்சுமியின் ஸ்வரூபத்தைக் குறிக்கும் இந்த ருத்ராட்சம், செல்வத்தை அளிக்கக் கூடியது.

எட்டு முக ருத்ராட்சம் : விநாயகப் பெருமானைக் குறிக்கக்கூடிய இந்த ருத்ராட்சம், வாழ்க்கையில் வெற்றி வாகை சூட வழிவகுக்கும்.

ஒன்பது முக ருத்ராட்சம் : சக்தியின் அம்சத்தை குறிக்கும் இந்த ருத்ராட்சம், சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும்.

பத்து முக ருத்ராட்சம் : விஷ்ணுவைக் குறிக்கும் இந்த ருத்ராட்சம், வாழ்வில் ஏற்படும் இன்னல்களைக் களைந்தெறியக்கூடிய சக்தி



பெற்றது.

ருத்ராட்சங்கள் தவிர, நர்மதை நதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட அரிய வகை நர்மதா பாணம், அரிய வகை க்ரிஸ்டல் கற்கள், பாதரசம் கொண்டு தயாரிக்கப்பட்ட சிவ லிங்கங்கள், விஷ்ணு பூஜைக்கேற்ற சாளக்ராமங்கள், ஸ்ரீ யந்திரங்கள், துளசி மாலைகள், சந்தன மாலைகள், வலம்புரிச் சங்குகள் என ஆன்மிக அன்பர்களுக்குத் தேவையான பலவிதமான அரிய, அற்புதமான பொருட்களைக் கொண்டுள்ளது சென்னை ஆழ்வார்ப்பேட்டை, 86, சேமியர்ஸ் சாலையில் செயல்பட்டு வரும் SRUSHTI.

- நளினி சம்பத்குமார்





* பச்சைக்கல் தாலிப்பதக்கம்




* கல்லிழைத்த பதக்கம்

திரிபுர சுந்தரி, சிவகாம சுந்தரி, சர்வாங்க சுந்தரி, செளந்தர நாயகி, சுந்தராம்பிகை, அபிராம சுந்தரி, சுந்தரவல்லி என்று அம்பிகைக்கு அழகழகாய்த் திருநாமங்கள். மீனாட்சி சுந்தரன்... என்று இறைவனும் பேரழகன். முருகன் என்றாலே அழகன்! அருள் வடிவங்கள் எல்லாமே அழகு வடிவங்கள். ஏன் அழகுக்கு அவ்வளவு முதன்மை ஸ்தானம்? அழகு என்பது பொறி புலன்களுக்கு மட்டுமே எட்டும் சாதனமா? இல்லை ஆத்மானுபவத்துக்கும் அழகு எட்டுமா? இப்படி ஓர் எண்ண ஓட்டம்!

கோயில்கள், கோபுரங்கள், மண்டபங்கள், தூண்கள், சிற்பங்கள், ஓவியங்கள் என்று எல்லாமே அழகின் வடிவங்கள். கருவறையில் விளக்கின் சுடர் ஒளியில் அருள்பொழியும் திருவடிவம் அழகின் வடிவம். உலாத் திருமேனிகளாக ஊர்வலம் வரும் சிலைகளும் எழில் வடிவங்கள். அவற்றை அலங்கரிக்கும் வண்ணப் பட்டாடைகளும் வனப்பு மிகுந்த ஆபரணங்களும்

அர்ப்பணமாகும்



அழகுக்கு அழகு சேர்க்கும் சாதனங்கள். வாகனங்கள், தேர்கள், விளக்குகள், தோரணங்கள் என்று ஆலயங்கள் முழுவதும் அழகுமயமே!

அந்த நாளில் நம் முன்னோர்கள் தாம் முயன்று அடைந்த செல்வங்களில் மேன்மையானவற்றையெல்லாம் ஆண்டவனுக்குச் சமர்ப்பித்து மகிழ்ந்தார்கள். தங்கம், வெள்ளி, நவமணிகள், ஆபரணங்கள் என்று செல்வச் செழிப்பின் சின்னங்கள் எல்லாம் ஆலயங்களைச் சென்றடைந்தன. ஒருவன் எவ்வளவுதான் சொத்து சேர்த்தாலும் அதை அந்த மனிதனும் அவன் குடும்



❖ மகாசதாசிவமூர்த்தி

அழகு!

பழும், மிஞ்சிப் போனால் அடுத்த ஒன்றிரண்டு தலைமுறைகளும் அனுபவிக்கும். ஆனால், ஆலயம் என்பது பொதுச்சொத்து. அங்குள்ள செல்வங்களை அனைவரும் பார்த்து ரசித்து ஆனந்தப்படலாம்! தலைமுறை தலைமுறையாகப் போற்றிப் பாதுகாக்கப்படும்! அதனால்தான் வரகுண பாண்டியன் முதல் திப்பு சுல்தான், பச்சையப்ப முதலியார், காஞ்சிப் பெரியவர் என்று பல்வேறு காலகட்டங்களில் பெருமானுக்குச் செய்து அணிவித்த ஆபரணங்கள் இன்றும் சிதம்பரத்தில் காணக் கிடைக்கின்றன. மன்னர்கள் தங்களுக்கென்று சேர்த்து வைத்து அனுபவித்த செல்வங்கள் எல்லாம் காணாமல் போக, ஆண்டவனுக்கு அர்ப்பணித்தவை மட்டும் இன்றும் அழகிய தொல்பொருள் ஆவணங்களாக கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன!

நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் வைரமும் வைடூரியமும் வைத்து இழைத்த நகைகளை மனிதர்கள் அணிந்து பார்த்தால், எல்லார் கண்களும் ஒரே மாதிரியாகப் பார்க்கின்றனவா! ''என்ன செல்வச் செருக்கு! இவர்களுக்கு வந்த வாழ்வைப் பார்!'' என்று பொறாமைத் தீயை மூட்டி விடுகிறது! சற்று நேரம் உற்றுப் பார்த்தால், ''இவன் பார்வை சரியில்லையே'' என்ற சந்தேகம் வருகிறது! மாறாக முத்துக் கொண்டை, மாம்பழக் கொண்டை, கல் இழைத்த மகரக் குண்டலம், பவழக்கொடி இவையெல்லாம் அன்னை மீனாட்சியை அலங்கரிக்கும்போது, ''அந்தக் கல்

த.கி. நீலகண்டன்



* மாம்பழக்கொண்டை கிரீடம்



* முத்து திலகக் கிரீடம்



* சும்மாடு கிரீடம்

இழைத்த பதக்கத்தைப் பார்; அதில் ஒரு ஜோடிக் கிளிகள்! வைரத்தில் இழைத்திருக்கிறது தெரிகிறதா? அந்தக் கிளிகளின் மூக்குப் பவழமும், அதன் நுனியில் தொங்கும் ஒற்றை முத்துத் தொங்கலும், அம்பிகை ஆடி வருகையில் கூடவே தானும் ஆடுகின்றனவே...அதைக் கவனித்தாயா! என்ன அழகு! என்ன அழகு'' என்று வைத்த கண் வாங்காமல் பார்த்து மகிழலாம்!

உன்னதமான கலைப் படைப்பை உருவாக்கிய கலைஞனுக்கும், ''நம் உழைப்பும் திறனும் ஆண்டவனுக்கே உரியது'' என்ற உணர்வு வந்ததனால், தன் திறமை அனைத்தையும் காட்டி அவற்றுக்கு உயிரளிக்கிறான். உயிரைக் கொடுத்து உழைத்ததன் பலன் அன்று அவன் உருவாக்கிய கோயில்கள் இன்றளவும் நின்று நிலைத்திருக்கின்றன. 'எல்லா மேன்மைகளும் இறைவனுக்கே' என்ற கொள்கையின் அடிப்படையில்தான் அழகும் நேர்த்தியும் நிறைந்தவை அனைத்துமே அர்ப்பணிக்கப்பட்டன.

''........ கோது அகன்ற தொழிலுடைத்தாகி / குலவு சித்திரம் கோபுரம் கோயில் / ஈதனைத்தில் எழிலிடை உற்றாள் இன்பமே வடிவாகிடப் பெற்றாள்''

என்று எழிலின் பரிமாணங்கள் எல்லாவற்றிலும் கலைவாணியின் சாந்நித்யத்தைக் காண்கிறான் பாரதி! ஆதி சங்கரர் அம்பிகையைக் குறித்து இயற்றிய துதிக்கு 'சௌந்தர்ய லஹரி' என்று மகுடம் சூட்டினார். காலம் காலமாய் இடை விடாது ஒன்றன்பின் ஒன்றாய் வந்து கரையை மோதும் கடல் அலைகளைக் காணும் போது அம்பிகையின் எல்லையில்லா சௌந்தர்யம் அவர் நினைவுக்கு வந்தது போலும்! இயற்கையின் உண்மைத் தத்துவத்தில் எல்லாமே அழகுதான்! அழகற்றது என்ற ஒன்று உண்டா என்ன?

இயற்கையின் உண்மைத் தத்துவத்தில் எல்லாமே அழகுதான்!



முதுமை - உங்கள் உடலுக்கே, உள்ளத்திற்கல்ல...




காஞ்சி மஹா பெரியவாள் துணை

ஸ்ரீஅவ்வை ஹோம்

(ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்)

11, அதிபத்தர் சாலை, சேக்கிழார் நகர், குன்றத்தூர்
சென்னை-600 069. போன்: 044-3200 4200



அருளும் உள்ளங்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள், பண்டிகை நாட்களில் ஒரு நாள் உணவளித்து மகிழ வேண்டுகிறோம்



வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளால் சமுதாயத்தினரால் நிராகரிக்கப் பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். இங்கு ஆதரவின்றித் தவிக்கும், நோய்களால் பாதிக்கப்பட்ட, நடக்க முடியாமல் படுத்தபடுக்கையாக உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவ சமாகப் பூர்த்தி செய்து வருகிறோம். தினசரி இறைவழிபாடு, தியானம், கூட்டுப் பிரார்த்தனையுடன் திருமுறை பாராயணம் செய்து அவர்களை பராமரித்து வருகிறோம். உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் நீடூடி வாழ அன்னையர்களின் கூட்டுப் பிரார்த்தனை, அக்னி ஹோத்ரம் தினமும் நடைபெறுகிறது. அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் பொங்கல் பண்டிகையை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உங்கள் அன்பளிப் புகளை பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும். தாங்களும் குடும்பத்துடன் இந்த இல்லத்தை பார்வையிடலாம்.

ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.400/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.350/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவுக்கு ரூ.1100/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்

5 நாள் உணவுக்கு ரூ.5,500/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

10 நாள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான (ஸ்ரீகாயத்ரி எந்திரத்துடன்) பெரிய டாலர் ஒன்று அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து, அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் கலைமகள் அருளையும் திருமகள் அருளையும் ஒரு சேர வழங்கி அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-

காயத்ரி என்பதன் பொருள் தன்னை துதிப்பவரை, ஜபிப்பவரை காப்பாற்றுவது என்பது பொருள். காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுள், புகழ், செல்வம், கல்வி, மன அமைதி மற்றும் புத்திர பாக்கியத்தை அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடு பொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்னைகள், செவ்வாய், நாக தோஷங்கள், திருமணம், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனி யாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத் யுஞ்சய மந்திரம் மற்றும் ஜெப மாலை அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரத்தின் ஒலிகளின் பயனை அனைத்து இல்லங்களிலும் ஒலித்து ஐஸ்வர்யம் பெற வைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு **Cheque/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

பெறுபவர்களை விட கொடுப்பவர்களே பாக்கியவான்கள் - சுவாமி விவேகானந்தர்

"தமிழகத்தைப் பிரித்தால்

தெலங்கானா தனி மாநிலத்துக்கு காங்கிரஸ் பச்சைக்கொடி காட்டியுள்ள நிலையில், தமிழகத்திலும் மதுரையைத் தலைநகராகக் கொண்டு தென் தமிழ்நாடு அமைக்க வேண்டும் என்ற குரல் கேட்கிறது.

"இந்த உணர்வு தென்மாவட்ட மக்கள் மனத்தில் சிறு பொறியாக இருக்கிறது. காலப்போக்கில் பெரு நெருப்பாக மாறும்" என்கிறார் அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகத் தலைவரும், தென் மாநில இயக்கத்தின் தலைவருமான டாக்டர் சேதுராமன்.



* சேதுராமன்

இதுபோல பிரித்துக்கொண்டே சென்றால் எங்குதான் போய்முடியும்?

"மொழிவாரி மாநிலமாகத் தமிழ்நாடு பிரிக்கப்பட்டபோது, நமது மக்கள்தொகை மூன்று கோடி. இப்போது ஆறரை கோடி. இதில் தென் தமிழகத்தின் 18 மாவட்டங்களில் மட்டும் மூன்று கோடிக்கும் அதிகமாக மக்கள் வசிக்கிறார்கள். இதைவிடக் குறைவான மக்கள்தொகை கொண்ட நிலப்பகுதிகள்கூட தனி மாநில அந்தஸ்தைப் பெற்றுவிட்டன. எனவே ஜனநாயகத்தில் நிர்வாகத்தின் பயன் கடைக்கோடி மனிதனையும் எட்ட வேண்டுமென்றால், ஆட்சி, அதிகார மையம் அவன் எட்டும் தூரத்தில் இருக்க வேண்டும். குமரியிலிருந்து சென்னை வர 15 மணி நேரம் ஆகும். இதுவே தலைநகர் மதுரையாக இருந்தால் நான்கே மணி நேரம்தான். இந்தத் தொலைதூரம் மட்டும் ஒரு கணக்கல்ல; தென்தமிழ்நாடு கேட்பதற்கு, பின்தங்கிய தொழில் வளர்ச்சியும் ஒரு முக்கியக் காரணம். இப்பொழுது அந்தப் பகுதிகளில் கந்துவட்டிதான் கனரகத் தொழில். இட்லி சுடுவதுதான் கைவினைத் தொழில். இது தவிர வறட்சியால் வாடும் பகுதிகளான இராமநாதபுரம், நெல்லைச் சீமையின் சில பகுதிகள்... ஆகியவை தனிக்கவனம் பெறவேண்டுமானால் தென் தமிழ்நாடு அமைந்தே தீர வேண்டும். அப்படி அமைந்தால் கேரளாவில் வீணாகக் கடலில் கலக்கும் நதிநீரைத் தென்பகுதிகளுக்குத் திருப்பிவிடும் திட்டம் செயல்படத் தொடங்கும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அப்பகுதிகளில் அமைக்கப்பட்ட பஞ்சாலைகள், துணியாலைகள் நசிந்துபோய் மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். எனவே தென்பகுதியைத் தனி மாநிலமாக உருவாக்க வலுவான காரணங்கள் உள்ளன."

இப்போது தனி மாநிலம்; அப்புறம் தேவர் தேசம், தலித் தேசம் என குரல்கள் எழுமே?

''எங்கள் நியாயமான கோரிக்கையைத் திசைதிருப்பும் கேள்வி. தெற்குப் பகுதியில் முக்குலத்தோர் முப்பது சதவிகிதம்தான். தென்தமிழகத்தில் தலித், நாடார், முக்குலத்தோர் ஆகியோர் கலந்து கட்டியாகத்தான் வாழ்கிறார்கள். தனி மாநிலம் கோருவது அப்பகுதியின் வளர்ச்சியை முன்னிறுத்தித்தான். ஜாதிகளைக் கொண்டு இதில் முடிச்சுப் போட வேண்டாம். இன்னும் சொல்லப் போனால் அரசாங்கமே தென்பகுதி புறக்கணிக்கப்படுவதாக நினைத்துத்தான் சில வசதிகளைச் செய்திருக்கிறது. குறிப்பாக மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை, தென் பகுதி காவல்துறை தலைவர் அலுவலகம்... இப்படியெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை போதாது. தென்மாநிலம் அமைக்கப்படும்வரை தமிழக சட்டசபைக் கூட்டத்தொடர் வருடத்துக்கொரு முறை மதுரையிலும் நடைபெற வேண்டும். இதுபோல மகாராஷ்டிராவில் மும்பையைத் தவிர நாக்பூரிலும் நடக்கிறது. பூகோள ரீதியாக, வட, தென் தமிழகத்தின் எல்லையாக காவிரி அமைந்துவிட்டது.''



ஊழல் குறையும்!''

-டாக்டர். சேதுராமன்

ஊழல் மற்றும் அதிகார மையங்களைப் பரவலாக்கத்தான் தனி மாநிலமா?

''ஜனநாயகத்தில் மக்கள் விழிப்போடு இருந்தால் ஊழலையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் தடுக்கலாம். ஆளுகைக்குட்பட்ட நிலப்பகுதி குறுகுமேயானால், ஆட்சியாளர்கள் மக்களின் நேரடி சோதனை வட்டத்தில் வந்துவிடுவார்கள். இதனால் ஊழல் குறையும்.''

கருணாநிதி நோ சொல்லிவிட்டாரே?

''1000 ஏக்கர் வைத்து அனுபவித்துக் கொண்டிருப்பவரிடம் எல்லாவற்றையும் பிடுங்கிவிட்டு உனக்கு 10 ஏக்கர்தான் என்றால் எப்படி பொறுத்துக்கொள்வார்? எங்கள் உணர்வை மிதிப்பவர்களைக் காலம் தண்டிக்கும்.''

- ப்ரியன்




''நடிகை புவனேஸ்வரியை உங்கள் கட்சியில் சேர்த்தது ஏன்? ஜாதிப் பாசமா?'' என்று கேட்டபோது,

''அவர் முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் மட்டுமல்ல; அதிகார வர்க்கத்தால் பாதிக்கப்பட்டவர் என்பதால்தான் அவரையும் சேர்த்துக் கொண்டோம்'' என்றார் சேதுராமன்!



கல்கி



2009 டிசம்பர் 27
விரோதி மார்கழி 12
மலர் : 68
இதழ் : 22

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

பிரணாப் முகர்ஜியின் புலம்பல்!


"உணவுப் பொருள் விலை ஏற்றத்தால்தான் விலைவாசி குறியீடு உச்சத்தை எட்டியிருக்கிறது" என்று நிதியமைச்சர் கூறியிருப்பது 2009ம் ஆண்டின் மிகக் கசப்பான ஜோக்! இதைக் கண்டுபிடித்துச் சொல்ல, நிதியமைச்சரோ அதிகாரிகளோ தேவையில்லை. சராசரி இந்தியன் ஒவ்வொரு கவளம் சாப்பிடும்போதும் அந்த வலியை உணர்ந்துகொண்டுதான் இருக்கிறான்!

கடந்த பத்து மாதங்களில் இல்லாத அளவுக்கு நவம்பரில் விலைவாசி குறியீடு மூன்றரை மடங்கு உயர்ந்து, 4.78 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது.

இந்நிலையில், பணப்புழக்கத்தைக் குறைத்து, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக வங்கிகள் மீது கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி முடுக்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உண்மையில் இந்த நடவடிக்கையினால் பணப் புழக்கம் பெரிய அளவில் குறையப் போவதும் இல்லை; விலைவாசி - குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை கட்டுப்பாட்டுக்குள் வரப் போவது மில்லை. வங்கிகள் மீது ரிசர்வ் வங்கி கட்டுப்பாடுகளை அதிகரிக் கிறபோது, அவை கடன் தொகை வினியோகத்தைக் குறைத்துக் கொள்ளும்; கடனுக்கான வட்டியை உயர்த்தும். அதனால் தொழில், வர்த்தக நிறுவனங்கள் அவதியுறும். ஆனால், விலைவாசி குறையாது.

உணவு, அத்தியாவசியப் பண்டங்கள் விலை ஏறுவதற்கு முக்கிய காரணம் பற்றாக்குறை; அரசாங்கத்தின் தவறான வினியோ





கக் கொள்கை ஆகியன. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப உணவுப் பொருட்கள் உற்பத்திப் பெருக்கம் ஈடுகொடுக்கிறதா? ஏற்றுமதி - இறக்குமதி கொள்கைகள் சாதகமாக உள்ளனவா என்றெல்லாம் அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை. மொபைல் தொலைபேசி தொழில், ஐ.டி. போன்ற துறைகளுக்குக் கிடைக்கும் கவனம், விவசாயத்துக்குக் கிடைப்பதில்லை. உற்பத்தி செய்யப்படும் தானியங்களை வீணாக்காமல் சேமித்துப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை இன்னமும் செம்மைப்படுத்தவில்லை. லட்சக்கணக்கான டன் தானியங்கள் ஆண்டுதோறும் வீணாகின்றன. இந்நிலையில் உணவு ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஜனவரி 1 முதல் ஹோசூரிலிருந்து சிங்கப்பூருக்கு நாள்தோறும் 250 டன் காய்கறிகள் ஏற்றுமதியாகப் போகின்றன. இதனால் நிச்சயமாக உள்ளூர் சந்தையில் விலை ஏறும். போதாக்குறைக்கு, இவ்வாண்டு பருவமழை வேறு காலந்தவறியிருப்பதால் விவசாய உற்பத்தியும் அருகப் போகிறது.

பணவீக்கத்துக்கு ஒரு காரணம் லஞ்ச ஊழலும் கறுப்புப் பணப் புழக்கமும். அதைவிட முக்கிய காரணம், அரசின் அனாவசிய செலவினங்கள். உற்பத்திக்கு உதவாத திட்டங்களுக்கான ஒதுக்கீடு குறைந்தாலன்றி அரசாங்கச் செலவும் குறையாது; பட்ஜெட் பற்றாக்குறையும் நீங்காது. தனது ஊதாரிச் செலவுகளை அரசு துளிக்கூட குறைக்கவில்லை. அந்தச் செலவுகளுக்கான பணத்தை - அது எவ்வளவாக இருந்தாலும் ரிசர்வ் வங்கி அச்சிட்டுக் கொடுக்கத்தானே வேண்டியிருக்கிறது! அதன் விளைவாக நோட்டுப் புழக்கம் அதிகரித்து, பணவீக்கம் பலூனாகத்தானே பம்பும். விலைவாசி - குறிப்பாக இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலைவாசி - விண்ணைத் தொடத்தானே செய்யும்!

பொருளாதார முன்னேற்றம் காரணமாக விளைந்ததுதான் இந்தப் பண வீக்கம் என்று அரசு தரப்பு வாதிடுகிறது. அரசு, தங்க ஊசி தந்திருக்கிறது என்பதற்காக மக்கள் கண்ணையா குத்திக்கொள்ள முடியும்! ○



ஐ லவ் யு மை காட்!

இந்தியாவிலிருந்து இன்னுமோர் உலக அழகி தேர்வு செய்யப்படுவாரா என்பது தான் சென்ற வாரம்வரை பலரது ஏக்கக் கனவு! அந்த அத்தனை எதிர்பார்ப்பையும் தம்முள் ஏற்றிக்கொண்டிருந்த பூஜா சோப்ரா, பரபரப்பாகப் பயிற்சிக்குக் கிளம்பியபோது காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டு சிகிச்சைக்கு உட்பட்டார்.

'போட்டியிலிருந்து வெளியேறிவிடுவார்' என்று பலரும் நினைத்த நேரத்தில், கால் வலியோடு காலிறுதியில் பங்கேற்று அரையிறுதிக்கு முன்னேறி Miss Beauty with a Purpose - டைட்டிலைத் தட்டி வந்திருக்கிறார். இந்தியாவில் பெண் கல்வியை முன்னெடுத்துச் செல்ல, இவர் செய்து வரும் முயற்சிகளுக்காக இந்தப் பட்டமாம்!

சும்மாவா... பின்னே...? பிரெஞ்பேடியைத் தம் ரோல் மாடல் என்று குறிப்பிட்டவர் ஆயிற்றே... அழகில் மட்டுமல்ல; தன்னம்பிக்கையிலும் ஒரு ரோல் மாடல் ஆகிவிட்ட இவருக்கு வேறு என்னென்ன பிடிக்கும்? தெரிஞ்சுக்குங்க:

உள்ளத்தை அள்ளும் அழகுப் பெண்கள்: நளினமான அழகுக்கு ஐஸ்வர்யா ராய், 'சிக்'கென்று உடலழகைப் பராமரிக்கும் ப்ரியங்கா சோப்ரா, அசாத்திய நம்பிக்கைக்காக சுஷ்மிதா சென், **மனம் கரையும் சுற்றுலாத் தலங்கள்:** மொரிஷியஸ் மற்றும் செஷல்ஸ் தீவுகள்; **நறுமண ரகசியம்:** ஜாதோர், **மயக்கும் நிறம் :** பிங்க், **டைனிங் ஹால் வோட்ஸ் ஃபார்:** தால் மக்கானி, ராஜ்மா, பஞ்சாபி உணவு எல்லாமே...; **என் பாட்டு... என் பாட்டு...:** ஸாஃப்ட் ராக் அண்ட் ரொமாண்டிக்.

இந்த மிஸ்.கான்ஃபிடெண்ட் 'ஐ லவ் யு' சொன்ன நபர் யார் தெரியுமா...? அவர் வார்த்தைகளாகவே கேளுங்க... ''என்னைச் சுற்றியிருக்கும் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். என் மேல் அன்பு செலுத்துகிறார்கள். இறைவா உனக்கு நன்றி... இதை நீ கேட்கிறாய் என்று எனக்குத் தெரியும்... ஐ லவ் யு மை காட்!''

- ஜான்ஸிராணி

நன்றி, அட்டைப்படம்:
பூஜா சோப்ராவின் அஃபிஷியல் இன்ஃபர்மேஷன் வெப்சைட்

"என் பையன்தான், 'என் ஃப்ரெண்ட்ஸ் வீட்டில் எல்லாம் ஹாலை அழகா இன்டீரியர் டெக்கரேட் பண்ணி வைச்சுருக்காங்கம்மா? நாமளும் அப்படிப் பண்ணலாம்' என்று நச்சரிக்க ஆரம்பித்தான்.

குறைந்த பட்ஜெட்தான் போட முடியும் என்ற சூழ்நிலை. நானே என் வீட்டை அழகு படுத்த முனைந்தேன். ஹாலில் ஒரு சின்ன மேட், டீபாய், அதன் மேல் அழகான சின்ன கிண்ணத்தில் அன்று பூத்த மலர்கள். அருகிலேயே ஸ்டாண்டில் அழகான ஃப்ளவர் வாஷ். என் கணவர் வரைந்த ஓவியம், அதற்கு மேல் சுவரில் கடிகாரம், ஜன்னலுக்கு ரசனையான திரைச் சீலைகள், இரண்டு சேர்கள்... அவ்வளோதான்... அப்புறம் நானே என் ஹாலைப் பார்த்து 'அழகு கொஞ்சுகிறதே' என்று என்னைப் பாராட்டிக் கொண்டேன். செலவு வெறும் 2000க்குள்தான். என் மகனுக்கும் கொள்ளை சந்தோஷம். என் கணவருக்கும்தான்'' என்கிறார் செண்பகம் சின்ன ராஜ்.




செய்தி, படங்கள்: **ஆர்.பாலா**



எழுத்திலும் சரி, ஓவியத்திலும் சரி... அழகுணர்ச்சி என்பது இன்று அவுட் அஃப் பேஷன்! எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் ஆழமாய்த் தோய்ந்து, அதன் அழகுகளை ரசித்து, அதில் திளைத்து, பிறரும் உணரும் வண்ணம் அதனை வெளிப்படுத்தும் கலை வடிவங்கள் எண்ணெய் தடவி சீவிய ஒற்றை ஜடை போல் ஓரங்கட்டப்பட்டுவிட்டன!

* சுபாஷிணி





* மணியம் செல்வன்



அத்தகைய அழகுணர்ச்சிக்கு ஏங்கி, அதை மீட்டெடுத்து உச்சி முகர்ந்து மகிழ விரும்புவோருக்கு ஒரு விருந்து படைத்தார் ஓவியர் ம.செ. - தமது தந்தை மணியம் வரைந்த ஓவியங்களைப் பிரதானமாகக் கொண்டு ஒரு கண்காட்சி நடத்தினார் சென்னையில். ஆழ்வார்பேட்டை பார்வதி காலரியில் நடந்த கண்காட்சியில், தமது 45 ஆண்டு ஆயுளில் மணியம் படைத்த சில அற்புதங்கள் இடம் பெற்றிருந்தன. அவற்றோடு தமது ஓவியங்கள் வெகு சிலவற்றையும் தமது மகள்கள் சுபாஷிணி, தாரிணியின் ஓவியங்கள் சிலவற்றையும் காட்சிப்படுத்தியிருந்தார் ம.செ.

அழகு



* தாரிணி



மணியம் ஓவியங்களில் பழைமையின் தீர்மானமான முத்திரை. மாந்தர்களின் கண்களில் சாந்தம்; அங்கங்களுக்கு அழகு சேர்க்கும் அன்பு; நஞ்சினும் கொடிய


சேர்க்கும் அன்பு!



நந்தினியிடமும்கூட (பொன்னியின் செல்வன்) கொஞ்சம் நளினம்; பழுவேட்டரையரின் புஷ்டி மீசையை மீறிக் கசியும் சபலம் என்று வண்ணங்களும் வடிவமும் உணர்ச்சிகளைச் சேர்த்துக் கொண்டு பேசின.

ம.செ.வுடைய படைப்புகளிலோ பழைமையை விட்டுக் கொடுக்க விரும்பாத புதிய அணுகுமுறை; நீர் வண்ணச் சித்திரங்களின் கனவு நிறங்கள்; தூரிகையை துளியூண்டு தொழில்நுட்பத்தில் குழைத்துத் தீட்டும் நவீனம் என்று தனித்தன்மை பிரகாசிக்க...

சுபாஷிணி, தாரிணியின் சித்திரங்கள் தங்களுக்கான தனி அடையாளங்களை அமைதியாகத் தேடிப் புதிய பாதைகளில் கிளைத்துக் கொண்டிருந்தன.



✱ மணியம்

கண்காட்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றிய கோபுலு, ''தலைமுறைகளாகத் தொடரும் கலைத் திறனின் வெற்றிக்கு, மணியம் அவர்களின் மனைவி சரஸ்வதிதான் (பெயர் பொருத்தம்!) காரணம்'' என்று நெகிழ்ந்து பேசினார்.

ஓவியர் நடிகர் சிவகுமாரோ, தமது ஓவியக் கனவுகள் ம.செ. மூலமாக நிறைவேறுவதாக மகிழ்ந்தார்.

தோட்டா தரணி, கிருஷ்ணமூர்த்தி (கலை இயக்குநர்), சா.கந்தசாமி போன்ற பிரமுகர்கள் குடும்பத்துடன் வந்து மகிழ்ந்து வாழ்த்தினர்.

சாயா



விளையாட்டில் திறமைதான் அழகு. அதுவே வீரர்களின் முதலீடு. ஆனால் விளையாட்டுத் திறனை விடவும் ஒரு சிலர் அவர்களுடைய அழகுக்காகவும் பர்சனாலிட்டிக்காகவும் அதிகம் ரசிக்கப்படுகிறார்கள்; ஒரு சினிமா நட்சத்திரத்துக்குக் கிடைக்க வேண்டிய வரவேற்பைப் பெற்றுவிடுகிறார்கள்.

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் உலக சாதனை படைத்த வீரர்களான ஃபெல்ப்ஸ், உசைன் போல்ட்டை விடவும் பொராகுவேவின் ஜாவலின் வீராங்கனையான லெர்ன் ஃப்ரான்கோவைச் சுற்றித்தான் ஈ போல மொய்த்துக் கொண்டிருந்தார்கள் கேமராமேன்கள். உலகின் மிக அழகான விளையாட்டு வீராங்கனையாகப் பத்திரிகைகளால் கொண்டாடப்படுபவர், ஃப்ரான்கோ. ஒலிம்பிக் போட்டி நடந்த சமயத்தில் அவருடைய புகைப்படங்கள்; எல்லா முக்கிய சர்வதேச இதழ்களிலும் தவறாமல் இடம்பெற்றன.

ஹாலிவுட் நடிகை கேத்ரீனா ஜீடா ஜோன்ஸ் சாயல் கொண்டவர் ஃப்ரான்கோ. இவர், ஜாவலின் வீராங்கனை மட்டுமல்ல, ஒரு மாடலும்கூட. 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட ஃப்ரான்கோ, 42வது இடத்தை அடைந்து மிகமோசமான தோல்வியையே அடைந்தார். அந்தத் தோல்வியிலிருந்து தம்மைத் தேற்றிக்கொள்ள மாடலிங்கில் அதிக கவனம்

செலுத்தினார். 2006ல் மிஸ் பிகினி யுனிவர்ஸ் போட்டியில் கலந்துகொண்டார். இப்போது ஒவ்வொரு வருடமும் தன் புகைப்படங்களால் அலங்கரிக்கப் பட்ட காலண்டர்களை வெளியிடு கிறார். இதனால் விளையாட்டில் மிகப்பெரிய சாதனையாளராக இல்லாவிட்டாலும், அவருடைய அழகுக்காக அவர் சர்வதேச அந் தஸ்தை அடைந்துவிட்டார்.



செக்மேட் செய்யும் செஸ் க்வீன்!

இந்திய அளவில் நெ.1 அழகு வீராங்கனை யார் என்றால், முதலிடம் செஸ் வீராங்கனை தானியா சச்தேவுக் குத்தான்.

''செஸ் விளையாட்டு வீரருக்குண்டான எந்த அடையாளமும் என்னிடம் கிடை யாது. நான் செஸ் வீரர் என்றால் யாருமே நம்ப மறுக்கிறாங்கள். என்னை ஒரு நடிகை என்றோ ஒரு மாடல் என்றோதான் அவர் கள் எண்ணுகிறார்கள்'' என்று தன் நிலையை எண்ணி வியந்துபோகிறார் தானியா சச்தேவ்.

'நீ நடிக்கப்போகலாம்' என்றுதான் சிறு வயது முதல் தானியாவை பலபேர் உசுப்பேற்றியிருக்கிறார்கள். ''16 வயதில் தெஹ்ரானில் ஆசியப் போட்டியை நான் வென்றேன். விருது வழங்கும் போது விழாவில் நம் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. அப்போதுதான் செஸ் மீதான மரியாதை அதிகமானது. அதன் பிறகு என் கவனம் முழுவதும் செஸ்ஸின்மீதுதான்'' என்கிறார் தானியா.

''இந்த அழகு ராணியின் ராஜா செஸ் விளையாட்டிலிருந்து வர வாய்ப் புண்டா?'' என்று கேட்டால் பலமாகத் தலையாட்டி மறுக்கிறார். ''ஏற்கெனவே என் வாழ்க்கையில் செஸ்தான் நீக்கமற நிறைந்திருக்கிறது. அதனால் செஸ்ஸுக்கு வெளியேதான் என் ராஜாவைத் தேடு வேன்'' என்கிறார். செக்மேட் ஆகப் போவது யாரோ...?

- ச.ந.கண்ணன்

தேன் பிலிற்றும் மலர்ச்செண்டு!

குருமண்டலரூபிணி குருவாக, பலவிதமான ஆசார்யர்களின் ரூபமாகவும், ஆசார்ய மண்டலத்தின் ரூபமாகவும் இருக்கக்கூடியவள்.

குலோதீர்ணா - குல பதத்தைத் தன்னுடைய இடமாகக் கொண்டவள். கௌலேசுவரியாக இருக்கக் கூடியவள். கௌலாசார முறையிலான வழிபாட்டுக்கு உரியவள். சமயாசார முறையில் குலபதம் என்பது குண்டலினியை மெள்ள மெள்ள உயர்த்திக்கொண்டே போய் அடைகிற உயர்பதம். குலம் என்பது குண்டலினி ஆற்றல். அந்த ஆற்றலின் பாதைதான் குலபதம். அதனால்தான் ஆசார்யர் பாடுகிறபோது என்ன சொன்னார் என்றால், 'குலபதம்பித்வா' என்று குறிப்பிட்டார். அப்படியே ஆதாரச் சக்கரங்களைத் துளைத்துக் கொண்டே இந்தக் குலபதம் மேலே போகிறது. அந்தக் குலமாக - ஆற்றலாக இருக்கக்கூடியவள்; குலபதத்தையே தனது இருப்பிடமாகக் கொண்டவள் குலோதீர்ணா.

கௌலாசார முறையிலே பார்த்தால், அண்டமெல்லாம் தன் இருப்பிடமாகக் கொண்டவள். அந்த அண்டம் என்பதுதான் அங்கே குலம். குலம் என்றால் பெரிய தொகுப்பு என்று அர்த்தம். 'அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்' என்போம். அப்படி இந்த அண்டத் தொகுதியைத் தன் இருப்பிடமாகக் கொண்டவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

இன்னொரு அர்த்தம் - குலம் என்றால், வழி வழியாக வருவது. இந்த குண்டலினி ஆற்றலானது என்னவாகிறது...? மூலாதாரத்திலிருந்து எழுப்பிக்கொண்டே போகிறபோது, ஒன்றுக்குப் பின் இன்னொன்றாக வழி வழியாக வரக்கூடியது. இந்த வழிவழியான முறையைத் தன் இருப்பிடமாகக் கொண்டவள் குலோதீர்ணா.

பகாராத்யா - சூர்ய மண்டலத்தில் ஆராதிக்கப்படுகிறவள்; அதன் லயத்தில் ஆராதிக்கப்படுகிறவள். சூரிய மண்டலம் என்று சொல்கிறபோது, ஏதோ நாம் அறிந்த ஒரு சூரிய மண்டலத்துக்குள் அவளது சக்தி அடங்கிவிடுகிறது என்று எண்ணலாகாது. அண்ட - பகிரண்டங்களையெல்லாம் தன் இருப்பிடமாகக் கொண்டவள் ஸ்ரீ லலிதாம்பிகை. அவை அனைத்திலும் உறைபொருளாகவே ஆராதிக்கப்படுகிறாள்; அந்த அண்ட பகிரண்டங்களினாலும் ஆராதிக்கப்படுகிறாள்.

மாயா - மாயையைத் தரக் கூடியவள்; மாயையாக இருக்கக்கூடியவள். **மஹாமாயா** என்று ஏற்கெனவே ஒரு திருநாமம் வந்தது. **மஹாமாயா, ஸர்வமோஹினி, மாயா** என்ற இந்தத் திருநாமங்கள் மூன்றுமே கிட்டத்தட்ட ஒரே பொருளைத் தரக்கூடியவை.

தேனின் ருசி!

மதுமதி - மதுவாக - தேன் ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள். அம்பாளுக்குத் தேன் நிவேதனம் செய்வது ரொம்ப விசேஷமானது. அந்தத் தேன் ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள் அம்பிகை. இன்னும்

11

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

சுதா சேஷய்யன்


ஸ்ரீ கோமதியம்மை
களக்காடு
திருநெல்வேலி மாவட்டம்

கொஞ்சம் ஆழமாகப் பொருள் கொள்ள வேண்டு மென்றால், தேனினுடைய ருசியை நமக்குத் தரக்கூடி யவள்.

ஆசார்யர் ஆதிசங்கரர் இதை ரொம்ப அழகாகப் பாடுவார்; தெரிந்த சுலோகம் தான்: 'அவித்யானாம் அந்த ஸ்திமிர மிஹிர த்வீப நகரி'... என்ற சுலோகம். அவித்யை (அறியாமை) என்கிற இருளை நம் மனத்திலிருந்து விரட்டும் தீபம் போன்றவள்.

அவ்வாறு விரட்டிவிட்டு, ஜடர்களான நமக்கு எதைக் கொடுக்கிறாள் அம்பிகை...?

'ஜடானாம் சைதன்யஸ் ஸ்ருதி ஜரி...' என்றார். சைதன்யத்தை ஜடர்களான நம் மீது அப்படியே தெளித் தாளாம் அம்பிகை!

இந்த சைதன்யம் என்பது என்ன? எங்கேயிருந்து வந் தது...? சைதன்ய மகரந்தம் என்பது அம்பாள் என்கிற பெரிய பூங்கொத்திலிருந்து வந்தது. பூங்கொத்திலிருக்கக் கூடிய மகரந்தத்திலிருந்து தான் வண்டுகள் தீஞ் சுவையை உறிஞ்சி எடுத்துத் தேனை உற்பத்தி பண்ணு கின்றன.

அம்பாளே இந்தப் பெரிய பூங்கொத்து. ஒரு சிறிய பூ அல்ல அவள். அம்பாள் என்கிற பூங்கொத்திலிருந்து ஜடர்களான நம் மீது தெளிக் கும் தேன், மகரந்தத் துகள்... இவைதான் அவள் நமக்கு அளிக்கும் சைதன்யம். இவ்வாறு சைதன்யத் தேனைத் தரக்கூடியவள், அந்தத் தேனாகவே இருக்கக்கூடியவள்தான் **மதுமதி**.

சைதன்ய தேன் என்பது சாதாரண தேன் அல்ல... அதனால்தான் ஆசார்யர் இன்னொரு இடத்திலே சொல்கிறபோது, "அம்மா நீ மலராக இருக்கிறாய்; அந்த மலருக்குள்ளே நான் வண்டாக வந்து விழுந்து விடுகிறேன்" என்றார். 'ஷட்பதாம்' என்று தம்மை வண்டாகக் குறிப்பிட்டுக் கொண்டார். ஷட்பதாம் என்றால் ஆறு கால்களையுடையது. தமிழில், 'அறுகாலி' என்று சொன்னாலே அது வண்டைத்தான் குறிக்கும்.

வண்டின் சரணாகதி!



வண்டு என்ன பண்ணும்...? பூவிலே போய் விழும். மகரந்தத்தில் ஒட்டிக்கொள்ளும். அதி லிருந்து வருவதற்கே மனசில்லாமல், அப்படியே பூவோடு கலந்து தன் வடிவத்தை இழந்துவிடும். தனக்கென்று ஓர் அடை யாளம் இல்லாமல் பூவோடு மறைந்துவிடும். கொஞ்சம் யோசித்தோ மென்றால் புரியும்... மாம் பழத்தில் வண்டோடின பழம் என்போம் - ரொம்ப தித்திப்பாக இருக்கும். ஆனால் அந்த வண்டு, பழத்தில் எங்கே இருக்கும்...?

வண்டோடின பழம் என்று சொன்னால், குழந்தை கள், "எங்கே வண்டு? காட்டு...?" என்று கேட்பார்கள். ஆனால் பழத்தைப் பார்த்தால் எந்த ஆதாரமும் தெரி யாது. நல்ல கனிந்த பழமாக இருந்தால், வெளியே வண்டோடின அடையாளம் இராது. அதிகபட்சமாக, நறுக்கி உள்ளே பார்க்கிறபோது, சிறு கறுப்பு படிவுகள் இருக்கலாம். அதுவும் சில சமயத்தில்தான் தென்படும். பல சமயங்களில், குழிவான சிறு அடையாளம்தான் இருக்கும்; வண்டின் வேறு அறிகுறி தென்படாது. பழம் சரியாகக் கனியவில்லையென்றால், சில சமயத்தில் வண்டினுடைய ஏதேனுமொரு சில உடற்பாகங்கள்



"அம்மா நீ மலராக இருக்கிறாய்; அந்த மலருக்குள்ளே நான் வண்டாக வந்து விழுந்துவிடுகிறேன்."

பழத்தில் தென்படும்.

பழமான வண்டு!

பழத்தில் வண்டு துளைப்பதில்லை; மகரந்தத்தைக் குடிப்பதற்காக மலரில் போய் உட்கார்கிறது. அப்படியே, அதிலேயே மயங்கிப்போய் விடுகிறது. வண்டையும் சேர்த்துக் கொண்டு, பூ மூடிக் கொள்கிறது. உள்ளே சிக்கிக் கொள்ளும் வண்டு உயிர் வாழ முடியாது அல்லவா? நாம் சொல்கிற சாதாரண உலக வாழ்க்கை போய்விட்டது வண்டுக்கு... ஏனென்றால், மூச்சுவிட முடியாது. பிராண வாயு கிடைக்காது. அப்படியே தன் உடலை அது இழக்கத் தொடங்குகிறது.

உடல் என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கைதானே! அது கொஞ்சம் கொஞ்சமாக உருவிழந்து, பழம் கனிகிற நேரத்தில் அப்படியே பழத்தோடு சேர்ந்துவிடுகிறது. அதற்கப்புறம் அதற்கு வண்டு என்கிற தனி அடையாளம் கிடையாது. ஆசார்யர் இதைத்தான் சொல்கிறார்...: ''நான் ஷட்சரணத்தோடு (ஆறு கால்களோடு) வந்து விழுந்து விடுகிறேன். என் தனித்துவத்தை முற்றிலும் இழந்துவிடுகிறேன். உன்னுடைய திருவடிகளில் நான் வந்து விழுகிறபோது, எனக்கென்று தனி அடையாளம் வேண்டாம். இந்த ஜீவன் அந்தப் பரமனோடு சேர்ந்துவிட வேண்டும்.''

''ஆறுகாலியாக நான் வந்து விழுந்து விடுகிறேன்'' என்று அவர் சொல்வதற்கும் காரணம் உண்டு. மனிதர்களுக்கு ஆறறிவு என்று சொல்கிறோம் அல்லவா...? அந்த ஆறறிவு படைத்த மனிதன் ஆறையும் கொண்டு பரமன் பதத்தில் போட்டு விட வேண்டும் என்பது உட்பொருள்.

ஸேந்த்ரிய மாநஸ நியமா தேவம்
த்ரக்ஷ்யஸி நிஜஹ்ருதயஸ்தம் தேவம்

என்று பாடினாரே பஜ கோவிந்தத்தில்... 'இந்த்ரியங்களோடு என் மனஸையும் கொண்டு வந்து போட்டு விடுகிறேன்' என்று பொருள்.

எங்கே கொண்டு போட வேண்டும்... குருவினிடம் கொண்டுபோய்ப் போட வேண்டும் என்று பஜகோவிந்தத்தில் சொல்கிறார். குருவும் அம்பாளும் ஒன்றுதான் என்பதால், இங்கே இந்த சுலோகத்தில் ''அம்மா உன் பாதங்களில் ஆறு கால்களுடன் சரணடைகிறேன்'' என்கிறார். வண்டாக மாறி, வண்டு எப்படி தன் அடையாளத்தை இழக்கிறதோ அதுபோல் 'தான்' என்ற உணர்வைக் கரைத்து 'ஹ்ருதயஸ்தம் தேவம்' என்றது போல, தன் உள்ளத்திலே குஹாம்பாவாக இருக்கக் கூடியவளை முழுக்க முழுக்க தரிசனம் செய்வதாகச் சொல்கிறார் ஆசார்யர்.

(வளரும்)

சிக்ஸ் பேக்

'கஜினி' படத்தில் வரும் சஞ்சய் ராமசாமி சூர்யாவுக்கும், அதற்கு முன்பு படங்களில் பார்த்த சூர்யாவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தது? அதனைத் தொடர்ந்து 'வாரணம் ஆயிரம்' படத்தில் தமிழ்த்திரைப்பட வரலாற்றிலேயே முதல் முறையாக சூர்யா முறுக்கேறிய தசைகளுடன், 'சிக்ஸ் பேக்' கெட்-அப்பில் தோன்றிய போது ஆச்சரியப் படாதவர்கள் இல்லை. அடுத்து விஷால் சிக்ஸ் பேக்கில் தோன்றி மிரட்டினார். அந்த சிக்ஸ் பேக் ஜுரம் திரை உலகில் பலரையும் தொற்றிக்கொண்டுள்ளது.



''சிக்ஸ் பேக் பர்சனாலிட்டி ஒன்றும் அவ்வளவு ஈஸியான விஷயமில்லை. தினமும் இரண்டு மணி நேரம் ஜிம்மில் உடற்பயிற்சி; அதன்பின் ஒரு மணி நேரம் போல ஜாகிங், வழக்கமான அரிசி, கோதுமையிலான உணவு ஐட்டங்களை ஒதுக்கிவிட்டு ப்ரோட்டீன் சத்து அதிகமானவற்றைச் சாப்பிட வேண்டும்; பால் சம்பந்தமான அனைத்துக்கும் தடா. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் வாய்க்கு ருசியான வழக்கமான சாப்பாட்டைத் தியாகம் செய்ய வேண்டும். அவை எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியமானது உங்களுக்கு ஒரு சிறந்த பயிற்சியாளர் அமைய வேண்டும்'' என்கிறார் சூர்யா. 'கஜினி' படத்தின்போது சூர்யாவின் உடற்பயிற்சியாளராக இருந்தவர் அஜித் ஷெட்டி. 'உன்னைப் போல் ஒருவன்' படத்தில் வரும் போலீஸ் அதிகாரி கணேஷ் வெங்கட்ராம், பிருத்விராஜ், நரேன், இந்தி நட்சத்திரம் சல்மான்கான் ஆகியோருக்கும் அஜித் ஷெட்டிதான் பயிற்சியாளர்.

"அமெரிக்காவில் இருபது ஆண்டுகளுக்கு முன்பே உடற்பயிற்சியாளர்களுக்கு, தொழில் ரீதியான சிறப்பான அங்கீகாரம் கிடைத்து விட்டது. ஆனால், இங்கே இப்போது தான் ஜிம்களில் பயிற்சி பெற்ற உடற்பயிற்சியாளர்கள் அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்'' என்கிறார் அஜித் ஷெட்டி. மும்பையில் வசதியான ஹோட்டல் பிஸினஸ் குடும்பத்தைச் சேர்ந்தவரான இவர், அமெரிக்கா சென்று உடற்பயிற்சி இயலில் எம்.பி.ஏ. படித்துவிட்டு, சென்னையின் பிரபல ஜிம்மிலும், நட்சத்திரங்களுக்கு உடற்பயிற்சி ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.

"ஒவ்வொரு கல்லுக்குள்ளும் (உடலிலும்), ஒரு சிற்பம் (சிக்ஸ் பேக்) இருக்கிறது."



சிற்பிகள்

"ஒவ்வொரு கல்லுக்குள்ளேயும் ஒரு சிற்பம் இருக்கிறது. நாம் செய்ய வேண்டியது அந்தக் கல்லில் இருக்கும் வேண்டாத பகுதிகளை செதுக்குவதைத்தான். அதுபோல நம் அத்தனை பேர் உடம்பிலும் சிக்ஸ் பேக் உடலமைப்பு இருக்கிறது. சரியான உடற்பயிற்சி மூலமாக அதிகப்படியான சதையை அகற்றிவிட்டால் நாம் எல்லோருமே சிக்ஸ் பேக் ஆண் அழகர்கள்தான்!'' என்று சொல்லிப் புன்னகை செய்கிறார் பிரசாத்ராஜ்.

"ஒரு ஜிம்மைச் சுற்றி ஐந்து கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதியில் வசிக்கும் மக்களில் ஒரு சதவிகிதம் பேர்தான் ஜிம்மில் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்களில் பாதி பேர் 'உடல் எடையைக் குறைக்க வேண்டும். ஜிம்மில் சேர்ந்து உடற்பயிற்சி செய்யுங்கள்' என்று டாக்டர்கள் சொன்னதன் பேரில் வருகிறார்கள்.

சினிமா ஹீரோக்களால் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு, பலரும் ஜிம்முக்கு வந்து உடற்பயிற்சிகள் செய்து, தாங்களும் சிக்ஸ் பேக் உடலமைப்பு பெற ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த ஆர்வம் வரவேற்கத் தக்கதுதான். அதேசமயம் அவர்கள் இதில் இருக்கும் ஆபத்துக்களையும் தெரிந்துகொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்கிறார்.

மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் ரஞ்சன்தாஸ், இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்களில் மிகவும் இளம் வயதுக்காரர்களில் ஒருவர் என்ற

பெருமைக்கு உரியவர். அவருக்கு ஃபிட்னஸ் உடற்பயிற்சிகள் செய்வதில் வெறி என்றே சொல்லலாம். வீட்டில் பிரத்யேகமாக ஒரு ஜிம் அமைத்திருந்தார். அண்மையில் ஜிம்மில் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ஹார்ட் அட்டாக் வந்து இறந்துவிட்டார். இதுபோன்று நிறைய நிகழ்வுகள்.

''ஜிம்முக்கு வரும் அத்தனை பேருக்கும் அங்குள்ள பயிற்சிக் கருவிகள் பொதுவானவை. ஆனால் வருகிற ஒவ்வொருவருடைய உடலமைப்பும், மன நிலையும் மாறுபட்டவை. எனவே, 'ஒவ்வொருவருடைய தேவையும் என்ன? அவர்களுக்கு எத்தகைய பயிற்சி அளிக்க வேண்டும்? எவ்வளவு நேரம் அளிக்க வேண்டும்?' என்றெல்லாம் அவர்களுடன் பேசி, உடல் அமைப்பினை, உடல் நிலையை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். ஜிம்மில் பயிற்சிக்கு வரும் ஒருவர் தமக்கு பிளட் பிரஷர், சுகர் இருக்கிறதா என்பதை பயிற்சியாளரிடம் சொல்லிவிட வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் பயிற்சியை மாற்றிக் கொள்ளலாம். இல்லாவிடில் சிக்கல்தான்'' என்கின்றனர் ஷெட்டியும், பிரசாத்தும்.

பிரபலங்களுக்கு உடற்பயிற்சி ஆலோசகராக இருந்த அனுபவம் பற்றிக் கேட்டபோது அஜித் ஷெட்டி சொன்னார்: ''ஜிம்மில் தவறுகள் செய்கிறபோது திருத்தங்கள் சொன்னால், ஹீரோக்கள் ஈகோ பார்ப்பதில்லை. என்னிடம் பயிற்சி பெற்று டிரிம்மான பிறகு பிருத்விராஜுக்கு கேரளா முழுக்க ரசிகர்களிடம் அப்படி ஒரு வரவேற்பு. மணிரத்னத்தின் படத்தில் நீங்கள் ஒரு புதிய பிருத்விராஜைப் பார்ப்பீர்கள். கஜினி படத்துக்காக நான் பயிற்சியளித்த நான்கு மாதமும் சூர்யா அளித்த ஒத்துழைப்பு அபாரமானது. இராத்திரி ஒன்பது மணிக்கு ஷூட்டிங் முடிந்தாலும், அதன் பிறகு வந்து உடற்பயிற்சி செய்துவிட்டுப் போவார்.''

''நான்கு மாத காலம் மிகக் கடுமையான பயிற்சிகள் மூலம் 'சத்யம்' படத்துக்காக சிக்ஸ் பேக் உடலமைப்பைச் சாதித்தார் விஷால். அந்த கேரக்டருக்குரிய காட்சிகள் எடுத்து முடிக்கப்பட்ட கடைசி நாள் நான் அவருடன் ஷூட்டிங்கில் இருந்தேன். அன்று மதிய உணவு வேளையில் இத்தனை மாதங்கள் தவிப்புடன் தவிர்த்துவந்த பிரியாணியை அவர் ருசித்துச் சாப்பிட்ட காட்சியை என்னால் மறக்கவே முடியாது'' என்று நினைவு கூர்கிறார் பிரசாத்ராஜ்.

- எஸ்.சந்திரமௌலி



மனசுக்கு பொக்கே..!



''உங்களை மாதிரி ஹேண்ட்சம்மா இருக்கறவங்க காமெடியா நடிக்கலாமா?'' என்று கேட்டதும்...

''நான் காமெடியன் கிடையாது'' பட்டென்று பதில் வருகிறது ரஜினி ஜீவாவிடமிருந்து. ''விஜய் டீ.வி. லொள்ளு சபாவின் பாப்புலாரிட்டி, என்னை காமெடியனாகவே நினைக்க வைக்கிறது. எனது நடிப்பில் ஹ்யூமர் இருக்கும். ஆனால், நான் காமெடியன் கிடையாது. மதராச பட்டினம், களவாடிய பொழுதுகள், முரட்டுக் காளை என அடுத்த ஆண்டு வெளி வரவிருக்கும் படங்களிலெல்லாம் ஹீரோவுக்கு இணையான ரோலில் என்னைப் பார்க்கலாம். பாக்யராஜ் சார் படத்தில் நிறைய நகைச் சுவையான விஷயங்கள், நல்ல மெசேஜோடு இருக்கும். இது தான் என்னுடைய ஃபார் முலாவும்'' என்றவரிடம் ''உங்கள் வாழ்க்கையின் அழகான தருணங்கள் எவை?'' என்றோம்.

''சூப்பர் ஸ்டார் ரஜினியை 2005ம் ஆண்டு அவரது இல்லத்தில் ஒரு நிகழ்ச்சியில் சந்தித்தது தான் அழகான, அற்புதமான தருணம்'' என்கிறார். 'நாலு வயசுல யிருந்து ரஜினி சாரைப் பார்த்து வளர்ந்தேன். என்னோட நடிப் புல ரஜினி சாரோட தாக்கம் நிறையவே இருக்கும்'' என்றவர் அழகு ஸ்பெஷலுக்காகவே ஸ்பெஷலா ஒரு மெசேஜ் சொன்னார்.

''கண்ணா... தெளிவா ஒரு விஷயம் 'நச்'னு சொல்றேன்... கேட்டுக்கோ... நம்ம மனசுக்குள்ள இருக்கற அக அழகுதான் என்னைக்கும் நிலைத்து இருக்கும். அதனால என் பொக்கே எப்போதும் அழகான மனசுக்குத்தான்'' என்று 'பஞ்ச்'சுடன் முடித்தார்.

- ராகவ்குமார்



* வசந்தி ஸ்டான்லி

அழகின்

வாழ்க்கையில் அழகியல் உணர்வுக்கு ஆட்படாதவர்களுக்கு ஆறாவது அறிவு தேவையில்லை. ஒவ்வொருவர் வாழ்விலும் அழகான தருணங்கள் செதுக்கப்பட்ட சிற்பங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட தருணங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன் என்று சில வி.ஐ.பி.க்களிடம் கேட்டோம்:

வசந்தி ஸ்டான்லி : (தி.மு.க. ராஜ்யசபா உறுப்பினர்)

என் வாழ்க்கையின் பொழுதுகளை தினசரி அழகாக்கிக் கொண்டிருப்பவள் என் தம்பி மகள் கீர்த்தனா. அவள் அத்தை... அத்தை... என்று மழலை மொழியில் அழைப்பதும், எங்கள் தலைவரை தொலைக் காட்சியில் பார்த்தால் 'கலைஞர் தாத்தா' என்று உற்சாகமாக குரல் கொடுப்பதும் எனக்குக் கிடைக்கும் அன்றாட அழகியல் அனுபவம். ஒருமுறை ''உங்கள் படத்தைத் தொலைக் காட்சியில், பத்திரிகைகளில் பார்த்தால் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டுக்கொள்வாள்'' என்று தலைவரிடம் சொன்னேன். உடனே அவளை நோக்கிக் குனிந்த தலைவர், ''அப்படியா... எப்படி?'' என்றார். உடனே கீர்த்தனா 'பச்சென்று' அவரது கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். தலைவர் நெகிழ்ந்து போய் சாக்லெட்களை அள்ளி அவள் கையில் திணித்தார். அதைவிட அழகான தருணம் இனி அமையுமா என்று தெரியவில்லை.

மாஃபா பாண்டியராஜன்:

உலகளவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை அழைத்து 'ஐசனோவர்' விருது கொடுத்து கௌரவிக்கிறது அமெரிக்க அரசு. அந்த வகையில் 2000 வருடத்தில் அந்த கௌரவம் எனக்கும் கிடைத்தது. விருது வழங்கி கௌரவித்தவர், நோபல் பரிசு பெற்ற இந்தியரான அமர்த்தியா சென். அந்த இரண்டு மாத அமெரிக்க அனுபவம்



* மாஃபா பாண்டியராஜன்

தருணங்கள்!

'அரசியலில் பங்கு பெற வேண்டும்' என்ற சிந்தனையை எனக்குள் விதைத்தது. அந்த இரண்டு மாதங்களும் எனது வாழ்க்கையில் அழியாத, அழகான கோலங்களாக அமைந்துவிட்டன.



✱ தமிழருவி மணியன்

தமிழருவி மணியன்:

மனித வாழ்க்கையை அர்த்தப்படுத்துவது அழகியல் உணர்வுதான். இறைவனையும் அழகின் இருப்பிடமாகவே பார்த்துப் பழகியவர்கள் பாரத மக்கள். 'அருமையில் எளிய அழகே போற்றி' என்கிறது திருவாசகம். நம்மைச் சுற்றி இயற்கை ஓராயிரம் சௌந்தர்யங்களை வாரி இறைத்திருக்கிறது. ஆனால் அவற்றை ரசிக்க முடியாதபடி நம் வாழ்க்கை இயந்திரமயமாகி விட்டது. பத்தாண்டுகளுக்கு முன் நண்பர்களுடன் ரிஷிகேஷ் சென்றிருந்தேன். இரவின் ஆழ்ந்த அமைதி; உன்னதத்தை நோக்கி உயர்ந்து நிற்கும் மலை முகடு ஒரு பக்கம்; சங்கீத பாஷையில் சலசலத்து ஓடும் கங்கைப் பிரவாகம் மறுபக்கம்; வானவெளியில் வெள்ளிக் கிரணங்களை அள்ளி வீசும் பௌர்ணமி நிலவு இன்னொரு பக்கம். அந்த நேரத்தில் இயற்கையின் அனுபவத்தில் ஆழ்ந்தபடி நின்றிருந்த எனக்குக் கிடைத்த அழகியல் உணர்வை மரணம் வரை மறக்க முடியாது.

லாவண்யா ஆனந்த் (பரதநாட்டியக் கலைஞர்):

என் அபிநய குரு பத்மபூஷன் கலாநிதி நாராயணன். அவர் ஏதாவது ஒரு அற்புதமான பதத்தை விளக்கிச் சொல்லி, அதற்குப் பலவிதமாக அபிநயம் செய்து காண்பிக்கும்



✱ லாவண்யா ஆனந்த்

தருணங்கள் எனக்கு அழகா னவை. அதேபோல நான் கற்றுக் கொண்ட முற்றிலும் வித்தியாச மான பதத்துக்கு வேறொரு கலை ஞர், வெவ்வேறு விதங்களில் அபிநயம் செய்து காண்பிக்கும் சமயங்களும் எனக்கு அழகான தருணங்களாக அமைகின்றன.

சிவகாமி (எழுத்தாளர் - ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி) :

அழகிய தருணங்கள் எல் லாமே ஒரு சாண்ட்விச் போலத் தான் தோற்றம் அளிக்கின்றன. அதுபோல தருணங்கள் தொடர்ச்சி யாக நடக்கும்போது, ஒரு தருணத் தைக் கண்டுபிடிப்பது கடினம் தான். உதாரணமாக என்னுடைய 90 வயது தோழி விவியன் ஹென்றிக்குடனான நட்பு. அந்த அம்மையார் இங்கிலாந்து அரச பரம்பரையைச் சேர்ந்தவர். ஜப் பான் டைம்ஸ் கட்டுரையாளரும் கூட. ஜப்பானில் வசிக்கும் அவர் என்னைப் பார்க்க ஒருமுறை இந்தியா வந்தார். பின்னர் மரணப் படுக்கையில் அவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு ஜப்பான் சென்றேன். என்னைப் பார்த் தவுடன் அவர் முகத்தில் தோன்றிய மலர்ச்சி என்னுள் உண்டாக்கிய அழகியல் உணர்வை எப்போதும் மறக்க முடியாது. பத்து நாட்களில் இறந்துவிட்டார். அவர் மகள் 'எப் பவும் உங்களை நினைச்சுக்கிட்டு இருந்தாங்க' என்றார். மலர்ச்சி காட்டிய நட்பும், தொடர்ந்த பிரிவும் தொடர் சம்பவங்களும் கூட நினைவில் அழியாத அழகான தருணங்கள்தான்.



✱ சிவகாமி

> "அழகான தருணங்கள் ஒரு சாண்ட்விச் போலத்தான் தோற்றம் அளிக்கின்றன."

✱ எஸ்.பி.ஜனநாதன்



எஸ்.பி.ஜனநாதன் (திரைப்பட இயக்குநர்):

எங்கள் குடும்பத்துக்கு பூர் விகம் கிழக் தஞ்சைப் பகுதி யிலுள்ள வடசேரி கிராமம். ஆனால் எங்கள் மூதாதையர்கள் 19ம் நூற்றாண்டின் தொடக் கத்திலேயே சென்னைக்குக் குடி பெயர்ந்து விட்டார்கள். அங்கே என் அம்மா பார்வதிக்கு குடும் பப் பங்காக சிறிதளவு நிலம் இருந்தது. அவ்வப்போது ஊருக் குச் சென்று நிலத்திலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத் தைப் பெற்று வருவார் அம்மா. 1968ம் ஆண்டு குடும்பத்தில் சொல்ல முடியாத கஷ்டம். ஊருக்குப் போன அம்மா, இரண்டாயிரம் ரூபாய்க்கு நிலத்தை விற்று, பணத்துடன், தஞ்சையிலிருந்து சென்னைக்கு ரயிலில் திரும்பினார். எழும்பூரில் வந்து பார்த்தால் பணம் வைத்திருந்த பையைக் காணோம். வீட்டுக்கு வந்து அம்மா அழுத காட்சியை நினைத்தால் இன்னமும் நடுங்க வைக்கும். குடும்பத்தில் இறுக்க மான சூழல். அண்ணா காலத் தில்தான் பரிசுச் சீட்டு (லாட் டரி)அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் குலுக்கலில் முதல் பரிசு ஒரு லட்சம் என் சகோதரர் கண்ணுதலுக்குக் கிடைத்தது. சோகம் சூழ்ந்திருந்த குடும்பம் குதூகலமாக மாறிப்போனது. அது ஒரு சிலிர்ப்பான அனு பவம். என் வாழ்வின் அழகான தருணம்கூட.

- ஸ்ரீநி

அருள்வாக்கு



அன்புதான் அழகு!

நம் மனசை அப்படியே பூர்ண மாக அழகுக்குக் கொடுத்து அனு பவிக்க நமக்குத் தெரியவில்லை. அழகிலேயே ஈச்வரத்வத்தை அனுப விக்கும் பக்குவம் நம் எல்லாருக்கும் சித்திக்கக் கூடியதில்லை. ஏதோ அழகாயிருக்கிறது என்று கொஞ்ச நாழி ரசித்து சந்தோஷப்படுவதற்கு அதிகமாக அதை மோக்ஷோபாய மான உபாஸனையாக ஆக்கிக் கொள்ள நம்மில் எல்லோராலும் முடியவில்லை.

நமக்கு எது அழகாகத் தெரிகிறது? எது நமக்கு ஆனந்தத்தைத் தரு கிறதோ அதைத்தான் அழகு என் கிறோம். நாம் திரும்பத் திரும்ப விரும்பிப் பார்க்கும்படியாக ஒன்று இருந்தால் அது அழகு என்று அர்த் தம்.

இங்கே ஒரு முக்கியமான quali-fying clause (நிபந்தனை). அதாவது நாம் அனுபவிக்கும் ஆனந்தம் மனோவிகாரத் தில் ஏற்படுகிற சந்தோஷமாக இல்லாமல் மனசில் சுத்தமான, சாந்தமான இன்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறபோதுதான் அதற்குக் காரணபூதமானது அழகாயிருக் கிறதென்று அர்த்தம்.

அன்பு ஜாஸ்தியாக ஆக, ரூப அழகைப் பார்ப்பதுகூடக் குறைந்துகொண்டே வர ஆரம்பிக்கிறது. அன்பே உருவானவர்களை, அவர்களுடைய ரூபம் எப்படியிருந்தாலும், திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டே இருக்கிறோம் என்றால், அப்போது அன்பு தான் அழகு என்று ஆகிவிடுகிறது! ரொம்ப அழகானவர்கள் தூக்க வந்தால்கூட அவர்களிடம் பயந்துகொண்டு குரூபமான அம்மாவைத்தான் கட்டிக்கொள்கிறது குழந்தை! காரணம் என்ன? அவளுக்குத் தன்னிடம் உள்ள பெரிய அன்பை அது தெரிந்து கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் என்ன ஏற்படுகிறதென் றால், 'உயிருள்ள ரூபமாக இருக்கிற ஒன்றின் அழகு, அது அன்பாக இருக்க இருக்க ஜாஸ்தியாகிறது; அன்பு ரொம்பவும் முதிர்ச்சி அடைந்திருக்கிற நிலையில் ரூப அழகே அடிபட்டுப்போய் அன்புதான் அழ காகத் தெரிகிறது' என்று ஆகிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

அழகான தியாகம்!



* கணபதி

''இந்த இன்டர்நெட் உலகத்துலயும், யாராலும் தவிர்க்க முடியாத தொழில் எங்களோட விவசாயம். மனிதர்கள் பசியாறவும் ருசியுணரவும் உற்ற தொழில் இது. என் பாட்டனார், என் தாத்தா, என் அப்பா, என் கணவர் எல்லாருமே விவசாயிங்கதான். எங்களோட தாய் மடி வயல் வரப்புகளும் காடுகரைகளுமே. அதனாலதான் வேளாண் தொழில்ல ரொம்ப ஈர்க்கப்பட்டு மனப்பூர்வமா இதுல இறங்கினேன்!'' என்று சொல்லும் ரீட்டா தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அய்யம்பேட்டை அருகே உள்ள இலுப்பக்கோரை கிராமத்தைச் சேர்ந்தவர்.

இந்த வேளாண் பெண்மணியிடம் அப்படி என்ன விசேஷம்னு கேட்டால்... ''இப்பவும் சரி, பிற்காலத்துலயும் சரி, நீ வெச்சு நடத்துற ஸ்கூல்களைப் போல தொடங்கி நடத்த பல ஊர்கள்லயும் பல பேர் துணிஞ்சு முன்வருவாங்க. ஆனா, விவசாயம் செய்யறதுக்குனு ரொம்ப ஆர்வமா யாருமே வரமாட்டாங்க. அதனால நீ விவசாயத்துக்கு வந்துடு ரீட்டா'னு சொன்னேங்க. அந்த வருஷமே ஸ்கூலை இழுத்து மூடிட்டு, என்னோட விவசாய வேலைக்கு வந்துடுச்சு ரீட்டா. விளையாட்டுப்போல இப்ப முப்பது வருஷம் ஆகிப் போச்சு'' எனக் கூறுகிறார் விவசாயி கணபதி.

என்னது ஸ்கூலை இழுத்து மூடிட்டு விவசாயமா என ஆச்சரியத்தை அவிழ்த்து விட்டால், ''ஆமாங்க ஸார். தஞ்சை சரபோஜி காலேஜ்ல பி.ஏ., எகானமிக்ஸ் படிச்சேன். 1974ல இலுப்பக்கோரை, கணபதி அக்ரஹாரம்னு ரெண்டு கிராமத்துலயும் பிரைமரி ஸ்கூல் தொடங்கி நடத்தினேன். ஆறு வருஷம் ஓடிப்போச்சு. 1980ல எனக்குத் திருமணம். என் கணவர் கணபதி அப்ப சொன்னது, எனக்கு ஏதோ இன்னைக்

குச் சொன்ன மாதிரி இருக்கு!'' என்கிறார் ரீட்டா.

அகில இந்திய அளவில் நடந்த வானொலி விவசாயப் போட்டியில் பங்கேற்றுள்ளார். கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இவருக்கு 'வேளாண்மைச் செம்மல்' விருது வழங்கியுள்ளது. சர்வதேச அளவில் ஜெனீவா பன்னாட்டு விருதும் பெற்றுள்ளார்.

''எங்க பொண்டுக சனத்தோட காலையில வயல்ல இறங்கினேன்னா, சாயந்திரம் தான் கரையேறுவேன். மத்த கூலி ஆளுங்களோட ஒரு கூலி ஆளா அவங்க வேலைக்குச் சமமா நானும் வயல் தோட்ட வேலை எல்லாம் செய்யறேன். சேத்துல கால் வைக்காத நாள், சோத்துல நான் கை வைக்காத நாளாத்தான் இருக்கும்!'' என்று சொல்லும் ரீட்டா கணபதியின் மனசைப் போலவே, இலுப்பக்கோரை கிராமத்தில் பத்து ஏக்கர் விவசாயம், நெல், கரும்பு, வாழை, தென்னை, காய்கறி சாகுபடி என கண்களைக் குளுமையாக்குகிறது. ''எங்களது பரம்பரையில் ஆறேழு தலைமுறைக்கும் அது இருக்கும். விவசாயத்தில் இதுபோன்ற 'கொடுப்பினைகள்' பல இருக்கு. வேறு தொழில்களில் இது சாத்தியமில்லை'' என்ற அவர் சொற்களில் வயலெல்லாம் எதிரொலித்தன அவரின் அழகான தியாகம்.



* ரீட்டா

செய்திச் சித்திரம்:
திருநாவுக்கரசு

ஸ்கூலை மூடிட்டு விவசாயத்துக்கு வந்துரு!

ச.ந.கண்ணன்

ஹிட்ச்காக்கின் பத்து கட்டளைகள்!

ஹாலிவுட் மேதை ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக் நடிகைகளைத் தேர்ந்தெடுப்பதற்கென்று சில விதிகள் வகுத்திருக்கிறார். அந்தச் சட்டதிட்டங்களுக்கு உட்படாத யாரையும் அவர் தேர்ந்தெடுத்தது கிடையாது. அந்த விதிகள்தான் இவை :

- கதாநாயகியாக நடிக்கப்போகும் நடிகையை எனக்கு மட்டும் பிடித்தால் ஆகாது. அவளை முதலில் என் மனைவிக்குப் பிடிக்கவேண்டும்.

- பிறகு என் அலுவலகத்தில் உள்ள பெண் ஊழியர்களுக்கும் பிடிக்க வேண்டும்.


ஒரு பெண்ணை மற்றொரு பெண்ணுக்குக் கட்டாயம் பிடிக்கவேண்டும். அப்போது தான் அவள் ஒரு சரியான நடிகை. பார்வையாளர்களில் முக்கால்வாசிபேர் பெண்கள்தானே! பெண்களைக் கவராத எந்தக் கதாநாயகியாலும் வசூலுக்கு உத்தரவாதம் தரமுடியாது. ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணுக்குப் பிடிக்காதபோது அங்கு இயக்குநரின் ரசனை அடிபட்டுவிடுகிறது.

- நடிகைகள் நல்ல பண்புடைய கதாபாத்திரங்களையும் செய்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட கதாநாயகிகளுக்கு நிறைய ரசிகர்கள் கிடைப்பார்கள். மேரி பிக்போர்ட், லிலியன் கிஸ், பெட்டி பால்ஃபோர், பாலின் ஃப்ரெட்ரிக் ஆகியோர் கவர்ச்சிகரமான நடிகைகள் கிடையாது. ஆனாலும் எப்படிப் புகழ் பெற்றார்கள்? பெரும்பாலான பெண்கள் தங்கள் மகளைத் தமக்குப் பிடித்த நடிகைபோல வளர்க்க விரும்புவார்கள். அதனால் அழகு மட்டுமல்ல; கதாபாத்திரங்களும் முக்கியம்.

- ஒரே நேரத்தில் நாடகம், சினிமா என்று இரு தளங்களில் எந்த



✱ நார்மா



✱ ஹிட்ச்காக்





* பவுலின் ஃப்ரெட்ரிக்



* லிலியன் கிஸ்

நடிகையும் இயங்கக்கூடாது. மேடை நாடகங்களில் ஜொலிக்கக்கூடிய நடிகை சினிமாவுக்கும் ஒத்துவருவார் என்று கூறமுடியாது. நாடகங்களுக்குரிய தேவை வேறு. ஒரு சுமாரான பெண் இறுதி வரிசையில் உள்ள பார்வையாளர்களுக்கு ரதி போன்று காட்சியளிக்கக் கூடும். ஆனால் திரையரங்கில் எந்த வரிசையில் அமர்ந்து பார்த்தாலும் கதாநாயகி ஒரேமாதிரியாகத் தான் தென்படுவாள்.

● சினிமாவில் அழகு சார்ந்த விஷயங்களில் மட்டும் சமரசம் கூடவே கூடாது.

● ஒரு நடிகையின் உயரம் சராசரி உயரத்துக்கும் அதிகமாக இருக்கக்கூடாது. காதல் காட்சிகளுக்கு சராசரி உயரம் கொண்டவர்கள்தான் சரியாக இருப்பார்கள்.

● கிளாமரை மட்டும் நம்பி நடிப்பவர்களை நடிகை என்று கூறக்கூடாது. நடிகை என்றால் கவர்ச்சிக் கடை விரித்தால்தான் ஆச்சு என்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. நிஜ வாழ்க்கையில் கிளாமருக்கு எங்கே இடம்

ஹாலிவுட் ஹீரோயின்ஸ்

இருக்கிறது? சினிமாவில் யதார்த்தம், இயல்பு மிக முக்கியம். சினிமா, கவர்ச்சி காண்பிப்பதற்கான சாதனம் அல்ல.

● நடிகை என்பவள் ரூபவதிபோல இருக்க வேண்டும். அழகான நடிகையால் ஒரு விஷயத்தைச் சுலபமாகச் சாதித்துக் காட்ட முடியும். அவள் அழகில் சொக்கிப் போகும் ரசிகர்கள் நடிப்பை மறந்துவிடுவார்கள்.

● அழகான நடிகையாகப் பெயரெடுத்தாலும், அடுத்தடுத்த படங்களில் தனித் திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

● திரையில் தங்கள் நடிப்பை முன்னிறுத்தத்தான் எண்ண வேண்டும். நடிகையாக அன்றி தாங்கள் தேவதையாகக் காட்சியளிக்க வேண்டும் என்ற விநோத மனோபாவம், மகாபாவம்!

ஊட்டி குளிரெல்லாம் ஓடியே போய் விட்டது தேன்மொழிக்கு. அவன்தான்; அவனேதான்! பார்த்துவிட்டாள். அதே முகம்... அதே கண்... அதே ஹேர் ஸ்டைல்... கடந்த பத்து நாட்களுக்கும் மேலாய் கனவில் அருவமாய் வந்து அணு அணுவாய் இம்சித்த அதே முகம். அவர்களது படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த புல்வெளியை ஒட்டிய சாலையில் சிவப்பு டீ-ஷர்ட் அணிந்தபடி பைக்கில் வந்து கொண்டிருக்கிறது. இதோ அவள் முன்னே... அவளைக் கடந்து செல்கிறது... ''ஏய்'' எனக் கத்தியபடியே தேன்மொழி சட்டென புல்வெளியி லிருந்து சரிவாக இறங்கிய நெடுஞ்சாலை யில் குதித்து ஓடத் தொடங்கினாள். மொத்த யூனிட்டும் வேடிக்கை பார்க்க, தேன்மொழி அப்படி கூச்சலிட்டபடி ஓடியது கிரிஜாவுக்கே ஆச்சர்யம்.

இன்று காலைதான் மொத்த யூனிட் டுடன், கிரிஜா தான் எடுக்கப்போகும் தேநீர் விளம்பரத்துக்காக ஊட்டிக்கு வந்திருந்தாள். தேன்மொழி கல் லூரியில் அவளுக்கு மூன்று வருடம் ஜூனியர். என்றாலும் கற்பனையில் அவளுக்கு சீனியர். இதற்குமுன்கூட அவள் எடுத்த சிறிய விளம்பரங்களுக் கெல்லாம் கற்பனை வறட்சி ஏற் பட்டபோது தேன்மொழிக்கு ஃபோனைப் போட்டு, ''பப்பி டார்லிங், ஆஃபீஸுக்கு வந்துட்டுப் போடி செல்லம், உனக்காக மார்க் கெட்லருந்து புது கொரியன் படம் ரெண்டு வாங்கி வந்துருக்கேன்'' என அழைப்பாள். அன்று மதியம் தேன் மொழி வந்தபின் அலுவலகம் களை கட்டும். அந்த இடமே சட்டென காலேஜ் கான்டீன் போல மாறிவிடும். அடுத்த இரண்டு மணிநேரத்துக்குள் கிரிஜா கான்செப்டைச் சொல்லி தேன்மொழியின் கற்பனைக்கு சவால் விட்டு, அதன்பின் அவள் சொல்லும் காட்சிகள் மூலமாக மூளைக்குள்ளேயே ஜிங்கிள்ஸ் போட்டு, ஷாட் கம்போஸ் பண்ணி, எடிட் செய்து விளம்பரப் படத்தை மனத்தில் ஓட்டிப் பார்த்துவிடுவாள்.

அதேபோல்தான் இம்முறையும். முதன் முறையாக சற்று பெரிய பட்ஜெட்டில் மூன்று சக்கரம் என்ற பிராண்ட் தேநீருக் கான விளம்பர வாய்ப்பு வந்தவுடன், முதல் வேலையாக தேன்மொழிக்கு ஃபோனைப் போட்டாள். ஏற்கெனவே காதல் சோகத்தில் இருந்த தேன்மொழிக்கு இது கொஞ்சம் ரிலீஃபாகத் தோன்ற, கிரிஜா கூப்பிட்ட மறுநிமிடமே வந்து, ஒரே நாளில் ஒரு குறுங்கதை பின்னி, அதற்கு வசனமும்

பகல்



எழுதித் தந்துவிட்டாள். பிறகு கிரிஜாதான், 'வீட்டில் இருந்து என்ன வெட்டி முறிக்கப் போகிறாய்... வேலைதான் இல்லையே... ஷூட்டிங்கில் எனக்கு அசிஸ்டெண்டாக வொர்க் பண்ணு' என அழைத்தவுடன் மறுபேச்சில்லாமல் ஒப்புக்கொண்டாள். அவளுடைய பொறுப்பில் உடைகளும் மேக் - அப்பும் இருந்தன. இரண்டே நாளில் பாத்திரங்களுக்குத் தேவையான உடைகளை அவளே டிஸைன் செய்து தைத்துக் கொண்டு வந்தாள்.

அவளுடைய ஆர்வத்தைக் கண்டு வியந்த கிரிஜா, 'போகிற போக்கில் சீக்கிரம் எனக்குப் போட்டியா ஒரு ஏஜென்சியே

அஜயன் பாலா

ஆரம்பிச்சுடுவே போலிருக்கே' என வாய் விட்டே சொல்லிச் சிரித்தாள். அதில் கொஞ்சம் பயமும் கலந்திருந்தது.

இப்படியெல்லாம் சின்சியர் சிகாமணியாகத்தான் சற்று முன்வரை ஷூட்டிங்கிலும் வேலை பார்த்துவந்தாள்.

அப்படியிருந்தவள், ஷூட்டிங் நடந்து கொண்டிருக்க, திடீரென சாலையில் யாரையோ பார்த்துவிட்டு கூச்சல் போட்டபடி ஓடியதைப் பார்த்ததும் கிரிஜாவுக்கு ஆச்சர்யம். ப்ளஸ் கோபம். அவள் போட்டிருந்த கறுப்புக் கண்ணாடி அதை முழுவதுமாக மறைத்துக் கொண்டது.

மீன்கள்



சாலையில் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் அனைத்தும் ஒரு நிமிடம் குறுக்கே ஓடிவரும் தேன்மொழியைப் பார்த்து கிறீச்சிட்டபடி பிரேக் போட்டன.

தேன்மொழி அந்த சிவப்பு நிற டீ-ஷர்ட் அணிந்தபடி பைக் ஓட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்து கூச்சலிட்டாள். திரும்பிப்பார்த்த இரண்டொரு வரிடம் அவனைக் கூப்பிடும்படி சைகை செய்தாள்.

அதற்குள் ஒரு பேருந்து அவனை மறைத்துவிட, தேன்மொழி தளர்ந்தவளாக சாலை ஓரமாக மூச்சிறைக்க ஒதுங்கி நின்றாள்.

திரும்பி ஷூட்டிங் நடைபெற்ற இடத்துக்குத் தளர்வாக நடந்தாள். அவளுக்குள் வருத்தமோ குற்ற உணர்ச்சியோ துக்கமோ எதுவும் இல்லை.

மாறாக உடலின்

மூலாதார சக்கரத்திலிருந்து இன்பம் உடல் முழுக்க பொங்கிப் பிரவாகித்தது. அவன் சொன்னபடி இரண்டாவது முறையாகப் பார்த்துவிட்டோம். அதுதான் அவளைத் திரும்பத் திரும்ப மகிழ்ச்சியில் தள்ளிக் கொண்டிருந்தது.

கிரிஜா தோழியிடம் எதுவும் கேட்க வில்லை. வாயிலிருந்த விசிலை ஊதியபடி கைதட்டி யூனிட்டை மீண்டும் உயிர்ப்பித்தாள்.

''கமான் கமான் ஆல்ரைட்.... டேக் ரெடி... கேமரா ரெடியா... எங்க அந்தத் தாத்தா... அவரைக் கூட்டியாங்க... மனோஜ் கேமரா ஓகேவா?'' கேமராவின் அருகில் தொப்பி அணிந்திருந்த மனோஜ் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். ஷூட்டிங் மீண்டும் களைகட்டத் தொடங்கியது.

''என்னடி ஆச்சு... அப்படி பைத்தியம் பிடிச்சா மாதிரி ஓடினே...?'' உணவு பரிமாறுபவனிடம் கொஞ்சமாகப் போடும் படி சைகை செய்தபடி, எதிரே தட்டுடன் அமர்ந்திருந்திருந்த தோழியிடம் கேட்டாள் கிரிஜா.

விரிந்த வண்ணக்குடையின் கீழ் இருவரும் புல்வெளியில் நாற்காலியில் உணவுத் தட்டுடன் அமர்ந்திருக்க, ஏனையோர் அந்த மரங்கள் அடர்ந்த பங்களாவின் முன் விரிந்த புல்வெளியில் உணவருந்திக் கொண்டிருந்தனர். ஓரிடத்தில் குடையின் கீழ் கேமரா நிறுத்தப்பட்டு மஞ்சள் நிற முக்காடுடன் ஓரமாய் அனாதையாக நின்று கொண்டிருந்தது.

தேன்மொழிக்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. அருகில் ஓரமாக ஓடிக் கொண்டிருந்த சாலையை... சரிவில் இறங்கியபடி சென்று கொண்டிருந்த வாகனங்களைப் பார்த்தாள். அவளுக்கு இப்போது நன்றாக ஞாபகம் வந்தது. படப்பிடிப்பில் அடுத்த ஷாட்டுக்காக தாத்தாவை தயார்ப்படுத்தும்படி ஒப்பனைக் கலைஞர்களிடம் அறிவுறுத்திவிட்டு பங்களாவிலிருந்து வெளியே வரும்போது, காரணமே இல்லாமல் அவன் நினைவு.

எப்படி அத்தனை துல்லியமாக அந்தக் கணத்தில் அவன் முகம் ஞாபகம் வந்தது. இப்பவும் அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இத்தனை கோடி ஜனசமுத்திரத்தில் இரண்டாவது முறை அவனைக் கண்களால் பார்த்தா கூடப் போதும் என நினைத்தவள், அடுத்த மூன்றாவது நிமிடத்தில் சாலையில் தன் கண்ணெதிரே அவனைக் காண்போம் எனத் துளியும் எதிர்பார்க்கவில்லை.

''ஹலோ மேடம் சாம்பார் ஊத்தட்டுமா?''

''ம்ம்ம்...'' நிமிர்ந்தபோது, கிரிஜா அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''ஸாரி அக்கா... என்ன கேட்டீங்க?''

கிரிஜா தன் கைகளைப் பூந்துவாலை



வளர்பிறை போல
ஓசையின்றி விரியும்
உன் புன்னகை
வாடாது எப்போதும்
மலர்ந்திருக்க வேண்டும்
இச்சிறு முகை

-கார்த்திகா

யால் துடைத்துவிட்டு ப்ரொடக்ஷன் பாயிடம் தந்தாள்.

''அச்சச்சோ நீங்க சாப்பிட்டாச்சா?''

''ஒண்ணும் அவசரமில்ல... செல்லம் பொறுமையா சாப்பிடு.''

தேன்மொழி அவசர அவசரமாக சாப் பிடத்துவங்க, கிரிஜா அவளைப் பார்த்த படியே,

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டேல்ல. ஷூட்டிங்குக்கு வந்துட்டா நாம போருக்கு வந்திருக்கற மாதிரி. இங்க அத்தனை கவனமா இருக் கணும். காலையிலருந்து என் ஹஸ்பண்ட் மூணுதடவை கால் பண்ணிட்டார். நான் எடுக்கவே இல்லை. இங்க ஒரு நிமிஷம் செலவான ஒரு லட்சம் செலவாகிற மாதிரி. தனிப்பிரச்னையெல்லாமே பேக்-அப்னு சொல்ற அந்த ஒரு வார்த்தைக்கப்புறம்தான் வரணும். நீபாட்டுக்குப் பைத்தியம் புடிச்சா மாதிரி பாதி ஷூட்டிங்ல இறங்கி ரோட்ல ஓடற. தப்பித் தவறி ஏதாவது ஆச்சுன்னா என்ன பண்ண முடியும்... இப்ப சொல்லு எதுக்காக அப்படி ஓடினே...?''

தேன்மொழி கண்களை மூடி பில் கிளிண்டன் டைப்பில் இரு உதட்டையும் நன்கு இறுக்கி... ''ச்சும்மா'' எனச் சிரித் தாள்.

மாலை ஐந்து மணிக்கு, கடைசி ஷாட் எடுப்பதற்குள் வாகனங்கள் தயாராக வரிசை கட்டின. இன்றே புறப்பட்டாக வேண்டும். 7.30க்கு ப்ளூ மவுண்டன் எக்ஸ்பிரஸ், மேட்டுப்பாளையத்தில். அனைவரும் பரபரப்பாக இருந்தனர். கடைசி ஷாட்டில் பாட்டி 'ஆகா அருமை' என ஒரு வார்த்தை சொல்லி கணவரைப் பார்க்கவேண்டும். அந்த டீயின் சுவை மூலம் அவளது பத்து வருட கணவன் மீதான கோபம் காணாமல் போவதாக கான்செப்ட். ஆனால் அந்த அறுபது வய தில் பாட்டியாக நடித்தவரின் கண்களுக் குள் காதல் வரவில்லை.

கிரிஜா போராடிப் பார்த்தாள். ஐந்து டேக் போய்விட்டது. கார்கள் வேறு தயாராக அணிவகுத்துக் காத்துக்கொண்டி ருந்தன. மொத்தப் படக்குழுவும் டென் ஷனில்.

தேன்மொழி அந்த அம் மாவிடம் சென்று காதில் எதையோ சொல்லிவிட்டு கேமராமேனுக்கு சைகை செய்தாள். கிரிஜாவுக்கு நம் பிக்கை இல்லை. ஆனாலும்



'**வீ**டுகள் என்கிற அறைகள்' என்ற கவிதைத் தொகுப்புக்கு சொந்தக்காரர் பாக்கியம் சங்கர் (பாக்கியம் அவர் அம்மாவின் பெயர்). இணை இயக்குந ராக கோலிவுட்டில் நுழைந் திருப்பவரைக் கேட்டால்... ''அழகு என்கிற அந்த ஒற்றைச் சொல் எல்லா பாடுகளையும் முடித்து அயர்ந்துறங்கும் நம் அம்மாக்களின் குழந்தை மையின் குதூகலத்துக்கு சொந்தமானது. திருநங்கைகளின் நடை பெண்களைவிட அழகு. பராரிகளின் ராத்திரி பௌர்ணமியை விட அழகு. அழகெனப்படுவது ஆண்மையின் அகஒளியும்'' என்கிறார்.

- சசி

கடுப்புடன், ''ஸ்டார்ட்'' என்றாள். கேமரா கிர்ரென சப்தமெழுப்பியது. 13 பை 6 கிளாப் தட்டப்பட்டது... ''ஆக்ஷன்.''

பாட்டியின் கண்களில் வந்த காதலைக் கண்டு ஒட்டுமொத்த யூனிட்டும் க்ளாப் செய்ய, கிரிஜா ''பேக்-அப்'' எனக் கூறிய படி உற்சாகத்துடன் தேன்மொழியை

ஓடிவந்து கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். "என்னடி சொன்ன பாட்டிகிட்ட...?"

கார் மேட்டுப்பாளையத்துக்காக சரிவில் இறங்கிக்கொண்டிருந்தது. கிரிஜா லேப்டாப்பில் கணக்கில் மூழ்கிக் கொண்டிருக்க, பின் சீட்டில் தேன்மொழி ஜன்னல் வழியாகக் கடந்து செல்லும் மரங்களினூடே பார்வையை ஓட விட்டபடி, இன்று தன் வாழ்வில் நடந்த அதிசயத்தை முழுமையாக உள்வாங்கி மகிழ்ச்சியில் திளைத்தாள். காலையில் அத்தனை ஓடி அவனைத் தவற விட்டது அவளுக்குக் கவலை அளிக்கவில்லை. மாறாக, அவனைப் பார்த்த அந்தக் கணம்தான் அவளுக்கு மீண்டும் மீண்டும் வியப்பை அளித்தது. இனி அவனைப் பார்க்காமலே போனால் கூடக் கவலையில்லை. தானாக அவன் தன்னைத் தேடி ஒருநாள் வீட்டுக் கதவையே தட்டி ஆச்சர்யப்படுத்துவான். அவள் உறுதியாக நம்பினாள்.



சட்டென அவசர அவசரமாக பர்ஸை எடுத்து அதில் ஐநூற்று அறுபது ரூபாயைத் தனியாக எடுத்து கர்ச்சிப்பில் ஒரு மூட்டையாக முடிந்து கொண்டாள். அன்று அவன் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

இத்தனை கோடி ஜனசமுத்திரத்தில் இரண்டாவது முறை அவளைக் கண்களால் பார்த்தால்கூடப் போதும்!

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் காத்திருந்த சூர்யா, வாட்ச்சைப் பார்த்தான். மணி 7.15. இந்நேரம் அவர்கள் வந்திருக்கவேண்டுமே? இன்னும் ஏன் வரவில்லை? ஒருவேளை அந்த மேனேஜர் கொடுத்த தகவல் தவறா?

அவள் வந்தால் இப்படித்தான் வர வேண்டும். வந்தபின் சட்டென அவசர அவசரமாகச் செல்பவனைப் போல நடிக்கவேண்டும். சூர்யா தன் நாடகத்தின் அடுத்த காட்சிக்காகத் தயாராகக் காத்திருந்தான். இம்முறை திட்டப்படி சரியாக நடந்தால், அவள் தன்னைக் கண்டதும் கண்ணீருடன் கட்டிப்பிடிக்கவேண்டும். அதன் பிறகு அவள் தன் பெயரையும் ஃபோன் நம்பரையும் கேட்கும் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கொடுப்பதற்காக விசிட்டிங் கார்டையும் தயாராக எடுத்து வைத்துக் கொண்டான்.



ஸ்டேஷன் வாசலில் ஐந்தாறு கார்கள் வரிசையாக வந்து நிற்க, அதிலிருந்து தேன்மொழியும் கிரிஜாவும் இறங்குவதைப் பார்த்த சூர்யாவின் மூளை திடீர்ப் பரபரப்புக்குள்ளானது. குறுக்கும் நெடுக்குமாகப் பலர் வந்து கொண்டிருக்க, சூர்யா தன் சரியான தருணத்துக்காக அவள் வரும் திசைக்கு எதிரே, அவளது பெட்டியின் அருகே, ஓட்டப்பந்தய வீரனைப் போல முழு கவனத்துடன் காத்திருந்தான்.

அதோ... தேன்மொழி, கிரிஜாவுக்குப் பின்னால். அவசரமாக நடமாடிக் கொண்டிருந்த கூட்டத்தின் நடுவே, சட்டென சூர்யா கூட்டத்தைப் பிளந்துகொண்டு தேன்மொழியை நோக்கி விரைந்தான்.

(மீன்கள் துள்ளும்)

எம்.ஜி.ஆரின் நினைவு நாள் (24.12.09) மற்றும் ராஜாஜி யின் நினைவு நாளை (25.12.09) யொட்டி...



அன்பால் அமைந்த தாய் வீடு!

1952ல் லாயிட்ஸ் சாலையில் ஒரு வீடு காலியாக இருப்பதை அறிந்த சக்ர பாணி, அவ்வீட்டின் உரிமையாளர் ஏ.வி.ராமனை அணுகியுள்ளார். நடிகர் களுக்கு வீடு தருவதில்லை என்று மறுத்துவிட்டார், ராஜாஜியின் நெருங்கிய நண்பராக விளங்கிய ஏ.வி.ராமன். எம்.ஜி.ஆருக்கு வீடு மிகவும் பிடித்துப் போகவே ராஜாஜியை ஒருமுறை காணச் சென்றபோது அவ்வீடு பற்றிக் குறிப்பிட் டுள்ளார். ராஜாஜி எம்.ஜி.ஆரது நாடகங் கள் பலவற்றைப் பார்த்து ரசித்தவர். எம்.ஜி.ஆர். மீதும், சக்ரபாணி மீதும் அவருக்கு நல்ல அபிமானம் இருந் தது. உடனடியாக ஏ.வி.ராமனைத் தொடர்பு கொண்டு, "தாராளமாக அவர் களுக்கு வீட்டைத் தரலாம். இருவரும் ராம லக்ஷ்மணர்கள் மாதிரி" என்று கூறிய பின்பு மறுப்பு சொல்லவில்லை ஏ.வி.ராமன். பின் னாளில் எம்.ஜி.ஆர். அவ்வீட்டைச் சொந்த மாக வாங்க நினைத்தபோது, ஏ.வி.ராமனின் மகன் வி.பி.ராமன், தம் நண்பர் எம்.ஜி.ஆர் மீதுள்ள அன்பின் காரணமாக குறைந்த விலைக்கு வீட்டை ஒப்படைத்தார். 'தாய் வீடு' என்ற பெயருடன் விளங்கியது அவ் வீடுதான்!

தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். நீக்கப் பட்டபோது, அதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார் ராஜாஜி. அறிக்கையைக் கண்டு நெகிழ்ந்த எம்.ஜி.ஆர்., கட்சி முக்கியஸ்தர்களுடன் சென்னை கோபதி நாரா யண சாலைக்கு அருகேயுள்ள ராஜாஜி வீட்டுக்குச் சென்றார். எம்.ஜி.ஆருடன் நானும் சென் றேன். ராஜாஜி தாமே அவரை வரவேற்க வாசலுக்கு விரைந் தார். தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டது குறித்து சிறிது நேரம் எம்.ஜி.ஆரிடம் பேசினார். ராஜாஜி கூறிய தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இன்னும் எனது காதுகளில் ஒலித்துக் கொண் டிருக்கின்றன. "இந்த தர்மயுத்தத்தில் நீங்கள் வெற்றி பெறுவதை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது. தீமை செய்யும் நண்பர் களை எதிர்த்துப் போராடும் உங் களையும், உங்களது ஆதரவாளர் களையும் நான் பாராட்டுகின் றேன்" என்று கூறினார். ராஜாஜி யின் பாராட்டுதலையும், வாழ்த்து களையும் கேட்டு மனம் உருகி நன்றி கூறினார் எம்.ஜி.ஆர்.

✱ ஆர்.கோவிந்தராஜ்




தொகுப்பு: **ஆர்.கோவிந்தராஜ்,**
எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர்

அவர்களுக்கு இது அழகு!

அழகுணர்ச்சிக்கு ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்று பேதங்கள் இல்லை. வளர்ந்த நாடுகள், பின்தங்கிய நாடுகள் என்று வித்தியாசங்கள் இல்லை. எது அழகு என்பதில்தான் வித்தியாசங்கள் இருக்கின்றன.

ஆப்பிரிக்காவில் உள்ள மொரிடானியாவில் குண்டான பெண்களையே அழகு என்று ஒப்புக்கொள்கிறார்கள். உடல்நலனை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு பல இளம் பெண்கள் பெருத்துக் கொண்டே போகிறார்கள் என்று அங்குள்ள ஊடகங்கள் கவலைப்படுகின்றன.





வடக்கு நமீபியாவில் வசிக்கும் ஹிம்பா என்னும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்கள், தங்கள் தோலின் நிறத்தை அவ்வப்போது மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். வெண்ணெய், சாம்பல் ஆகியவற்றைச் சில வகை மூலிகைகளோடு சேர்த்து, செம்பழுப்பு நிறப் பசையை உருவாக்கி மேனியெங்கும் பூசிக்கொள்கிறார்கள். நிற மாற்றத்துக்குக் காரணம், சிவப்புத் தோல் மீது கொண்ட காதல் அல்ல; காட்டில், மேட்டில் அலைந்து திரிந்து பணியாற்றுவதற்கு இந்தச் சாயம் தடுப்பரணாகப் பயன்படும் என்பதுதான்.

சாயத்தின் பழுப்பு நிறம் மண்ணைக் குறிக்கிறது என்கிறார்கள். இந்தப் பசையைக்

கொண்டு தங்கள் கேசத்துக்கும் வர்ணம் சேர்த்துக்கொள்கிறார்கள். இதையே அழகு என்றும் அவர்கள் அழைக்கிறார்கள். ஆப்பிரிக்க இனக்குழுக்களில் அழகான பெண்கள் ஹிம்பா இனத்தைச் சேர்ந்தவர்கள்தாம் என்பது ஆப்பிரிக்கர்களின் கணிப்பும்கூட.

எத்தியோப்பியப் பகுதிகளில் வாழும் முர்ஸி இன மக்கள், தனித்துவமாக தங்களை அலங்கரித்துக்கொள்கிறார்கள். மிக முக்கியமானது, லிப் பிளேட் எனப்படும் உதட்டு வளையம். மரம் அல்லது களிமண்ணால் செய்யப்பட்ட வளையம் இது.

மேற்புற அல்லது கீழ்ப்புற உதடுகளில் முதலில் ஓட்டை போடுவார்கள். பிறகு





உதட்டு வளையத்தை அந்த ஓட்டைக்குள் வைத்து அழுத்துவார்கள். ஓட்டைக்குள் வளையம் நன்றாக உட்கார்ந்துவிடும். நாளடைவில், வளையத்துக்கு ஏற்றாற்போல் உதடுகள் வளைய ஆரம்பிக்கும். உண்பதற்கு முதலில் கொஞ்சம் கடினமாக இருந்தாலும், பின்னர் பழக்கமாகிவிடும்.

சாரா, லோப வகைப் பெண்கள் வளையத்தோடு சேர்த்து தட்டையும் உதடுகளில் பொருத்திக்கொண்டு விடுவார்கள். உதட்டில் தொங்கும் தட்டு பெரிதாக இருந்தால் சமூகத்தில் அவர் மீதான மரியாதையும் பெரிதாக இருக்கும். சின்ன தட்டுக்கு, சின்ன வளையத்துக்கு அதற்கேற்ற அங்கீகாரம்.

உடலில் படங்கள் வரைந்துகொள்ளும் வழக்கம் ஆப்பிரிக்கர்களிடையே நீண்டகாலமாக இருந்துவருகிறது. ஆடை அணிவதைப் போல் உடல் முழுவதும் வண்ணப் படங்களை ஆப்பிரிக்கப் பெண்கள் வரைந்து கொள்கிறார்கள்.

சில ஆப்பிரிக்கப் பெண்கள் புதிதாகப் பிறந்த தங்கள் குழந்தையின் முகத்தில் அல்லது உடலில் சில வெட்டுக் காயங்களை ஏற்படுத்தி அழகு செய்கிறார்கள். கண்கள் குருடாவதை இந்த வெட்டு தடுக்கும் என்பது அவர்கள் நம்பிக்கை.

பல ஆப்பிரிக்கப் பெண்கள் கழுத்தில் வளையங்கள் மாட்டிக்கொள்வதை முக்கியமாகக் கருதுகிறார்கள். கழுத்தை நீளமாக்க சிறு வயதில் இருந்தே உலோக வளையங்கள் பலவற்றைக் கழுத்தில் மாட்டிவிடுவார்கள். தாய்லாந்திலும் ஆசியாவில் வேறு பல பகுதிகளிலும்கூட இந்த வழக்கம் உள்ளது. நீண்ட கழுத்து கொண்டிருப்பது அழகு என்று இவர்கள் கருதுகிறார்கள். நிஜத்தில் இதன் மூலம் கழுத்து விரிவடைவதில்லை என்பது வேறு விஷயம். ●




மேக்கப் & டயலாக்ஸ்: கோபுலு





பியூட்டி பார்லர்
"இந்த திருஷ்டிப் பரிகாரப்
பூசணிக்காயை
வாசல்லே யார் வைச்சது?..."
ஆஹா... ஹா!
"நம்ம அழகிப் போட்டிக்கு மாடர்னா
ஒரு படம் வரையச் சொல்லிக் கேட்டேன்!"

எழில் மலைப் பயணம்

தேவதாரு காடுகளின் தேவதைகள்!





செய்தி, சித்திரம் : ரமணன்

பசுமையான மரங்கள் அடர்ந்து பரவியிருக்கும் அந்த மலைச்சரிவுகளுக்கிடையே மரகதப்பச்சை வண்ணத்தில் அமைதியாக அழகாகப் பரந்து விரிந்திருக்கும் நைனிதால் ஏரியும், அதன் மீது அமர்வதற்காக மெல்ல மிதந்து கொண்டிருக்கும் வெண்பனி மேகக் கூட்டங்கள், அழகான வண்ணப் பாய்மரப் படகுகளை மறைத்தும், காட்டியும் ஆடும் கண்ணாமூச்சி ஆட்டமும் மிக அழகு. நைனா தேவி கோயிலின் அர்ச்சகர் சொன்னதுபோல நைனிதால் ஏரி ஒரு கண் வடிவிலிருப்பது புரிகிறது. ''இது மற்ற இந்திய கோடை வாசஸ்தலம் போல பிரிட்டிஷ்காரர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தப் பகுதி முழுவதும் இந்து மதப் புராணங்களுடன் சம்பந்தப்பட்டது. தம் கட்டளையை மீறிப் போன தாட்சாயணியை சிவன் தண்டித்தபோது பார்வதி தேவியின் கண் பூமியில் விழுந்த இடம் இந்த ஏரி. அதனால் தான் நைனிதால் எனப் பெயர். (ஹிந்தியில் நைன் என்றால் கண்: டால் என்பது ஏரி) 100 மைல் தூரத்தில் ஆதி ஜோதிலிங்கமிருக்கிறது. போய்ப் பாருங்களேன்'' என்று அந்த அர்ச்சகர் சொன்னதைத் தொடர்ந்து சேகரித்த தகவல்களில் புரிந்துகொண்ட விஷயம்: உத்தரப்பிரதேசத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட உத்திராஞ்சல் மாநிலத்தில் உள்ள இந்த மலைப் பகுதி, ஒரு சுற்றுலாத் தலம் மட்டுமல்ல; புராதன புண்ணிய பூமி.

பன்னிரண்டு ஜோதிலிங்கங்களுள் ஒன்றான ஜோகேஷ்வரை தரிசிக்கப் போய்க் கொண்டிருக்



கிறோம். ஒரு மாநிலத் தலைநகர் என்ற எந்த பந்தாவும் இல்லாத அந்த சின்னஞ்சிறிய ஊரின் நடுவே இருக்கும் நைனிதால் ஏரியின் கரையில் ஒருபுறம்தான் சாலை. அது மக்கள் நடக்க மட்டுமே. ரிக்ஷாவுக்கு க்யூவில் நின்று டோக்கன் வாங்க வேண்டும். ப்ரீ பெய்டு சைக்கிள் ரிக்ஷாக்கள்!



✱ கண் வடிவில் நைனிடால் ஏரி...

இந்தியாவில் பார்க்க முடியாத பலவிதமான கோயில்கள். அதில் சிட்டை என்ற இடத்திலிருக்கும் கொலுதேவதா கோயில் வித்தியாசமாக இருக்கிறது. நுழைவாயில், பாதை, மேற்கூரை, கோயிலின் தூண்கள், மரங்கள் என்று எங்கு பார்த்தாலும் பெரிய, சிறிய மணிகள் கொத்துக்கொத்தாகத் தொங்குகின்றன. விசாரித்ததில் நீதி தேவதையான அந்த தேவியிடம் வழக்கு விவகாரங்கள், வசூலிக்க முடியாத கடன், நிறைவேறாத ஒப்பந்தங்கள் போன்றவற்றின் நகலுடன் ஒரு சிறிய மணியை இணைத்துக் கட்டுகிறார்கள். வேண்டுதல் நிறைவேறியதும் பெரிய மணி கட்டுவதாக வேண்டிக் கொள்கிறார்கள். அதிக அளவில் கட்டப்பட்டிருக்கும் பெரிய மணிகளின் எண்ணிக்கையிலிருந்து கோயிலின் கூட்டத்துக்கான காரணம் புரிகிறது. இந்தக் கோயிலினால், நீதிமன்றத்துக்கு வெளியே முடிக்கப்படும் வழக்குகள் அதிகமாகியிருக்கின்றனவாம்.



இந்தக் கோயிலினால் நீதிமன்றத்துக்கு வெளியே முடிக்கப்படும் வழக்குகள் அதிகமாகியிருக்கின்றனவாம்!

பல சரிவுகளையும் ஏற்றங்களையும் கொண்ட அந்த முப்பத்தைந்து கி.மீ மலைச்சாலையைக் கடக்க இரண்டு மணி நேரத்துக்கு மேலாகிறது. சந்தனக் காடுகளுக்கே உள்ள மணம் நாசியைத் தாக்குகிறது. ஓங்கி வளர்ந்திருக்கும் தேவதாரு மரங்களும், குளிர் காற்றும், இது தெய்வங்களும், தேவதைகளும் உலவத் தகுந்த இடம்தான் எனத் தோன்றச் செய்கின்றன.

இங்கிருந்து ஜோகேஷ்வர் வளாகம்





துவங்குகிறது என்று தொல்பொருள் துறையினரின் அறிவிப்புடன் நம்மை வரவேற்கிறது செக்போஸ்ட்.

சட்டென்று திரும்பிய ஒரு திருப்பத்தின் பள்ளத்தாக்கில் பசுமையான தேவதாரு மரங்களின் பின்னணியில் சிறிதும், பெரிதுமாக கும்பலாகப் பல கோயில்கள். சதுரமான கீழ்ப் பகுதியாகத் தொடங்கி, நுழைவாயிலைத் தவிர வேறு எந்தத் திறப்போ மாடமோ இல்லாமல் இறுக்கி அடுக்கிய கல்கோட்டையாக உயர்ந்து கோபுரமாகக் குவிந்த உச்சியின் மீது மரத்தால் செய்த சிறிய மண்டபத்தைத் தொப்பியாக அணிந்திருக்கும் பெரிய கோயில். அதே வடிவத்தில், வேகமாக நடந்தால் இடித்துக் கொள்ளுமளவுக்கு நெருக்கமாகப் பல குட்டிக் கோயில்கள். (நூற்றுக்கும் மேலிருக்கும்!) கோயில் தொல்பொருள் சின்னம் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் பூஜைகள் உண்டு. பிரதான கோயிலில் ஜோகேஷ்வர் சுயம்புவாக எழுந்த லிங்கம். தரையிலிருந்து இரண்டு அடி உயரமிருக்கும் மூர்த்தியைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் பக்தர்கள் பொறுமையுடன் கர்ப்பக்கிரகத்தில் உட்கார்ந்திருக்க, பளபளக்கும் ஆரஞ்சு வண்ண உடையில் அர்ச்சகர் வந்தமர்கிறார். பாலில் தோய்த்த அரிசி, தேவதாரு இலைகளுடன் அரளிப்பூ எல்லோருக்கும் தருகிறார். பூஜைக்குக் கட்டணம், வி.ஐ.பி. தரிசனம் எதுவும் கிடையாது. நம் அருகில் அமர்ந்து பூஜை செய்தவர் உயர்நீதி மன்ற நீதிபதி என்பதை, வெளியில் வந்த பின் அவருக்குள்ள பாதுகாப்பைப் பார்த்த பின்தான் தெரிந்துகொள்கிறோம்.

அருகில் ஒரு சின்னக் குன்றின் மேல் குபேரனுக்கு ஒரு கோயில். மூர்த்தி, லிங்க வடிவிலிருக்கிறார். வாயிலில் 'வேண்டியவர்களுக்கு செல்வம் வந்து சேரும்' என எழுதப்பட்ட வாசகங்கள். அருகிலுள்ள ஜோகேஷ்வருக்கு அவ்வளவு கூட்டமிருந்தும் ஏன் இங்கு அதிகமில்லை என்ற நமது கேள்விக்கு அந்த அர்ச்சகர் தந்த பதில் பற்றிச் சிந்தித்துக்கொண்டே, நைனிதாலுக்குத் திரும்பும் பயணத்தைத் தொடங்குகிறோம். வேடிக்கைக்காகச் சொன்னதோ அல்லது வேதனையில் சொன்னதோ, நம்மைச் சிந்திக்க வைத்த அந்த வார்த்தைகள்:

'செல்வம் சேர்ந்தால் பிரச்னைகள் வரும். பிரச்னைகளினால் வேதனை உண்டாகும் என்பதால், தேடிப்போய் வேண்டி வேதனையை வாங்கிக் கொள்வானேன் என்று பலர் நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.'

○



துலாம்: குருபகவான் 4ம் இடத்திலிருந்து 5ம் இடம் என்று சொல்லக்கூடிய பூர்வபுண்ணிய ஸ்தானம், புத்திர ஸ்தானத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். இதனால் எடுக்கும் காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். எண்ணிய காரியங்கள் ஈடேறும். திருமண காரியம் நிறைவேறும். புதிய தொழில் தொடங்க ஏற்ற காலம். திடீர் தனயோகம் ஏற்படும். பூர்விக வழியில் சொத்து பாகப்பிரிவினை ஆகி வந்து சேரும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். நண்பர் / உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வெளிநாட்டுப் பயணம் செல்ல நேரிடும். அரசியல்வாதிகளுக்கு நல்ல காலம். ஏற்றுமதி, இறக்குமதித் தொழில், கட்டிடத் தொழில், டெக்ஸ்டைல், அச்சுத்துறை, பத்திரிகைத் தொழில் சிறந்து விளங்கும். சமூக சேவகர்கள் பரிசுகளைப் பெறுவார்கள். பெண்களுக்கு நற்பெயர் கிட்டும். மாணவ / மாணவிகளுக்கு வசந்த காலம் என்று சொல்லலாம். சினிமா கலைஞர்களுக்கு விருதுகள் வந்துசேரும். விளையாட்டுத் துறையினர்க்கு நல்ல பெயர் ஏற்படும். அரசாங்க உத்யோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிட்டும்.

விருச்சிகம்: குரு பகவான் 3ம் இடத்திலிருந்து 4ம் இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். இதனால் சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். புதிய வேலைக்குப் போகும் வாய்ப்பு வந்து சேரும். சிலருக்கு சொந்த வீட்டை வாடகைக்கு விட்டு வேறு வீடு செல்ல நேரிடும். உடல் ஆரோக்கியம் சீராகும். தாய்வழி சொத்துகள் கிட்டும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். புதிய கல்வி பயிலும் வாய்ப்பு வந்து சேரும். நெருங்கிய கூட்டாளிகளை விட்டு தூரம் செல்வீர்கள். வழக்கு வெற்றி பெறும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு ஏற்படும். சுபவிரயங்கள் ஏற்படும். திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம்.

தஞ்சை பரத்வாஜ்

ஏக காலத்தில் பல தொழில்கள் செய்து சம்பாதிக்க நேரிடும். மனசஞ்சலம் தீரும். அரசியல்வாதிகளுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும். சமூக ஆர்வலர்களுக்கு நற்பெயர் ஏற்படும். இல்லத்தரசிகளுக்குக் கடுமையான உழைப்பினால் உடல் ஆரோக்கியம் பாதிக்கும். வயதானவர்களின் ஆரோக்கியத்தில் கவனத்துடன் இருப்பது நல்லது. ஏற்றுமதித் தொழிலில் பன்மடங்கு லாபம் வரும். வியாழன் தோறும் குரு ப்ரீத்தி செய்து வருதல் சங்கடங்களைத் தீர்க்கும்.

தனுசு : குரு பகவான் 2ம் இடத்திலிருந்து 3ம் இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். இந்தப் பெயர்ச்சி மனத்தில் தைரியத்தையும், வெற்றியையும் அளிக்கும். உடன் பிறப்புகளால் ஆதாயம் கிட்டும். மனசஞ்சலம் தீரும். தனபாக்கியம் கிட்டும். மனைவி வழியில் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் வருவாய் பெருகும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி கிட்டும். திருமணத் தடை விலகும். அநாவசியமான செலவுகள் தவிர்க்கப்படும். புதிய தொழில் முயற்சி கைகூடும். மாணவ / மாணவியர் கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். பெண்கள் கணவருடன் அனுசரித்துப் போவார்கள். வேலையில் இருந்து வந்த டென்ஷன் விலகும். உடல் ஆரோக்கியம் சீராகும். வீடு / மனை வாங்க ஏற்ற தருணம். அச்சுத்துறை, புகைப்படம், இரும்பு ஏற்றுமதி, இறக்குமதித் தொழிலில் நல்ல வருவாய் கிட்டும். கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். சினிமா கலைஞர்களுக்கு ஏற்றமிகு காலம். குரு 11ம் இடத்தைப் பார்ப்பதால் தொழில் துறையில் வருவாய் பெருகும். இந்த குரு பெயர்ச்சியை உங்களுக்கு வசந்த குரு என்று சொல்லலாம். பரிகாரம் தேவையில்லை.

மகரம்: குரு பகவான் ஜென்ம ராசிக்கு 2ம் இடம் என்று சொல்லக்கூடிய தனம், வாக்கு, கல்வி, குடும்ப ஸ்தானத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். இது ஒரு அற்புதமான இடம். பொருளாதார ரீதியிலான கஷ்டம் தீரும். சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் பெருகும். வாக்குவன்மை, கல்வி வளம் மேலோங்கும். வம்பு வழக்குப் பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் ரீதியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவர். பெண்களுக்கு நற்பெயர் ஏற்படும். கணவன் - மனைவியிடையே நல்ல உறவு நீடிக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். உற்றார் உறவினர்கள் வழியில் அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கவும், வீடு, மனை வாங்கவும் ஏற்ற காலம். அரசியல்வாதிகள் நல்ல செல்வாக்கைப் பெறுவார்கள். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். விவசாயத்தில் நல்ல மகசூல் ஏற்படும். இரும்பு, இயந்திரத் தொழில், கட்டிடம், ரியல் எஸ்டேட் தொழில்களில் நல்ல வருவாய்

குருபெயர்ச்சி பலன்கள்

19.12.2009 முதல் 18.12.2010 வரை

கிட்டும். வயதானவர்களின் உடல் ஆரோக்கியம் சீராகும். பரிகாரம் தேவையில்லை.

கும்பம்: குரு பகவான் ஜென்ம ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். இதனால் இது வரை இருந்து வந்த அனாவசியமான செலவுகளிலிருந்து மீள்வீர்கள். பணம், காசு கையில் கொஞ்சம் சேர்த்து வைக்க முடியும். திருமணம் கைகூடும். குழந்தைகளால் மனக் கவலை தீரும். தந்தையின் ஆரோக்கியம் சீராகும். திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். குலதெய்வப் பிரார்த்தனை நிறைவேறும். கடன் பிரச்னையிலிருந்து விடுதலை கிட்டும். சொத்து வாங்கும் யோகம் கிட்டும். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்குச் செல்வீர்கள். நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். வராத நிலுவைகள் வந்து சேரும். மேல் நாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதித் துறையில் லாபம் வரும். ரியல் எஸ்டேட், பங்கு மார்க்கெட் வளர்ச்சி காணும். அச்சுத் துறை, இயந்திரத் துறையில் ஏற்றம் உண்டாகும். கடல்கடந்த வியாபாரம் நல்ல வருவாய் கொடுக்கும். பரிகாரம் தேவையில்லை.



"குரு பெயர்ச்சி பலன் என் ராசிக்கு 40%தான் போட்டிருக்கு. உன் ராசிக்கு 80% போட்டிருக்குதே!"

"நீ குரு பகவான்கிட்டே வேணும்னா ரீவேல்யூஷனுக்கு அப்ளை பண்ணிப் பாரேன்!"

- நாஞ்சில் சு.நாகராஜன்

மீனம்: குரு பகவான் 12ம் இடமான விரய ஸ்தானத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். விரய ஸ்தானம் என்றால் சுப விரயம் என்றே சொல்லலாம். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். திருமணம் நிறைவேறும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். கடன் பிரச்னை தீரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மனசஞ்சலம் தீரும். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவர். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். சிலருக்கு ஊதிய உயர்வு, வேலையில் இடமாற்றமும் ஏற்படும். மேல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். பெண்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். சமூக ஆர்வலர்களுக்குப் பாராட்டு கிட்டும். அரசியல்வாதிகள் வம்பு வழக்கிலிருந்து விடுபடுவர். இழந்த பதவியைத் திரும்பப் பெறுவார்கள். சினிமா கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். விளையாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கிட்டும். கட்டிடத் தொழில் சிறந்து விளங்கும். அச்சு, புகைப்படம், விவசா யம் சார்ந்த தொழில்கள் ஏற்றம் காணும். ஏற்றுமதித் தொழிலில் நல்ல வருவாய் கிட்டும். பரிகாரங்கள் அவசியமில்லை.

24 கேரட் ஜொலிப்ப!

ப்யூட்டி சீக்ரெட்ஸ்



கரகரப்பான உப்பையும், சற்றே கொரகொரப்பான சர்க்கரையையும் ஒண்ணா சேர்த்து எண்ணெயோடோ அல்லது தண்ணீரோடோ லேசா ஒரு கலக்கு கலக்கி முகத்துக்கு அப்படியே பேக் மாதிரி போட்டுக்கிட்டா போதும், கலக்கலான பளிச் பரிமளா ரேஞ்ச் முகத்துக்கு நிச்சயம் கியாரண்டி என இன்டர்நெட் உலகம் ஒரு இன்ஸ்டன்ட் அழகுக் குறிப்பை எடுத்து விடுகிறது. (சர்க்கரை எத்தனை நேரம் முகத்தில் இருக்க வேண்டும் என்பது அவரவர்கள் தங்களது முகத்துக்கு காட்டும் அக்கறையைப் பொறுத்துங்கோ!)

க்ளியோபாட்ராவைப் பற்றி ஆராய்ச்சி செய்த நூல்கள் அவரது அழகு ரகசியத்தைச் சொல்கின்றன. அது வேற ஒண்ணுமில்லீங்க... தினமும் நீங்க குளிக்கிற தண்ணீரல தாராளமா ரெண்டு அல்லது நாலு டம்ளர் பாலையும் கலந்து நீராடினா, உங்க சருமம் மென்மையாவும், வெண்மையாவும் மாறிடுமாம்.

Caratதான் விலை ஏறிக்கிட்டே போகுதேன்னு கவலைப்பட்டே உங்க முகத்துல ஏகப்பட்ட வரிகளா? கவலையை விடுங்க உங்களின் வரிக்கு வழிசொல்ல carrot வைத்தியம் கை வசம் இருக்கு... காலாற நடந்துபோய் கால் கிலோ கேரட் வாங்கி நல்லா வேக வெச்சு, தேனோடு சேர்த்து அரைச்சு முகத்துல தடவினா போதும், தங்கம் போல டாலடிக்கும் முகம்...

கண் விழி கருமையா இருந்தா, அது அழகோட ப்ளஸ் பாயிண்ட். அதே மை கொஞ்சம் இடம் மாறி தடம் மாறி கண்ணுக்குக் கீழ வங்கக் கடல்ல மையம் கொண்டுள்ள புயல் சின்னம் மாதிரி நகராம அங்கேயே உட்கார்ந்தா, அது ரொம்ப மைனஸ். தினம் ராத்திரி தூங்கப் போவதற்கு முன் பன்னீரல நனைச்ச கர்ச்சீஃபால உங்க கண்களுக்குக் கீழ ஒத்தடம் கொடுங்க... அப்புறம் எல்லார் கண்ணும் உங்க மேலதான்! அம்மாகிட்ட சொல்லி தினமும் கை வலிக்க திருஷ்டிதான் சுத்திப் போடணும்!

— வ்யாக்யா

ஓரே குழிகளும் சகதியுமான வழித்தடங்கள். சன்னமாய்த் தூறிக் கொண்டிருந்தது மழை. தலையில் சும்மாடு வைத்து அதன்மேல் நாற்றுக்கட்டை வைத்துப் பிடித்திருந்தாள் நல்லம்மாள். ஈர நாற்றுக்களிலிருந்து சரம்சரமாய் வடிந்த நீர் அவள் தலையைக் குளிப்பாட்டி உடலையும் நனைத்திருந்தது. வேகவேக ஓட்டமாய் கொண்டுவந்து வேதாச்சலத்தின் வயல் வரப்பை மிதித்தாள். அவளுக்கு முக்கால் கிழடுக்குமேல் வயசாகி தேகத்தில் தெம்பில்லாமல் தசைகள் சுருக்கமடித்துக் கிடந்தன. நடுவைக் காலத்தில் நாலு காசுகள் பார்த்துக் கொண்டால்தான், வேலையின்றி வீட்டில் கிடக்கிற நாட்களில் அரை வயிற்றுக்காவது கஞ்சி காய்த்துக் குடித்துக் கொள்ள, முடியுமென்றிருந்தது.

புல்தரையில் நீர் கட்டிச் சதசதத்துக் கிடந்தது வரப்பு. பாதங்களில் அழுத்தம் கிடைக்காமல் சளக்கென்று வழுக்கிக் கொள்ள தொபுக்கடீர் என்று வயலுக்குள்ளே விழுந்தாள் நல்லம்மாள்.

நல்லம்மாள் தலையிலிருந்து தூரமாய் விழுந்திருந்த நாற்றுக் கட்டிலிருந்து, தும்பு தும்பாய் நாற்றுக்கள் பிரிந்து தெறித்துச் சிதறிக் கிடந்தன.

''அய்யோ... அம்மா... எங் கால் போச்சே...'' என்று சத்தம் போட்டுக் கதறினாள் நல்லம்மாள். முன்னே போய்க் கொண்டிருந்த பொம்பளைகள் வேகத்தை நிறுத்திவிட்டு அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தனர். அந்தந்த மேனிக்கு நாற்றுக் கட்டுக்களை இறக்கி வைத்துவிட்டு குலைப்பதற்றமாய் அவளிடம் ஓடி வந்தனர்.

சரசுவதிதான் முதலில் ஓடி வந்து நல்லம்மாளைத் தூக்கிவிட முயற்சி பண்ணினாள். பக்கத்து வீட்டுக்காரி என்ற பரிவு இருந்தது அவளிடம். சொந்தமில்லை என்றாலும், உறவுமுறையில் மருமகளாக இருந்தாள்.

மற்ற பொம்பளைகளும் சரசுவதிக்கு ஒத்தாசை பண்ணினார்கள். நல்லம்மாளின் கைகளை இறுக்கமாய்ப் பற்றி இழுத்து மேலே தூக்கி நிறுத்த முயற்சித்தார்கள்.


விழுந்திருந்த அறிபறியில் அவளின் சேலை முழுவதிலும் சகதி அப்பிக் கிடந்தது. முழங்கைகளில் சாயம்பட்டு வெற்றிலைச் சாறாய் ரத்தம் கசிந்து கொண்டி



ருந்தது. நல்லம்மாளால் எழுந்துகொள்ள முடியவில்லை. ''அய்யோ... என் காலு தெறிக்குதே... கீழ ஊனை முடியலியே'' என்று வாய்கிழியச் சத்தம் போட்டாள்.

''என்ன புள்ளேளா இன்னும் பாத்துக் கிட்டு நிக்கிய? அத்தையத் தூக்குங்க... கவருமெண்டு ஆசுபத்திரிக்குக் கொண் டுட்டுப் போவோம்.''

விசனத்துடன் உத்தரவு போட்டாள் சரசுவதி. அத்தனை பெண்களும் கைத் தாங்கலாய் நின்று தூக்கினாலும், நல் லம்மாளைத் திடமாக நிறுத்தி வைக்க முடியாமல் திணறினார்கள். காலை ஊன் றிக் கொள்ள முடியா மல் பரிதவித்தாள் அவள்.



''முடியலியே எனக்கு. உசிர் போறது கெணக்கா வலி எடுக் குதே... அடப் பாத ரவே... எனக்கா இப் பிடி வந்து இடி வுழணும்?'' உச்சக்குரலில் நல்லம்மாள் சத்தம் போட்டாள்.

வேதாசலம் வந்துவிட்டிருந்தார்.

கரைகள்

அபிமானி



நட்சத்திர சிறுகதை 9

அகலமாய் விரித்திருந்த கருத்த குடைக் குள் அவர் முகம் மறைந்திருந்தது. அரைக் கிழடு வயதைத் தாண்டிக் கொண்டிருந் தது அவருக்கு. முகவெளியில் மெல் லிய கீறல்களாய் கோடுகள் விழத் தொடங்கியிருந்தன. உதட்டுக்கு மேல் பட்டை அடித்தது போல கருப்பும் வெள்ளையும் கலந்த மீசை மயிர்கள் ஒரு விரல் நீளத்துக்கு நீண்டிருந்தன.

அவருக்குப் பின் மாடசாமி வந்து நின் றார்.

மாடசாமிதான் ஒவ்வொரு பொம்பளை யின் நடுவைக்கும் வய லில் எல்லை போட்டுக்

கொடுப்பவர். பக்கத்திலிருந்த ஊரான மாசிலாமணிபுரத்துக்காரர். அங்கிருந்த பொம்பளைகளுக்கு ஒரு வகையில் உறவுக்காரரும்கூட.

பொம்பளைகள் குமைந்து கொண்டிருந்ததைக் கண்டதும் வேதாசலம் பரபரத்தார். வரப்பு மேட்டில் நின்றுகொண்டே கனைத்துச் சத்தம் போட்டார்.

''வயலுக்குள்ள என்ன செய்றீங்க? நடுவைக்கு வந்தீங்களா, கும்மியடிக்க வந்தீங்களா? ஆங்?''

சரசுவதி ஆத்திரப்பட்டாள். விர்ரென்று அவள் மூக்கு விடைத்துக் கொண்டது. கண்கள் உக்கிரமாய் வெறித்தன.

''கும்மி அடிக்கமா? பாத்தா அப்படியா தெரியுது? கண்ணத் தொறந்து நல்லாப் பாருங்க. நல்லம்மா அத்த வரப்புத் தடுக்கிக் கால் மொறிஞ்சு கெடக்காங்க. அவுங்கள கவுருமெண்டு ஆசுபத்திரிக்குக் கொண்டுபோவ முடியாம அல்லாடிக்கிட்டு நிக்கோம் நாங்க. கும்மியடிக்கீங்களான்னு கேக்குறியளே?'' விசுக்கென்று அவளின் பார்வை மாடசாமி மேல் தாவியது. ''மாடசாமி சித்தப்பா... ஒரு ஆம்பளத் தொண கெடைக்காமத்தான் நாங்க அல்லாடிக்கிட்டு நிக்கொம். ஓடியாங்க... அத்தயக் கூட்டிக்கிட்டுப் போயி ஆசுபத்திரில சேத்துட்டு வந்திரலாம்.''

வேதாசலத்தின் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார் மாடசாமி.

வேதாசலத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ''என்ன நீ பெரிய இவா மாதிரி அவனக் கூப்புடுற? ஆசுபத்திரிக்கு அவன் போயிட்டான்னா உங்களுக்குக் கூறு பிரிச்சுத் தர்றது யாரு? மத்தவங்க வயல்ல எல்லாம் நடுவ நடந்துக்கிட்டிருக்கு பாரு. இங்கதான் எசலிப்புப் பண்ணிக்கிட்டிருக்கீங்க.''

''அதுக்காவ? இப்பிடி அதலக்கொதலையா வுழுந்து கெடக்கித பொம்பளைய அனாதையாப் போட்டுட்டுப் போவ முடியுமா? அதுவும் பாவம், வயசான காலத்துல.''

''வயசாயிருச்சில்ல? பொறவு எதுக்கு வேலைக்கு வர்றா? கூறான பொம்பளைங்களப் பார்த்து நீ கூட்டிக்கிட்டு வர வேண்டியதானே?''

வேதாசலத்தின் வயக்காட்டுச் சோலிகளுக்கு எல்லாம் சரசுவதிதான் ஆள் அமர்த்திக் கூப்பிட்டுக் கொண்டு போவாள். வாய்த் துடுக்கும் வகையாய் ஆள்சேர்க்கும் சாமர்த்தியமும் இருந்தன அவளுக்கு.

''என்னப் பேச்சுப் பேசுறிய மொதலாளி? சம்சாரித் தொழிலுக்கு இப்ப சம்பள ஆள் கெடைக்கறது ரொம்பக் கஷ்டம். எப்படியெல்லாம் நல்ல வார்த்த சொல்லி அவளக் கூட்டிக்கிட்டு வந்திருக்கென் தெரியுமா? உலக நிலவரம் தெரியாமப் பேசாதிய.''

''சரி சரி... செழுமா நடுவைய ஆரம்பிங்க... நல்லம்மாளக் கூட்டிட்டுப் போயி பம்புசெட் ரூம்ல படுக்க வையிங்க. நடுவ

வெல்கம் டால்கம்!



அழகுக்குப் பயன்படுத்தும் டால்கம் பவுடரின் மூலப் பொருள் என்ன தெரியுமா? வெள்ளை களி மண்தான். இதற்கு டால்க் என்று பெயர். வழவழப்பான, ஒளி ஊடுருவக்கூடிய டால்க், தாதுப் பொருட்களிலேயே மிக மென்மையானது. இதனுடன் மக்னீஷியத்தின் நுண்ணிய துகள்களும், சில ரசாயனப் பொருட்களும், வாசனையும் சேர்த்துதான் டால்கம் பவுடர் தயாராகிறது. இத்தாலி, ஜெர்மனியில் கிடைக்கும் உயர் ரக டால்க்கில் காகிதம், ஓடுகள், ரப்பரும்கூடத் தயாரிக்கிறார்கள்.

- அ.யாழினி பார்வதம், சென்னை

முடிஞ்சதும் ஆசுபத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப் போய்க்கிரலாம்.''

அந்த வயலின் பம்புசெட் அறை மேற்கு அற்றத்தில் ஒதுங்கியிருந்தது. சிரமப்பட்டு அவளைத் தூக்கி நிறுத்திக் கொண்டு கைத்தாங்கலாய் பம்பு செட் அறைக்குள் கூட்டிச் சென்றார்கள் பொம்பளைகள். முன்வராந்தாவில் கொண்டு உட்கார வைத்தார்கள். முனகிக் கொண்டே சுவரோரம் ஒண்டிக்கொண்டாள் நல்லம்மாள்.

''இங்கனயே செத்த நேரம் ஒக்காந்துக்கோங்க அத்தெ. செழமா வேலய முடிச்சிட்டு வந்திருந்தோம்... அதுக்குப் பொறவு ஆசுபத்திரிக்குப் போவலாம்... சரியா?''



"நல்லம்மாள் அத்தைக்கும் சேத்து இப்ப கூலி கொடுத்தாத்தான் நாளைக்கு ஓங்க வயல்ல நடுதுக்கு வருவோம்..."

நல்லம்மாளுக்கு வெப்புராளமாய் இருந்தது. குதிகாலில் தொடங்கிய வலி மூளை வரைக்கும் சென்று இம்சைப்படுத்திக் கொண்டிருந்தது. ஏற்கெனவே நனைந்து குளிர்ந்து போயிருந்த அவள் தேகம் இப்போது நடுக்கத்தில் அதிர்ந்து கொள்ளத் தொடங்கியது. சுவர் மூலையில் ஒரு அழுக்கு மூட்டையைப் போலப் பதுங்கிக் கொண்டு கிடந்தாள்.

அவளின் வயிற்றில் பிறந்திருந்த இரண்டு பொட்டப் பிள்ளைகளும் கல்யாணம் காட்சி முடிந்து தூரத்தொலவெட்டில் இருந்தார்கள். எப்போதாவது வந்து தலைகாட்டிவிட்டுப் போகும் பொட்டப் பிள்ளைகள், தங்கள் பகட்டான வாழ்க்கையைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வதில் மட்டும் குறை வைத்திருக்கவில்லை.

அடிக்கடி அவர்கள் வந்து போனதில் கூட ஒரு சூட்சுமம் இருந்த விஷயம் நல்லம்மாளுக்குப் புரிந்தது. புருஷனும் பொஞ்சாதியும் தங்கள் கையுழைப்பில் சம்பாதித்து வைத்திருந்த பத்துசெண்ட் வீட்டு மனையை ஆளுக்கு ஐந்து செண்டாகப் பங்கு வைத்துப் பிரித்துக் கொள்வதிலே குறியாய் இருந்தார்கள் அவர்கள்.

அந்த பத்துசெண்ட் மனையின் மத்தியில்தான் அடக்கமாய் குடிசைபோட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள், நல்லம்மாளும் அவள் புருஷக்காரனும். ஒரு கம்புக் குச்சியை ஊன்றிக் கொண்டு தெருக்கோயில் வேப்பமரத்து நிழலுக்கும், வீட்டுத் திண்ணைக்குமாக நடந்து நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தார் அவர். தனக்கொரு முடை என்றால், அவரை யார் வந்து கவனித்துக்கொள்வார்களோ என்று அடிக்கடி நினைக்கத் தோன்றுகிறது அவளுக்கு. அவளின் மனத்திரையில் விசுக்கென்று தீப்பற்றிக் கொள்கிறது. மற்ற முதலாளிமார்களாவது இரக்கப்பட்டு ஏதாவது தந்து உதவுவார்கள். வேதாசலம் கஞ்சப் பிசுநாறி என்பது ஊரறிந்த விஷயமாக இருந்ததை அவள் நினைத்தும் பார்த்தாள்.

மதியம் தாண்டி இரண்டு மணி வரை நீடித்திருந்தது அவர்களின் நடுவை. பக்கத்து வயல்களில் எல்லாம் கூலியாட்கள் நடுவையை முடித்துக் கரையேறி ஒருமணி நேரத்துக்கு மேலாகியிருந்தது.

தூறல் இன்னும் விட்டிருக்கவில்லை. காலையிலிருந்தே சின்னக் குழந்தையைப் போலச் சிணுங்கிக் கொண்டிருந்தது அது.

அவர்கள் வேலையை முடித்துக் கரையேறிய நேரத்துக்குச் சரியாக வந்து விட்டிருந்தார் வேதாசலம். பின்னால் மாடசாமியின் பணிவான வருகை தெரிந்தது.

வாய்க்கால் நீரில் கைகளைக் கழுவி விட்டு வேதாசலத்திடம் வந்து நின்றார்கள். வேலையை முடித்த வாக்கில் கூலியை வாங்கிக்கொள்வதே தற்போதைய நடைமுறையாய் இருந்தது. வேதாசலம் தயாராகவே மேல்சட்டையில் பணம் வைத்திருந்தார். மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போனவர், திரும்பி வந்தபோது பணத்தோடு வந்திருந்தார். தன்முன்னே நெருங்கிவந்து நின்றிருந்த சரசுவதியிடம் பணத்தை எடுத்துத் தந்தார்.

ஈரம் பட்டுவிடாத எச்சரிக்கையில் தன் நெஞ்சாங்கூட்டை முன்வளைத்துக் கொண்டு அதன் மறைப்பில் பணத் தாள்களை எண்ணினாள் அவள். எத்தனை முறை எண்ணினாலும் ஆறு நூறு ரூபாய்த் தாள்களே எண்ணிக்கையில் வந்தன. அவளுக்குப் பொருதி கலங்கிற்று. விசனத்துடன் முகத்தை இறுக்கிக் கொண்டு வேதாலசத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''எவ்வளவ்ங்யா சம்பளம் குடுத் துருக்கிய?'' அதிர்வோடு விழுந்தன அவள் வார்த்தைகள். தேகத்தில் மெல்லிய உதறலும் ஆட்கொண் டிருந்தது அவளை.

''அறநூறு ரூவா குடுத்திருக்கேன். இவ்வளவ்தானா கூலி? நீங்க நாலு பேரு தான? ஆளுக்கு நூத்தம்பது ரூவா... சரி தானா?''

''எங்க நாலு பேத்துக்கு அறநூறு ரூவா கூலி சரிதான். நல்லம்மாளுக்குள்ள கூலி?''

''அவா என்ன, வேலயா செஞ்சா?''

''அவளோட வேலயத்தான் நாங்க எல்லாரும் சேந்து முடிச்சிக்கிட்டமே. அப்போ அவளுக்கும் சேத்துக் கூலி தரணு மில்ல?''

''ஆளுக்குத்தான் கூலி... வேலைக்கு இல்ல.''

''அப்படின்னா இந்த வயலுக்கு நீங்க நாலு பேரத்தான் நடுவைக்கு விடுவீங் கன்னு தெரிஞ்சா நாங்க வந்திருக்க மாட் டமே... வேற சம்சாரிக்கு நடுவைக்குப் போயிருப்பமில்லா? எவ்வவ் எடம் நட்டுத் தொலைச்சிருக்கு... முதுகு ஒடிஞ்சு போச்சு. வெரலு முழுசும் வலி கொல்லுது. நல்லம்மாள் அத்தைக்கும் கூலியைச் சேத்துக்குடுங்க... அதான் நியாயம்.''

''என்ன நீ... ஒரு மேப்பொறந்தான்னு கூட என்னிய மதிக்காம அகராதியாப் பேசிக்கிட்டு நிக்கற?''

''நாங்க கஷ்டப்பட்டு வேல பாக்கி தோம் மொதலாளி. எங்களுக்குக் கூலி தர்றதுல ஒங்க கஞ்சத்தனத்தக் காட்டாதிய. இப்பல்லாம் சம்சாரி வேலைகளுக்குக் கூலியாளுங்க கெடைக்கது எவ்வளவ் கஷ்டமின்னு ஒங்களுக்குத் தெரியுமா? ஏதோ மாடசாமி சித்தப்பாவோட மூஞ்சிக்காவ நடுவைக்கு வந்தொம். நல்லம்மாள் அத்தைக்கும் சேத்து இப்பக் கூலி கொடுத்தாத்தான் நாளைக்கு ஒங்க வயல்ல நடுததுக்கு வருவொம்... இல் லன்னா மத்த சம்சாரிக வயலுக்குப் போயிருவொம்... பாத்துக்குங்க.''

குக்கூ

குழந்தைக்குப் பிடித்த விளையாட்டை
மழை ஆடிப் பார்த்தது
அழகான கோலத்தைக் கலைத்து...

- ஆர்.ராஜலக்ஷ்மி

பின்னால் நின்றிருந்த மாடசாமியை முறைப்பாகத் திரும்பிப் பார்த்தார் வேதாசலம்...

''என்னடே ஏய் மாடசாமி... இவா இப்பிடி அதாளித்தனம் பண்ணுதா?''

மாடசாமி அமைதியாக நின்றிருந்தார். அவள் சொன்னதுதான் சரி என்பதுபோல, முகத்தில் சலனமின்றி வேதாசலத்தைப் பார்த்தார்.

தற்சமயத்துக்குத் தூறல் நின்றிருந்தது. இப்படித்தான் அடிக்கடி மறந்து போனது போல தூறல் நின்று விடுகிறது. திடீரென ஞாபகம் தட்டியதுபோல சரசரவெனத் தூறிக் கொள்கிறது. விரைசலாக பம்புசெட் அறையை நோக்கி வந்தார்கள். நல்லம்மாள் எப்படி இருக்கிறாளோ என்ற தவிப்பிருந் தது அவர்களுக்கு.



நடுவை முடிந் திருந்த வயலை, வரப்பில் நின்ற வாறே மேற்பார்வை பார்த்துக் கொண் டிருந்த வேதாசலம் சரசுவதியின் கண் ணில் பட்டதும், அவ ளுக்குள் அனா யாசமாய்க் கோபம் வந்தது. ''மனுசன் ஒரான் கூலிய எடுத்துக் குடுக்கதுக்குள்ள என்னா வரத்து வந்துட்டான்... அடியாக்கமார்கள்ன்னா அவன் சொன்ன சொல்ல எல்லாம் செவனேன்னு கேட்டுக்கிடுவாங்கன்னு நெனப்பு. வயல்ல எறங்கி ஒடம்ப வளச்சி நட்டுப் பாத்தாத் தெரியும்...''

அவளின் மொண்ணையான முணு முணுப்பைக் கேட்டதும் மற்ற பொம்பளைகள் எல்லோரும் உதட்டுக் குள் சிரித்துக் கொண்டார்கள். நல்லம் மாளுக்குரிய கூலியையும் தரியாத்தனம் பண்ணி வாங்கி விட்டிருந்தாள் அவள். வீட்டுக்குப் போனதும் நல்லம்மாள் கையில் நறுவிசாகத் தந்துவிட வேண்டும் என்று நினைத்திருந்தாள். பாவம் நல் லம்மாள். வயதான காலத்தில் வங் கொடுமையே என்று பாடுபட்டு இரண்டு ஜீவன்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள்.

சரிவாக சுவரில் நிறுத்தியிருந்த ஆஸ் பெஸ்டாஸ் கூரைக்குள் இருள் பிர தேசமாய்க் கிடந்தது தாழ்வாரம். அவற் றுக்குள்ளிருந்து எந்தவிதச் சலனமோ சந்தடியோ வெளியே கேட்டிருக்க வில்லை.

குலைப் பதற்றமாய்ப் போனது சரசு வதிக்கு. குதிரைப் பாய்ச்சலில் காலெடுத்து வைத்து உள்ளே தாவினாள். பின்னால் மற்றவர்களும் அவளைத் தொடர்ந்தார்கள். சுவர் மூலையில் கைகளும் கால்களும் பொகுலாந்து கிடந்த நல்லம்மாளைப் பார்த்ததும் எல்லோருக்கும் கதிகலங்கிப் போயிற்று. ஓட்டை விழுந்த துருத்தியி லிருந்து வெளிப்படும் காற்றைப் போல சுவாசம் சுருதி குறைந்து கேட்டுக் கொண்டிருந்தது. சரசுவதி பதற்றமானாள். மற்றவர்களை முடுக்கிவிடத் தொடங்கி னாள்.

''குடி கெட்டுரும் போலிருக்கே... செழுமா அத்தையத் தூக்குங்க... ஆசுபத் திரிக்குக் கொண்டுட்டுப் போயிருவொம்.''

செண்டுக்கட்டாய் அத்தையைத் தூக்கித் தன் தோள்மேல் சரித்துக் கொண்டாள் சரசுவதி. ஒருத்தி நல்லம்மாளின் கால் களைப் பிடித்துத் தாங்கிக்கொண்டு வந்தாள். ஒருத்தி நல்லம்மாளின் கையை உதறவிடாமல் அமுக்கிப் பிடித்துக் கொண் டாள்.

ஓட்டமும் நடையுமாய் அவர்கள் அந்த வயலின் கரையைக் கடந்தபோது, மீண்டும் தூறத் தொடங்கியது வானம். ●

நான் நல்லா நடிப்பேன் சார்!

சினிமாத் துறையில் வெற்றிதான் ஒருவரின் வாழ்வைத் தீர்மானிக்கும் அளவு கோல். 'உழவன்' படத்தில் நடித்தும் கவனிக்கப்படாமலிருந்த ரம்பா, 'உள்ளத்தை அள்ளித்தா'வின் வெற்றியால் ஒரே நாளில் 19 படங்களில் ஒப்பந்தமானார். இப்படித்தான் வெற்றி சிலரை ஒரேயடியாக உயரே தூக்கிவிடும்; சிலரைக் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னுக்குத் தள்ளிவிடும். சேரன் இரண்டாவது வகை.

சேரனின் வெற்றி, கடும் உழைப்பைப் பின்னணியாகக் கொண்டது.

இயக்குநராகும் முன்பிருந்தே அவரைப் பார்த்து வருகிறேன். நான் குடியிருந்த வீட்டின் கீழ்த்தளத்தில் ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன் இருந்தார். அவரைப் பார்க்க சேரன் அடிக்கடி வந்து போவார். அப்போது ரொம்ப ஒல்லியாக இருப்பார். பேண்ட்-ஷர்ட் அணிந்து இன் செய்து கொண்டு, ஷூ சாக்ஸ் அணிந்து, சற்று தலைகுனிந்த நிலையில் நடப்பார். கண்களில் ஒரு தேடல் இருக்கும். அதில் 'நான் ஜெயிப்பேன்' என்கிற கனல் இருக்கும். அப்போதெல்லாம் அவர் எனக்குப் பழக்கமில்லை.



ஒரு நடிகராகும் கனவுகளுடன்தான் இவரும் சென்னைக்குப் படையெடுத்தார், நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டே முயற்சி செய்தார். அந்தப் பகுதியில் ராதாகிருஷ்ணன் என்பவர் நாடகம் நடத்துவதாகக் கேள்விப்பட்டு, போய் வாய்ப்பு கேட்டார். முதலில் மறுத்தவர் பிறகு, ''நாளை மாலை 6 மணிக்கு ராஜா அண்ணாமலை மன்றத்துக்கு வா'' என்று சொல்ல, மறுநாள் நண்பர்களுடன் சேரன் சென்றார்.

''அதோ அந்தம்மா டயலாக் பேசி முடித்ததும் நீ போய், 'சார் போஸ்ட்'னு லெட்டர் கொடுக்கணும். இதுதான் ஸீன்'' என்றார் ராதாகிருஷ்ணன். சந்தோஷமெல்லாம் நொறுங்கிப் போக, வருத்தத்துடன் நடித்துவிட்டு வந்தார்.

பின்னர் சினிமாவில் வாய்ப்பு! புரொடக்ஷன் மேனேஜர் கதிரேசன், கவுண்டமணி ஹீரோவாக நடித்த (நாலும் தெரிந்தவன்) படத்தின் இயக்குனர் கே.நடராஜிடம் சேரனைக் காட்டி, ''நம்ம பையன்... நடிக்க சான்ஸ் கொடுங்க'' என்று பரிந்துரைத்தார்.

அங்கும் ஒரு நிமிடம் தோன்றும் போஸ்ட்மேன் வேடம் தரப்பட்டது. 'சார் போஸ்ட்' என்று சொல்லிக் கடிதம் நீட்டும் அந்தக் காட்சியில், சரியாக நடிக்கவில்லை எனத் திருப்பி அனுப்பப்பட்டார் சேரன்.

''இதெல்லாம் உனக்குச் சரிப்பட்டு வராது தம்பி. இருக்கும் வேலையைப் போய்ப் பார்'' என்ற கதிரேசனிடமே உதவியாளராகச் சேர்ந்தார். பிறகு புரொடக்ஷன் மேனேஜராக வேலை பார்த்தார். சந்தானபாரதியிடம் ஒரு படத்திலும்; கே.எஸ்.ரவிக்குமாரிடம் 'புரியாத புதிர்' முதல் 'சேரன் பாண்டியன்' வரையிலும் அசோஸியேட்டாக இருந்தார். பிறகும் உடனே டைரக்ஷன் வாய்ப்பு வந்து விடவில்லை.

நீண்ட போராட்டத்துக்குப் பின் 'பாரதி கண்ணம்மா' படத்தின் வாயிலாக இயக்கு

சபீதா ஜோசப்

இவங்க இப்படித்தாங்க... 11

நரானார். அப்போதும் ஒரு பிரச்னை தலை தூக்கியது. படத்தின் கதாநாயகன் நாயகி இறந்துவிடுவது போன்ற முடிவில் ஹீரோ பார்த்திபனுக்கு உடன்பாடில்லை. எனவே ஹீரோ ஹீரோயின் சேர்ந்து வாழ்வது போல் க்ளைமாக்ஸை மாற்றி அமைக்க வேண்டும் என்றார். சேரன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பின்னர் இரண்டு க்ளைமாக்ஸ்கள் எடுக்கப்பட்டன. இறப்பதாக ஒன்றும், சேர்ந்து விடுவதாக ஒன்றும். கே.எஸ்.ரவிக்குமார் உட்பட சில இயக்குநர்கள் பார்த்துவிட்டு 'முதலில் இருந்த க்ளைமாக்ஸே இருக்கட்டும்; கதைக்கு வலு சேர்ப்பது அதுதான்' எனச் சொன்னதும் பார்த்திபனும் ஒப்புக் கொண்டார்.

'பாரதி கண்ணம்மா' சிறப்பான வரவேற்பைப் பெற்றது. 'அதன் ஒட்டுமொத்த வெற்றியும் டைரக்டர் சேரனையே சாரும்' என்பதாக பார்த்திபனே பாராட்டினார். விமர்சனம் எழுதியிருந்தவர்களுக்கு நன்றிக் கடிதம் எழுதினார் சேரன். எனக்கும் கடிதம் வந்தது.

'ஓல்டு உட்லண்ட்ஸ்' ஹோட்டலில் அடுத்த படத்துக்கான கதை விவாதத்தில் இருந்த சேரனைச் சந்தித்தபோது, அடுத்தடுத்து இயக்கப்



போகும் படங்களுக்கான ஒன்லைன் சொன்னார்.

''என் படம் வணிக ரீதியாக எவ்வளவு போயிருக்கு என்பது முக்கியமில்லை. மக்கள் மத்தியில் அது என்ன விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் பார்ப்பேன்'' என்றார்.

> ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு கதை இருக்கு. ஒவ்வொரு கிராமமும் கதைகளை வெச்சிருக்கு.

தேவிஸ்ரீதேவி தியேட்டரில் 'பொற்காலம்' ப்ரிவியூ ஷோ பார்த்துவிட்டு வரும்போது வாசலில் நின்று கை குலுக்கி, கருத்து கேட்டுக்கொண்டிருந்தார் சேரன். நான் அவருடன் கைகுலுக்கிவிட்டு புன்னகையுடன் வெளியேறினேன். ''என்ன சபீதா...? ஒண்ணும் சொல்லாம போறீங்க'' என விரட்டி வந்து கேட்டார்.

''மனத்தைத் தொட்டு விட்டீர்கள். வெற்றி நிச்சயம்; விருது நிச்சயம்! காலையில் விரிவாகப் பேசுகிறேன்'' என்றேன். அன்று முதல் சேரனின் வாழ்வில் பொற்காலம் ஆரம்பமானது. முதல் படத்தில் தொடங்கிய எங்கள் நட்பு, இன்னமும் ஈரத்துடன் இருக்கிறது.

சினிமாவுக்கான கதையை, பிறமொழிப் படங்களிலும் சி.டி.களிலும் தேடும் இயக்குநர்கள் மத்தியில், ''நான் இலக்கியம் படித்ததில்லை; என் மண்ணில் வாழும் மனிதர்களைப் படித்தேன். அங்கு வாழும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு கதை இருக்கு. எத்தனையோ விதமான கதாபாத்திரங்கள் இருக்கு. சொல்லப் போனா, ஒவ்வொரு கிராமமும் கதைகளை வெச்சிருக்கு'' என்பார் சேரன்! நிகழ்கால மனிதர்கள் மத்தியிலிருந்து கதைகளை அவர் தேர்ந்தெடுக்கிறார். இதுவே இவரது வெற்றியின் ரகசியம்!

பாரதி கண்ணம்மா, பொற்காலம் இரண்டிலும் மீனாதான் கதாநாயகி. அந்த சென்டிமென்டை வைத்து, சேரனுடன் மீனாவை இணைத்து ஒரு ஸ்கூப் எழுதியிருந்த நேரம். ஏ.வி.எம்மில் ஒரு படத்தில் பூஜையில் என்னைப் பார்த்துவிட்ட சேரன், உடனே என்னை அழைத்தார். ''என்ன இப்படி பண்ணிட்டீங்க? மீனா, என்னைத் தப்பா நினைக்க மாட்டாங்களா?'' என்றார் கோபத்துடன். ''கவலைப்படாதீங்க... இதையெல்லாம் அவங்க கண்டுக்க மாட்டாங்க'' என்றேன் சமாதானப்படுத்தும் பாவனையில்!

(அடுத்த வாரம்: தேவயானி)



ஒரு பிடி செம்பருத்தி இலை, ஊற வைத்த வெந்தயம் ஒரு ஸ்பூன் இவற்றை நன்றாக அரைத்து தலையில் தேய்த்துக் குளித்துவர, கூந்தல் ஷாம்பூ போட்டதைப் போல் மிருதுவாக இருக்கும். பேன், பொடுகு நீங்கும்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 13



நாவினிக்க சொற்கண்டாய்...

காண்பதற்கரிதான கால கட்டத்தில், முற்றிலும் வெண்பாவால் யாத்தளிக்கப்பட்ட 'கண்ணன் அனுபூதி' என்னும் நூலினை வடித்திருப்பவர்..? நம்புங்கள்! வார்த்தைகளில் நகைச்சுவை வசியம் கலந்து கேட்பவரைச் சொக்க வைத்துவிடும் சூட்சுமம் அறிந்த கிரேஸி மோகன்! சொற்கள் இவரது வசனத்தில், சொந்தக் கவலைகளைக்கூட தொலைத்துவிட்டு, சந்தோஷத்தில் சங்கமிக்கத் தொடங்கிவிடும். வெண்பா வடிவமோ, பழந்தமிழ்ப் பாவடிவில் தீரத் தன்மையும், சமரசமேற்காத இலக்கணக் கட்டமைப்பும் கொண்டது.

நூறு வெண்பாக்கள். வெண்பாவின் ஈற்றுச் சொல்லை அடுத்த வெண்பாவின் முதற்சொல்லாக்கி, நாரில் கோத்த பூவைப் போல பாவைத் தொகுத்திருக்கிறார் கிரேஸி மோகன்.

கடவுளிடத்தில் நேரடியாகப் பேசுவது தமிழ்ப் புலவர் மரபு. அந்த மரபின் நீட்சியாக, கண்ணனின் மேல் கொண்ட அளப்பரிய பக்தியோடு, நேராகப் பேசும் பாக்கள். எல்லாம் வல்லவனிடம் உரையாடுகையில், 'வேண்டினேன் கண்ணா வழங்கு' என கேட்காமல் இருந்தால்தான் பிசகு. எனவே கேட்கிறார்.

பல வரிகளில் கிரேஸி மோகனின் அங்கதச் சுவை அழகாகப் பளிச்சிடுகிறது. மிகவும் வியக்க வைப்பது, இந்தப் பாக்களில் மிளிரும் படைப்பாளுமை. மற்றொன்று, மானுட, உலகியல் பற்றிய தத்துவார்த்தத் தெறிப்புகள், ஒரு படைப்பாளி தனித்து நிற்கிற தருணங்கள் இவை.

கண்ணனைக் குறிப்பிடுகையில், 'இருளை ஒழிக்க இருளில் பிறந்த இருள்நிறம் உற்ற இறைவா' என்கிறார். உலகுக்கே ஒளி வழங்கும் கதிரவன் உட்பட, ஒளி பிறப்பது இருளில் தானே.

கண்ணனைத் தன்னுள் அழைக்கும் கணத்தில், 'இதய விஷத்தை இறக்கி அதனுள் புதிய அமுதாய்ப் புகு' என்று வேண்டுவது ஒட்டுமொத்த மானுடத்துக்கான பிரார்த்தனையாக தொனிக்கிறது.

பின்னட்டையில் குறிப்பிட்டதைப் போல கண்ணனைக் கண்டவர்க்கு இது விருந்து; காணாதவர்க்கு மருந்து.

அனாயசமாக வெண்பாக்களைப் புனைந்திருக்கும் இந்நூல் குறித்த விமர்சனத்தையும் ஒரு வெண்பாவில் வழங்கினால் மிகப் பொருந்தும்:

கற்கண்டாய் நாவினிக்க கண்ணன்
அனுபூதி
சொற்கண்டாய், 'வெண்பா கிரேசி' -
அற்புதமாய்
யாத்த கவிதைக்கு யான்மகிழ்ந்து
சூட்டுதற்காய்
பூத்தேன் விமர்சனப் பூ!

- தமிழ்மணவாளன்

மாறுவோம்; மாற்றுவோம்!

-பெண்களுக்கெதிரான வன்முறை குறித்த

சேர்ந்து சிந்திக்க சந்தர்ப்பம்



* பிரக்ஞா சார்பாக...



* நடராஜ் ஐபிஎஸ்.



* பேராசிரியர் கே.பாரதி



* பாரதி சந்திரமௌலி

பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த 16 நாள் பிரசாரம் நவம்பர் 25 முதல் டிசம்பர் 10வரை உலகளாவ நடந்தது. சென்னையில் இப்பிரசாரத்தில் முன்னணி வகித்தது 'பிரக்ஞா' தன்னார்வத் தொண்டு நிறுவனம். அதன் ஒரு அங்கமாக இந்தப் பிரச்னை குறித்து சேர்ந்து சிந்திக்க 'மாறுவோம்; மாற்றுவோம்!' என்ற கருத்தரங்கினை நடத்திட, கல்கி பத்திரிகை வாசகர்களுடன் கைகோத்துக் கொண்டது. சென்னை இந்திராநகர் யூத் ஹாஸ்டல் வளாகத்தில் டிசம்பர் ஆறாம் தேதி மாலை கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பிரக்ஞா அமைப்பினர் வரவேற்க, கல்கி ஆசிரியர் சீதா ரவி, சிறப்பு அழைப்பாளர்களை அறிமுகப்படுத்த, கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் நெறிப்படுத்தி நடத்திய அந்தக் கருத்தரங்கத்தின் சுருக்கமான தொகுப்பு...

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்: இது வெறும் பிரசங்க மேடையாக இல்லாமல், பெண்களுக்கு எதிரான வன்முறை என்ற பிரச்னைக்கான தீர்வுகளை நோக்கிப் பயணிக்கும் ஒரு கலந்துரையாடலாக அமைய வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களைப் பாதுகாப்பதற்கென்று உள்ள சில பிரத்யேகமான சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை அறிந்து, அவற்றை அடைப்பதற்கு சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்த வேண்டும்.

மனநல மருத்துவர், எழுத்தாளர், டாக்டர் ருத்ரன்: உடல் சார்ந்து செலுத்தப்படுவது மட்டும் வன்முறை இல்லை; அலுவலகங்களில் பெண்களுக்குரிய மரியாதையைத் தராமல் இருப்பதும், தகுதி இருந்தும் உயர் பதவிகள் அவர்களுக்கு மறுக்கப்படுவதும்கூட வன்முறைதான்.





தமிழச்சி தங்கபாண்டியன்

நெடும்பயணத்தின் முதல் படி!



ரிஸ்வானாபானு (கல்லூரி மாணவி): இன்றைய இந்தியாவில் - அரை மணி நேரத்துக்கு ஒரு பாலியல் பலாத்காரம் நடக்கிறது. ஓராண்டில் சுமார் 15 ஆயிரம் வரதட்சணை மரணங்கள் நிகழ்கின்றன. நம் நாட்டில் நாற்பது சதவிகித மனைவியர் தம் கணவராலேயே உடல்ரீதியிலான வன்முறைக்கு ஆளாகிறார்கள். (புள்ளி விவர உபயம்: தேசிய குற்றப் பதிவு மையம்)

பாஸ்கர் சக்தி: குடும்பங்களில் பெண்கள் மீதான வன்முறைக்கு மதுப் பழக்கம் ஒரு முக்கியமான காரணம்!

திலகபாமா: ஒரு பெண்ணுக்கு எதிராக வன்முறை நடக்கிறபோது, அதற்கு சாட்சி இருந்தால்தான், சட்டத்தின் பார்வையில் அது ஒரு வன்முறையாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆண்களின் வார்த்தை ஜாலங்களுக்கு ஒரு பெண் எளிதில் மயங்கிவிடும் தன்மையால் அந்த பலவீனத்தையே பெண்களுக்கு எதிராக ஆண்கள் பிரயோகிக்கிறார்கள்!

சுமதி: ஆண், மனைவிக்குப் பொருளாதார சுதந்திரம் தர மறுத்தான்; அடுத்து டைவர்ஸ் என்ற அஸ்திரத்தைப் பிரயோகித்தான்; அந்தத் தடைகளையெல்லாம் மனோ தைரியத்துடன் பெண் உடைத்து விட்டு வெளியில் வந்தபிறகு, குழந்தைப் பாசம் என்ற பாசக் கயிற்றைக் கழுத்தில் போட்டு இறுக்கப் பார்க்கிறான். ஜீவனாம்சம், குழந்தை மீதான உரிமை போன்ற விஷயங்களில் கோர்ட் உத்தரவுகளை மீறும் ஆண், பெண்களை போலீஸ் ஸ்டேஷன் படி ஏற வைக்கிறான். வன்முறையின் வெவ்வேறு வடிவங்கள் இவை.

நட்ராஜ் ஐ.பி.எஸ்: 2007-08ஆம் வருடத்தில் மட்டும் பெண்கள் மீதான வன்முறை சம்பந்தமாக ஒரு லட்சத்து 86 ஆயிரம் வழக்குகள் பதிவாகி உள்ளன. இவற்றில் 7 ஆயிரத்து 800 வழக்குகள்



* வழக்கறிஞர் சுமதி



* பிருந்தா ஜெயராமன்



* பாஸ்கர் சக்தி



* ரிஸ்வானா பானு



* கவிஞர் திலகபாமா

தமிழகத்தில் பதிவாகி இருக்கின்றன. இன்று பெண்களுக்குத் தேவை அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு அல்ல; உச்சம், ஞானம், திறம், உயிர்ப்புதான்.

கே.பாரதி: பெண்ணை ஒரு சக மனுஷியாக மதிக்க வேண்டும் என்ற கருத்தாக்கம் இந்தச் சமூகத்தில் வர வேண்டும். இதை ஒரு பிரசாரமாகவே செயல்படுத்த வேண்டியது மிக அவசியம்.



* டைரக்டர் வஸந்த்

டைரக்டர் வஸந்த்: (மனைவி மீதான கணவனின் ஆதிக்கத் தாக்குதலை அற்புதமாக எடுத்துச் சொல்லும் அசோகமித்ரனின் 'விமோசனம்' என்ற கதையைச் சுருக்கமாகச் சொன்னார்.) தன்னைவிட உடல் ரீதியாக பலவீனமான மனைவியை, ஒரு கணவன் அடிப்பது எத்தனை கேவலம் என்பதை உணர வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மரம் நடுவது போல, எல்லோரும் அன்பை நட்டால், வன்முறை குறையும்.

பாரதி சந்திரமௌலி: என் வீட்டில் பணிபுரியும் பெண் பொருளாதாரச் சுதந்திரம் இல்லாததால்தான் கணவனின் வன்முறையை எதிர்க்காமல் இருப்பதாக நினைத்தேன். ஆனால், வங்கியில் உயர்பதவி வகிக்கும் என் தோழியின் வீட்டிலும் இது நடப்பதை அறிந்தபோது, இதற்குப் பொருளாதாரப் பிரச்னை மட்டுமே காரணமில்லை என்பது புரிந்தது. அவர்கள் இருவருமே தங்கள் மீது முதல் அடி விழுந்த சமயத்தில் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தவறிவிட்டார்கள்.

பார்வையாளர் பதிவுகள்:

தமிழ்மணவாளன்: ஒரு நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்த போது, வேற்று மனிதர் ஒருவர் இருக்கிறாரே என்ற உணர்வே இல்லாமல், அவர் தம் மனைவியை ''வாடி... போடி'' என்று பலமுறை அதிகாரம் செய்வதைக் கவனித்தேன். பெண்களும் இதை அவமரியாதையாக நினைப்பதில்லை என்பது வேதனையளிக்கிறது.

உத்ரா: குழந்தைகளுக்கான டி.வி. சேனல்களில் வரும் கார்ட்டூன் தொடர்களில்கூட, பெண் குழந்தைகள் மீது வன்முறை நடக்கிறது. சிறுவர்களுக்குச் சிறுமிகளைக் கண்டால் இளப்பமாக இருக்கிறது; இந்தப் போக்கு மாற வேண்டும்.

கார்த்திகா: ஊடகங்கள் பெண்கள் மீதான வன்முறை குறித்த



✱ டாக்டர் ருத்ரன்

செய்திகளை வெளியிடும் போது மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

பிருந்தா ஜெயராமன்: அதிகாரம் கை நழுவிப் போய்விடுமோ என்ற பயம் வரும்போது, பெண்கள் மீது வன்முறையை ஆண்கள் கையாளுகிறார்கள். அத்தகைய ஆண்களுக்குத்தான் மனநல ஆலோசகரின் ஆலோசனை மிக அவசியம்.

தீர்வை நோக்கிச் சில அடிகள்:

பிருந்தா ஜெயராமன்: மனோ தைரியம் மிக மிகத் தேவை. பிறர் தன்னைக் கசக்கி வருத்துவதால் தன் மதிப்பு குறைந்துவிடாது என்கிற உண்மையை உணர்ந்து பெண்கள் மன திடம் கொள்ள வேண்டும்.

டாக்டர் ருத்ரன்: குடும்பத்தில், அக்கம்பக்கத்தில் இருப்பவர்களிடம், நண்பர்களிடம் என்று பலரிடமும் இது பற்றிப் பேசுங்கள். உங்கள் கருத்தை அவர்கள் மனத்தில் ஆழமாகப் பதிவு செய்யுங்கள். குறிப்பாக இளையவர்களிடம் பேசுங்கள். நாளடைவில் பலன் இருக்கும்.

கே.பாரதி: கல்லூரி மாணவர்களுக்கு, பெண்ணியலை (விமன் ஸ்டடீஸ்) பாடமாகச் சொல்லிக் கொடுத்து, பெண்கள் குறித்த நல்லவிதமான புரிதலை ஏற்படுத்தினால், அதற்கு நல்ல பலன் கிடைப்பதை, நான் கண்கூடாகப் பார்க்கிறேன்.

திலகபாமா: பாதிக்கப்படும் பெண்கள் தங்கள் பிரச்னை குறித்து சுயமாகச் சிந்தித்து, புரிந்துகொண்டு தீர்வு காண முற்பட வேண்டும்.

தமிழச்சி தங்கபாண்டியன்: பெண்களுக்கு எதிரான வன்முறை ஜாதி, இன ரீதியாக தலித் மக்களையும் மலைவாழ் மக்களையும் இன்றும் பெரிய அளவில் பாதித்துக்கொண்டிருக்கிறது. இது குறித்து சமூக மாற்றத்தை நோக்கி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிருந்தா ஜெயராமன்: ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கென்று ஆதரவுக் குழுக்களை நிறுவலாம்.


தமிழச்சி தங்கபாண்டியன் : அமரர் கல்கி தமது தியாகபூமி நாவலில் கதாநாயகி சாவித்ரி பேசுவதாக எழுதிய வாக்கியம் வழிகாட்டும்: 'பெண்கள் சுதந்திரத்துக்காக தியாகம் செய்யலாம்; அடிமைத்தனத்துக்காக அல்ல!'

நிகழ்ச்சி முடிந்து புறப்பட்டபோது எல்லோரும் பேசிக் கலைந்தார்கள் என்பதாக அல்லாமல், பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் கடமையில் தமக்கும் பங்கு உண்டு என்ற எண்ணமே மேலோங்கியது. அதுதானே இந்த நெடும் பயணத்தின் முதல் அடி!

தொகுப்பு:
எஸ்.சந்திரமௌலி
படங்கள்: ஸ்ரீஹரி



✱ உத்ரா



✱ தமிழ்மணவாளன்


ஷண்முகி டீச்சரும்
சகலகலா மாணவர்களும்

கமலை வைத்து இப்படி ஒரு சூப்பரான ஓவியத்தை வரைந்திருப்பவர் சென்னையைச் சேர்ந்த ஓவியரான ஏ.பி.ஸ்ரீதர். ''கமல் தம்மை எப்போதுமே ஒரு மாணவராக நினைத்துக் கொண்டு புதிய விஷயங்களை ஆர்வத்துடன் கற்றுக் கொள்வார். அதே சமயம், அவர் பல விஷயங்களும் தெரிந்த ஆசிரியரும்கூட. தாம் கற்றுக்கொண்ட விஷயங்களை மற்றவர்களுக்கு ஆர்வமாகச் சொல்லிக் கொடுப்பார். கமலுடைய இந்த குணாதிசயம் எனக்குப் பிரமிப்பூட்டியது. அதை வைத்து இந்த ஓவியத்தை வரைந்தேன்'' என்கிறார் ஸ்ரீதர்.

''கே.ஜி. வகுப்பு படிக்கும்போது டீச்சருடனும் வகுப்பின் அத்தனை குழந்தைகளுடனும் எடுத்துக்கொண்ட குரூப் போட்டோவைப் பொக்கிஷமாக பாதுகாப்பதைப் பார்க்கிறோம். அதுபோல ஒரு டீச்சர் ப்ளஸ் 49 குழந்தைகள் என்று கமலை ஐம்பது பரிமாணங்களில் ஓவியம் தீட்ட விரும்பினேன். குழந்தைகளுடன் சேர்ந்து நடுநாயகமாக அமரப் போவது அவ்வை ஷண்முகிப்பாட்டிதான் என்பதை முதலில் முடிவு செய்துவிட்டேன். அதன் பிறகு கமலுடைய நூற்றுக்கணக்கான ஸ்டில்களைச் சேகரித்து, அவற்றிலிருந்து மிகவும் வித்தியாசமான 49 முகங்களைத் தேர்ந்தெடுத்தேன். அவற்றை வைத்து மார்பளவு கமல் ஓவியங்கள் தீட்டினேன். அந்த ஓவியங்களிலிருந்து முகத்தை மட்டும் எடுத்து இந்த வகுப்பறை ஓவியத்தில் பயன்படுத்தினேன்.

ஏழு அடிக்கு நாலு அடி அளவுள்ள இந்த ஓவியத்தை ஓவியம் வரைவதற்காகவே உருவாக்கப்பட்ட 'பெயின்டர்' என்ற ஸ்பெஷல் சாஃப்ட்வேரைப் பயன்படுத்தி வரைந்தேன். இந்த சாஃப்ட்வேரைப் பயன்படுத்துவதற்காக ஆஸ்திரேலியாவில் சிறப்புப் பயிற்சி பெற்றேன். இந்த சாஃப்ட்வேரைப் பயன்படுத்தி வரைவதால் என்ன லாபம் என்று கேட்கலாம். இந்த ஓவியத்தையே எடுத்துக் கொள்வோமே! கமலின் நாற்பது முகங்களை வரைந்த பிறகு, அடுத்து வரைகிறபோது அந்த முகம் திருப்தியாக அமையவில்லை என்றால், திருத்தங்கள் செய்வது சாத்தியமில்லை. தூக்கிப் போட்டுவிட்டு முதலிலிருந்து மறுபடியும் வரைய வேண்டும். ஆனால் இந்த சாஃப்ட்வேரைப் பயன்படுத்தினால், திருப்தி இல்லாத பகுதியை மட்டும் நீக்கிவிட்டு, மீண்டும் முழு திருப்தி வரும்வரை வரைய முடியும். சாஃப்ட்வேரைப் பயன்படுத்தியும்கூட எனக்கு இந்த ஓவியத்தை முழுதாக வரைந்து முடிக்க நான்கு மாதகாலமானது.''

ஓவியத்தைப் பார்த்துவிட்டு கமல் என்ன சொன்னார்?

''இப்படி ஒரு ஓவியத்தை நீங்கள் வரைந்திருப்பதற்கு நீங்கள் என் மீது கொண்ட அன்பைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது. அந்த அன்புக்குப் பதிலாக என் அன்பையே கொடுக்கிறேன்' என்று சொல்லி அதையே நான் எனக்கென்று வைத்திருந்த இந்த ஓவியத்தின் பிரதியிலும் எழுதி, கையெழுத்து போட்டுக் கொடுத்தார்.''

இந்த ஓவியம், எல்டாம்ஸ் ரோடில் உள்ள கமலின் அலுவலக வரவேற்பறையில் கம்பீரமாக ஒரு ஸ்டாண்டில் நிறுத்தி வைக்கப்பட்டு, வருகிற எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறது.

கல்கிக்காக ஸ்ருதி கமலின் பேட்டிக்காகச் சென்றபோது நானும் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

– எஸ்.சந்திரமௌலி

படம் : **ஸ்ரீஹரி**

எப்போ, எவ்ளோ நேரம் வந்தாலும், இடத்தைவிட்டு நகர விடாமல் இழுத்துப் பிடிச்சு நிறுத்தும் இந்தக் காட்சிகளை மட்டும் டீவி.யில யாரும் தவறவிட மாட்டோம். ஸ்வீட்டா பேசி ஸ்மார்ட்டா நடிக்கும் லிட்டில் க்யூட்டீஸ் வரும் விளம்பரங்கள்தான் டீவி.யில் எவர்க்ரீன். அந்த சிண்ட்ரெல்லா செல்லங்கள் சிலரின் பயோடேட்டா இங்கே...

குட்டி ஹீரோ ருதுபரன்

வயது : 11, **திரைப்படங்கள் :** 'கனா கண்டேன்', 'ஜெயம் கொண்டான்.'

விளம்பரப் படங்கள் : நூறு

ஹிட் : பிரபலங்களுடன் நடித்த விளம்பரப் படங்கள்தான். தோனியோடு நடித்த 'ந்யூட்ரின் மஹா லாக்டோ', சினேகாவோடு நடித்த 'ஆஷிர்வாத் ஆட்டா', ஆச்சி மனோரமாவோடு சேர்ந்து நடித்த ஆச்சி விளம்பரப் படங்கள்.





'சிண்ட்ரெல்லா

எங்களைவிட சிண்ட்ரெல்லா அழகா?

க்யூட் குட்டி தன்யாகென்

வயது : 7

படிப்பது: ஒன்றாம் வகுப்பு.

விளம்பரப் படங்கள்: கடந்த 18 மாதங்களில் இருபத்து நான்கு.

ஹிட்: ஹமாம், ஆர்.எம்.கே.வி, அருண் ஐஸ்கிரீம்.

சுட்டிப்பெண் லக்ஷிதா - வயது: 9, **படிப்பது:** நான்காம் வகுப்பு. **விளம்பரப் படங்கள்** கடந்த மூன்றரை வருடங்களில் எண்பது. **திரைப்படங்கள்:** 5 தமிழ்ப் படங்கள். **ஹிட்**

கலக்கல் மேஹா

வயது : 9

விளம்பரப் படங்கள் : அறுபது

ஹிட் : லயன் டேட்ஸ், ஆச்சி மசாலா, தினகரன், இதயம் மந்த்ரா.





செல்லங்கள்!



குட்டி ஹீரோவின் ப்யூட்டி தங்கை ரக்ஷா

வயது : 6

விளம்பரப் படங்கள்: இப்போ மட்டும் இல்லை. குட்டி பாப்பாவாகவே நல்லி 75க்கான விளம்பரப் படத்திலும், ஆவின் விளம்பரப் படத்திலும் நடிச்சிருக் கேனே...

ஹிட் : ராணி முகர்ஜியோடு நடித்த செவ்ரோலெட் கார் விளம்பரப் படம்.

'அபியும் நானும்' லக்ஷிதான்னு எல்லாரும் என்னைக் கூப்பிடற அளவுக்கு ஃபேமஸ் ஆகிட்டேன்!

தொகுப்பு : நளினி சம்பத்குமார்

நிறம் மாறும் பூ!

நித்யாவும், வித்யாவும் குழந்தையை ஆசை ஆசையாகத் தொட்டுப் பார்த்தார்கள். நித்யா இரண்டாவது படிக்கிறாள். வித்யா எல்.கே.ஜி.

''தம்பி எப்போம்மா வீட்டுக்கு வருவான்... எங்களையெல்லாம் அடிப்பானாம்மா... என்ன பேரும்மா வைக்கிறது...?'' நித்யாவும் வித்யாவும் மாறி மாறிக் கேட்டார்கள்.

''தம்பிக்கு ராஜா என்று பெயர் வைப்போம். ஆமாடி கண்ணுங்களா... இந்த நாட்டையே ஆளப் போகிற ராஜா...'' என்று சொல்லிவிட்டு கலகல வெனச் சிரித்தாள் ஜானகி.

தவமிருந்து பெற்ற ஆண் குழந்தை என்பதால், ராஜா மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தாள் ஜானகி. அவன் வளர வளர அவன் பக்கத்திலிருந்தே அவனுக்குத் தேவையானதைப் பார்த்துப் பார்த்துக் கவனித்தாள். நாட்கள் உருண்டோடின. ராஜா நன்கு வளர்ந்து விட்டான். வகுப்பில், பள்ளியில் அவன்தான் முதல் மதிப்பெண். ஜானகி பூரித்துப்போனாள்.

பிறகுதான் ராஜாவிடம் ஒருவித படிப் படியான மாற்றம். ஒருநாள் ஜானகியின் மடியிலேயே வெகுநேரம் படுத்திருந்தான். பொதுவாக நித்யாவும் வித்யாவும் தான் அவளது மடியில் படுத்துக்கொண்டு கதை அளந்து கொண்டிருப்பார்கள். இவன் வீட்டில் இருப்பதே கொஞ்ச நேரம்தான். எப்போதும் நண்பர்களுடன் கிரவுண்டில் கிரிக்கெட் ஆடப் போய் விடுவான்.

''என்னடி பிள்ளையை மடியிலே போட்டுக் கொஞ்சிக்கிட்டிருக்கியா?'' என்றபடி கணேஷ் அங்கு வந்தான். அப்பாவைக் கண்டதும்தான் தாமதம். ராஜா விசுக்கென அம்மாவின் பின்னால் போய் ஒளிந்துகொண்டான்.

''ஏண்டா வெட்கப்படறே, வெளியே வாடா'' என்றான் கணேஷ். ராஜா தலையைக் குனிந்தபடி குடுகுடுவென அறைக்குள் ஓடிவிட்டான். ராஜாவின் செய்கை புதிதாக இருக்கவே ஜானகியும் கணேஷும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்த்துக்கொண்டார்கள்.

பிறகொரு நாள் அறைக்குள் நித்யாவும் வித்யாவும் கலகலவெனச் சிரிக்கும் சப்தம். ஜானகி உள்ளே போய்ப் பார்த்தாள்.

''அம்மா பாருங்க உங்க பையனை... என்கிட்டேயிருந்து மை டப்பாவைப் பிடுங்கி அவன் கண்ணுக்கு வெச்சுக்கிட்டிருக்கான்!'' என்றாள் வித்யா.

ராஜா கண்ணாடியைப் பார்த்து மை வைத்துக் கொண்டிருந்தான். ஜானகி அவனிடம் வந்து, ''ஆம்பிள்ளைங்கெல்லாம் மை வைக்கக் கூடாதுடா'' என்றாள்.

''எனக்கு ஆசையா இருக்கும்மா'' மை தீட்டிய கண்களைச் சுழற்றி அழகு பார்த்தான்.

''டேய் ராஜா!''

அவனது நண்பர்கள் அழைக்கும்

குரல் கேட்டது. ராஜா மெல்லமாக எட்டிப் பார்த்தான். பின்பு விசுக்கென கதவின் மறைவில் ஒளிந்துகொண்டான். கண்களில் மை வைத்திருப்பதைப் பார்த்து நண்பர்கள் கேலி செய்வார்கள் என்பதால் ஒளிந்து கொள்கிறான் என்று நினைத்தாள் ஜானகி.

''அவன் பின்னாடி வருவான். நீங்க போங்கப்பா'' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தான். நண்பர்கள் மறைந்த பிறகுதான் அவன் ஸ்கூலுக்குக் கிளம் பினான். ராஜா பள்ளிக்குச் சென்ற கொஞ்ச நேரத்திலேயே அவனது வாத்தியார் அவ னைக் கூட்டி வந்துவிட்டார். கணேஷ்



அனிதாகுமார்

பட்டுத் துணியில் மெனு!

பெங்களூரின் கொரமங்கலா பகுதியில் உள்ள சாந்தினி செளக் என்னும் உணவு விடுதியில் மெனு கார்டு கிடையாது. பதிலாக எம்ப்ராய்டரி ஃப்ரேமில் ஸில்க் துணியில் மெனு விவரங்கள் எழுதப்பட்டுள்ளன. இங்கு மரம் மற்றும் ப்ளாஸ்டிக்கினால் ஆன சேர்கள் கிடையாது. கருங்கல்லால் ஆன நாற்காலிகள்தான்!

- மஞ்சுதேவன்



ஓடிப்போய் வரவேற்றான்.

"வாங்க ஸார்!"

"அதெல்லாம் இருக்கட்டும். பையன் முதல் மார்க் வாங்கினா மட்டும் போதாது! ஒழுக்கமாகவும் வளர்க்கணும்."

"என்ன பண்ணினான்?"

"என்ன பண்ணினானா... இன்னிக்கு கிளாஸில் பொண்ணுங்க உட்கார்ற இடத்துல போய் உட்கார்ந்துக்கிட்டு வரவே மாட்டேன்னுட்டான். புள்ளையைக் கண்டிச்சு வையுங்க!"

ஜானகியும் கணேஷும் அதிர்ந்து போனார்கள். வாத்தியாரின் வார்த்தையும் கணேஷின் பார்வையும் ராஜாவுக்கு வேதனையாயிருந்தன. வாத்தியார் சென்றதும், "வாடா உள்ளே" என்று அவனது கையைப் பற்றி உள்ளே இழுத்துப் போனான் கணேஷ். ராஜா இடுப்பை வெட்டி வெட்டி நளினமாக நடந்து போனான்.

ஜானகி கெஞ்சியும் விடாமல் கணேஷ் பிரம்பால் நாலு சாத்து சாத்திவிட்டான். பிரம்பின் அடியாலும் பள்ளியில் ஏற்பட்ட அவமானத்தாலும் ராஜாவின் மனம் ரணமாகிப் போனது. முட்டிக்கொண்டு வந்த அழுகையை நெருப்பு மாதிரி நெஞ்சுக்குள் புதைத்துக்கொண்டு விட்டான்.

"என்னங்க ஸ்கூலில் பொண்ணுங்ககூட விளையாடுறான்... நேற்று ஒரு பொண்ணு நாட்டியம் ஆடுற மாதிரி ஆடுறான். எனக்கு ரொம்ப பயமா இருக்குங்க!"

"நான் கண்டிச்சிருக்கேன்ல... ராஜா மாறிடுவான் கவலைப்படாதே!" என்றான் கணேஷ். ஆனால், நாளுக்கு நாள் ராஜாவுக்குள் பெண்மை ஊற்றாகப் பொங்கிப் பெருகியதே தவிர குறையவில்லை. அவனது செய்கையால் வீடே சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

நித்யாவும் வித்யாவும் அவனிடம் பேச்சையே நிறுத்திவிட்டார்கள். அவனைக் கண்டாலே பயந்து ஓடினார்கள். ஒரு ஆண், பெண் போல நடப்பதும் சிரித்துப் பழகுவதும் அவர்களுக்கு அருவருப்பாகவும் பயமாகவும் இருந்தது.

எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக அன்றுதான் அது நடந்தது. 'அம்மா' நித்யாவும் வித்யாவும் கூட்டாக அலற...

"என்னடி ஆச்சு?" ஜானகி பதற்றத்துடன் கேட்டாள்.

"அம்மா இங்க வாயேன்."

ஜானகி உள்ளே சென்று பார்த்து உறைந்தாள். ராஜா நித்யாவின் புடைவையை மிகவும் அழகாக நேர்த்தியுடன் கட்டியிருந்தான். கண்களுக்கு மை தீட்டி தலையில் சிறிது பூ வேறு வைத்திருந்தான்.

"ராஜா என்னடா இது கோலம்? ஏண்டா இப்படியெல்லாம் நடந்துக்கறே. உனக்கு என்னடா ஆச்சு?"

"எனக்குப் புடைவை கட்டிக்கணும்னு ஆசையா இருந்தது. கட்டிக்கிட்டேன்.

இது தப்பா!''

ஜானகிக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை.

கணேஷ் கண்களில் கோபம் மின்ன பெல்ட்டை உருவினான். குறைந்தது பத்து நிமிடமாவது ராஜாவை பெல்ட்டால் விளாசினான்.

''போடா... வீட்டை விட்டு வெளியே போ. இனிமேலும் நீ இங்கிருந்தால் யாருமே நிம்மதியா இருக்க முடியாது. போயிடு... வீட்டை விட்டு எங்கேயாவது போய்த் தொலை...''

ராஜா கட்டியிருந்த புடைவை கசங்கிப் போயிருந்தது. வியர்வையாலும் கண்ணீராலும் மை கலங்கி கண்களில் கசிந்திருந்தது. அந்தத் தோற்றத்தை கணேஷாலேயே சகிக்க முடியவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். அதே கோலத்துடன் விம்மியபடி ராஜா ஜானகியிடம் வந்தான்.

''அம்மா எனக்குள் ஒரு பெண்மை இருந்துக்கிட்டே இருக்கு. பெண்களைப் போல உடை உடுத்தி எப்பவும் பெண்களுடனே பழகிக் கொண்டிருக்கணும் போல் தோன்றுகிறது. நான் இதை வேணும்னு செய்யல. அதுதான் எனக்குப் பிடிக்குது. அப்படித்தான் இருக்க முடியுது. நான் என்ன பண்றது? கடவுள் என்னை இப்படி படைச்சதுக்கு நான் என்னம்மா பண்ண முடியும்?''

''ஜானகி இன்னும் என்ன அவன் கிட்டே பேச்சு? அவனை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லு!''

கணேஷ் அதே கோபத்துடன் சொன்னான்.

''ராஜா ஏங்க வீட்டை விட்டுப் போகணும்? அவன் எங்கேங்க போவான்? இவன் நம்ம பிள்ளைங்க!''

''இவன் இங்கிருந்தால் நித்யாவையும் வித்யாவையும் யாரும் பொண்ணு கேட்டு வர மாட்டாங்க. இவனோட அட்டூழியங்களால் வீட்டில் யாருமே நிம்மதியா இருக்க முடியாது!''

''பெத்தவங்களே இப்படி குறையா இருக்கிற பிள்ளைங்கள வீட்டை விட்டுத் துரத்தினா பிச்சை எடுக்கிற கேலிப் பொருளா என் குழந்தையும்தானே மாறும்? அவனை அந்த நிலைமைக்கு நான் தள்ள மாட்டேன். உங்களுக்குப் பிடிக்கலைன்னா அவன்கிட்டே யாரும் பழக வேண்டாம். இது மாதிரி நேரத்துலதாங்க அவனுக்குப் பாசத்தையும் பாதுகாப்பையும் நாம கொடுக்கணும்! அப்படி அவன் வீட்டை விட்டுப் போய்த்தான் ஆகணும்னா நானும் அவனோட போயிடறேன். எந்தத் தாயும் ஆண் பெண் பாகுபாடு பார்த்தா பாசம் வைப்பா? எனக்கு இன்னிலேருந்து மூணு பொண்ணுங்க'' என்றாள் தீர்க்கமாக. ○





வாரம் இருமுறை வெண்ணெய் அல்லது பாலேட்டை, முகம், கை, கழுத்தில் தடவி ஊறிய பிறகு பயத்தம் மாவு கொண்டு கழுவி விடவும். முகம் பொலிவுடன், அழகாக இருக்கும்.

- எஸ்.விஜயா சீனிவாசன்

டாக்டர் **ஏ.வி. ஸ்ரீனிவாசன்**

ஆபீஸிலிருந்து லேட்டாக வீடு திரும்பிய ராஜேஷ், வாசலிலேயே காத்திருந்த மனைவியிடம், ''இன்னிக்கு டிபன் வேண்டாம் சுசிலா, வயிறு மந்தமா இருக்கு'' என்றான்.

''வயிறு மந்தமா, இல்ல ஆபீஸ் பிரெண்ட்ஸோட குடிச்சுட்டு வந்தீங்களா? உண்மையைச் சொல்லுங்க'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டுக் கொண்டே லன்ச் பேகை எடுத்துச் சென்றாள் சுசிலா.

'இவ என்ன லை டிடெக்டரை உடம்போட கட்டிட்டு அலைவாளா? இவகிட்ட இருந்து தப்பிக்கவே முடியாது போல' என்று நினைத்துக்கொண்டே குளிக்கச் சென்றான் ராஜேஷ்.

இது போன்ற சம்பவங்கள் எல்லோருக்கும் அடிக்கடி நிகழ்வதுண்டு.

பெண்களின் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்துப் பொய் சொல்ல முடியாது. மாட்டிக் கொள்வோம். கண்டு பிடித்து விடுவாள். ஆச்சரியமாக இருக்கிறதா?

நம் பாடி லாங்வேஜ் குறித்து ஒரு ஆய்வு செய்யப்பட்டது. ஒருவரை முகம் பார்த்துப் பேசும்போது, சொல்ல வந்ததை அவர்களிடம் சேர்ப்பிப்பது நம் மொழியே என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது தவறு. வார்த்தைகளற்ற சமிக்ஞைகள் (சிக்னல்) மூலம் அதிக அளவிலும், தொண்டையிலிருந்து எழும்பும் சத்தம் மற்றும் வார்த்தைகள் மூலம் மிகக் குறைந்த அளவிலுமே தகவல் தொடர்பு நடத்துகிறோம்.

ஒரு பெண்ணுடன் பேசும்போது, சொல்ல வருவதை வேகமாகக் கிரகித்துக் கொள்வாள் அவள். தகவலை மட்டுமல்ல; சமிக்ஞைகள், பாடி லாங்வேஜ், தொண்டையிலிருந்து வந்த பல வகையான சத்தங்கள் (வோகல் சவுண்டு) ஆகியவற்றையும் கிரகித்துக் கொள்வாள். அவளது மூளையின் இரு அறைக்கோளங்களும் போட்டி போட்டுக்கொண்டு தகவலை ஒன்றுக்கொன்று பிரித்து அலசி ஆராய்ந்து விடும். எளிதில் எது உண்மை, எது பொய் என்று அறிந்துகொண்டு விடுவாள்.

அது மட்டுமின்றி, வார்த்தைகளின் ஏற்ற இறக்கத்தில் ஏற்படும் மாற்றம், சத்தத்தில் மாற்றம், பிட்ச்சின் அளவு என்று எல்லாவற்றையும் அலசி பிட்டுப் பிட்டு வைத்து விடும் ஆற்றல் வாய்ந்தது அவளது மூளை.

ஆனால் ஒரு ஆணின் முகத்தைப் பார்த்துப் பொய் சொல்வது எளிது. ஏன்? ஒலிகள், வார்த்தைகள், சமிக்ஞைகள் ஆகியவற்றை, பெண்ணைப் போல் அவனால் பிரித்தறிய முடியாது. அவனது மூளையின் இரு அறைக்கோளங்களும் அப்படி துரிதமாகச் செயல்பட முடியாது.

மிஸ்டர் & மிஸஸ் மேல்மாடி

சீக்ரெட் அஃப் ப்ரெய்ன்

இதனால்தான் பெரும்பாலான ஆண்கள் மனைவியை நேருக்கு நேர் பார்த்துப் பொய் சொல்ல முயலும்போது, உருப்படியாகச் செய்ய முடியாமல் கன்னா பின்னாவென்று உளறிக் கொட்டிக் கையும் களவுமாகப் பிடிபட்டு விடுவார்கள்.

தனித்தனிப் பிறவியாக மட்டுமின்றி ஒரே கருவில் பிறந்த ஆண், பெண் இரட்டையர்களை ஒரே விதத்தில் வளர்த்தோமானாலும், அவர்களின் சிந்தனை மற்றும் செயலில் வித்தியாசங்கள் உண்டு.



11

நடமாடும் லை டிடக்டர்!

'அதனால் நாம் நாமாக இருப்பதற்கு ஹார்மோன்களே காரணம்' என்று மூளை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சமீபத்திய ஆராய்ச்சி, ஒரு கரு உருவான 6-8 வாரங்களுக்குள் அதன் மூளை ஒரு கம்ப்யூட்டர் போன்ற செயல் வடிவத்தைப் பெறுகிறது. அதாவது ஒரு கம்ப்யூட்டருக்குத் தேவையான அடிப்படையான ஆபரேடிங் சிஸ்டம், ப்ரோக்ராம்கள் எல்லாம் பெற்றுக்கொண்டுதான் பூமியில் வந்து விழுகிறோம்.

அடிப்படை ஆபரேடிங் சிஸ்டம் மற்றும் வலைப் பின்னல்களுக்கிடையே சிறிது வெற்றிடமும் இருக்கும். எளிதாகச் சொன்னால், ஒரு சிறிய ரூம் இருக்கும். அங்கே, நம் சுற்றுச்சூழல், ஆசிரியர்கள், நண்பர்கள், நம்மை வழி நடத்துபவர்கள், இயற்கை இவற்றிலிருந்தெல்லாம் நாம் கற்றுக்கொள்கிறோம். அவை எல்லாம் அங்கே சிறிது சிறிதாகச் சேர்ந்து வரும். நாம் யார் ஆணா? பெண்ணா; எதிர்காலத்தில் நாம் யாராக இருப்போம் என்பதெல்லாம் அங்கே ஏற்கெனவே ப்ரீ செட் ஆகியிருக்கும்.

1960ஆம் ஆண்டு வரை கிடைத்த மூளை குறித்த ஆராய்ச்சித் தகவல்களெல்லாம், போர்களில் உயிரிழந்த வீரர்களின் மூளையைப் பரிசோதித்துப் பெறப்பட்ட தகவல்கள்தான். இவர்கள் பெரும்பாலும் ஆண்கள்தான். அதனால் பெண்களின் மூளையும் இப்படித்தான் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் நினைத்திருந்தார்கள்.

ஆனால் சமீபத்திய ஆராய்ச்சிகள்தான்

பெண்களின் மூளையில் குறிப்பிடத்தகுந்த முக்கியத்துவம் வாய்ந்த வித்தியாசங்கள் இருப்பதைத் தெரிவிக்கின்றன.

இதன்படி, மூளையின் வலது அறைக் கோளம் கற்பனை சக்தி, கலை ஆர்வம், படைப்பாற்றல் ஆகியவற்றைக் கொண்ட இப்பகுதி உடலின் இடப்புற இயக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.

கருத்துக்கள், அறிவியல், கணிதம், வேகத்திறன் மற்றும் முடிவுகளை ஆய்ந்து எடுத்தல் போன்றவற்றுக்கு அடிப்படையாக இருக்கும் இடது அறைக்கோளம், உடலின் வலது பாகத்தைக் கட்டுப்படுத்துகிறது.

பொதுவாக இடது கைப் பழக்கம் கொண்டவர்கள் பெண்களே. (பெரும்பாலும் தொண்ணூறு சதவிகிதம் வலது கைப் பழக்கம் உள்ளவர்கள்தான்) ஆண்களைவிட எண்ணிக்கையில் இவர்கள் அதிகம்.

இடது கைப் பழக்கம் உள்ள சில மாமேதைகள் பட்டியல்:


ஆல்பர்டின் ஐன்ஸ்டைன், லியனார்டோ டாவின்ஸி, பிகாஸோ, லூயிஸ் காரால், க்ரேடா கார்போ, ராபர்ட் டீ நிரோ, பால் மெக்கார்ட்நே.

1997ல் டானிஷ் ஆராய்ச்சியாளர் பென்ட்டே பேகன்பெர்க் என்பவர் ஆண் மற்றும் பெண் மூளையை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இதைப் படிக்கும் பெண்களெல்லாம் பெருமிதம் கொள்வீர்கள். அப்படி என்ன தெரிவித்தார்?

பெண் மூளை ஆண் மூளையை விடச் சற்று சிறியது. ஆனாலும் அதனால் செயல்பாட்டில் குறைந்துவிடாது. ஆணின் மூளையில் பெண்ணின் மூளையைவிட 4 மில்லியன் மூளை செல்கள் அதிகமாக உள்ளன. ஆனாலும், பொது அறிவுத் திறன் (ஜெனரல் இன்டெலிஜென்ஸ்) பெண்களுக்கு ஆண்களைவிட மூன்று சதவிகிதம் அதிகம். (இதைத்தான் மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெருசுன்னு சொல்வாங்களோ!)

(அலசுவோம்)

எழுத்தாக்கம் :
லக்ஷ்மி மோகன்



மனிதன் இயல்பாகச் செயல் பட 240 கோடி நியூரான்கள் வேண்டும். இதனை இணைத்துச் செயல்பட வைப்பது க்ளையல் செல்கள். இச்செல்களின் எண்ணிக்கை நியூரான்களின் எண்ணிக்கையைவிடப் பத்து மடங்கு அதிகம். இந்த க்ளையல் செல்களும் நியூரான்களும் வலுவிழக்கும் போதுதான் மூளையில் பல்வேறு குறைபாடுகளும் பிரச்னைகளும் தலைதூக்க ஆரம்பிக்கின்றன.



''எங்க ஊர்ல என்னை எல்லோரும் அழகன்னு சொல்றாங்க!''

''ஊர்ல நாலு பேர் நாலு விதமாகத்தான் பேசுவாங்க... அதுக்கெல்லாம் வருத்தப்படாதே!''

- சி.கலைவாணி

நீங்கள் கேட்டவை - தராசு

● கு.கணேசன், பனங்கோட்டூர்

? மதுரையில் தினகரன் பத்திரிகை மீதான தாக்குதல் தொடர்பான வழக்கில் மு.க.அழகிரி உள்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருப்பது குறித்து...?

! தாக்கிக் கொண்டவர்கள் சேர்ந்துகொள்ள முடிவெடுத்தாயிற்று... இனி சட்டம் என்ன செய்ய முடியும்...?! பிசுபிசுதான்!

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்★

? உலகிலேயே மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற சிறந்த நாடாக இந்தியாவை மாற்ற தலைவர்கள் வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று அப்துல் கலாம் வேண்டுகோள் விடுத்துள்ளாரே நிறைவேறுமா?

! இன்றைய அரசியல் சகதியை அறிந்தும் நம்பிக்கை மாறாத அவரது உள்ளத்தின் உயர்வுக்காகவாவது அவரது வேண்டுகோள் நிறைவேற வேண்டும்.

★ சீனியர்கள் தோற்றனர்!

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? வாஜ்பாய் பற்றி காங்கிரஸ் எம்.பி. வேணி பிரஸாத் வர்மா தகாத வார்த்தையைப் பயன்படுத்தி விமர்சிக்க, பிரதமர் அதற்கு மன்னிப்பு கேட்டது பற்றி...?

! மறுபடியும் இப்படி மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் நேராதபடிக்கு காங்கிரஸ் எம்.பிக்கள் நடந்துகொண்டால், பிரதமரின் பெருந்தன்மைக்குப் பலன் கிடைத்ததாகக் கருதலாம்.

● இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி

? இந்திய கடல் ரோந்துப் படையினரையே இலங்கை மீனவர்கள் கடத்தியுள்ளனரே... இதிலிருந்து என்ன



தெரிகிறது?

! அவர்களுடைய மீன்பிடிப் படகுகளில் அதி நவீன ராணுவ வசதிகள் இருந்தன என்பது கூடுதல் அதிர்ச்சி. இந்திய கட லோரக் காவல்/ரோந்துப் படையின் பலவீனத்தை உணர்த்தும் நிகழ்ச்சி இது.

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? எப்படியோ 2009 ஒரு வழியாக முடியப் போகுது... 2010 எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் தராசாரே?

! ஏழைகளை வதைக்காத ஆண்டாக, மத்தியதர வர்க்கத்தைக் கொடுமைப்படுத் தாத ஆண்டாக. இதுவே ரொம்ப அதிக மட்டுமே செய்தியில் அதிகம் அடிபட்டு, தமக்கு எட்டாண்டு சீனியர்களை இந்த விஷயத்தில் தோற்கடித்துள்ளார்.

● வே.ந.கதிர்வேல், வேலூர்

? "சினிமாவைவிட டெலிவிஷனில்தான் வன்முறைக் காட்சிகள் அதிகமாக உள்ளன" என்று அமீர் கூறுகிறாரே?

! அண்ணன் எட்டடி பாய்ஞ்சா, தம்பி பதினாறடி பாயுறாரு!

● ரஞ்சனிப்ரியன், பள்ளிபாளையம்

? "ஒவ்வொரு பிரச்னையிலும் அமெரிக்கா பக்கம் சாய்வதால், இந்தியா தன் அடை









● பிரிந்தவர்... ● ... கூடினால்... ● ... வழக்குதான்... ● ... வேண்டுமோ?!

மான எதிர்பார்ப்பு போலிருக்கிறதே!

● அ.அப்துல் காதர், சென்னை-45

? 'பெண் சிங்கம்' படத்துக்காக பத்தே நிமிடங்களில் முதல்வர் ஒரு பாடல் எழுதியுள்ளது பற்றி...!

! பத்து வருடங்கள் ஒலிக்கக்கூடிய பாடலாக அமைந்தால் சந்தோஷம்.

● பா.அசோக், திருவில்லிபுத்தூர்

? கடந்த பத்து ஆண்டுகளில், உலகில் அதிகம் பயன்படுத்தப்பட்ட வார்த்தை களில் 'ஒபாமா' இடம்பெற்றுள்ளது குறித்து...?

! கவனியுங்கள்... கடந்த ஓரிரு ஆண்டுகளில் யாளத்தை இழந்து பலவீனமாகிவிடும்" என்கிறாரே சீதாராம் யெச்சூரி?

! ஒவ்வொரு பிரச்னையிலும் ரஷ்யா பக் கமோ சீனா பக்கமோ சாய்ந்தால் இந்தியா தெம்பு பெறுமா என்ன? தனித்தனியே பிரச் னையின் தன்மையைப் பொறுத்துத்தான் நமது நிலைப்பாடு சரியா என்பதை எடை போட வேண்டும். ஒட்டுமொத்தமாக அல்ல.

● ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்

? நடிகை புவனேஸ்வரியின் அரசியல் நுழைவு...?

! திரைப்பட வாய்ப்புகள் சரியத் தொடங்

கும்போது நமது திரையுலகினரின் முதல் புகலிடம் அரசியல் என்று ஆகிவிட்டது.

● **எஸ்.கந்தசாமி, திருச்சி-2**

? 'ஒரு ரூபாய்க்குப் பருப்பு தருவாரா கருணாநிதி?' என்று ராமராஜன் கேள்வி எழுப்பியுள்ளாரே?

! ஒரு சலுகை அளிக்கப்பட்டால் அதை விடக் கூடுதல் சலுகை எதிர்பார்ப்பது மனித இயல்பு. இந்த இயல்பை ராமராஜன் வோட்டு சேகரிக்கப் பயன்படுத்துகிறார். நல்லாட்சி என்பது, ரேஷன் கடைகளிலும் இலவசங்களிலும் இல்லை என்பதை இருவருமே புரிந்துகொள்ளவில்லை.

! நஷ்டம் வங்கிகளுக்கு மட்டுமல்ல... வரி செலுத்துவோருக்கும்தான். இந்தப் பெரு நஷ்டத்தில் எவ்வளவு தூரம் அரசியல் விளையாடியிருக்கிறது என்பதற்கு வங்கிகளோ அரசாங்கமோ கணக்குச் சொல்ல மாட்டார்கள்!

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை**

? 2011 முதல் தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது என்கிறாரே ஆற்காடு வீராசாமி... நம்பலாமா?

! வேண்டாம். நம்பி ஏமாற்றமடைவதைவிட, நம்பாமலிருந்து, ஒருவேளை நடந்துவிட்டால் கூடுதல் மகிழ்ச்சிதானே!



✸ மாறாத நம்பிக்கை



✸ பலன் தேடும் பெருந்தன்மை



✸ அண்ணன் எட்டடி!



✸ சேரிடம் அறிந்து...!

● **த.குமார், பொள்ளாச்சி**

? கடந்த மூன்றாண்டுகளில் பண முதலைகளின் வாராக்கடன் 25,000 கோடி ரூபாயை அரசு வங்கிகள் தள்ளுபடி செய்து விட்டனவாமே?

❑ ரூ.150/- பரிசு பெறுபவர்:
பா.அசோக், திருவில்லிபுத்தூர்

★ ரூ. 75/- பரிசு பெறுபவர்:
ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

● **பி.செந்தில்வேலன், அறந்தாங்கி**

? பூமி வெப்பமயமாதலின் விளைவாக, பனிக்கட்டிகள் உருகுவதால் கங்கை நதி உற்பத்தியாகும் இமயமலையின் கங்கோத்ரியில் தற்போது ஒன்றரை கி.மீ தூரத்துக்குப் பனிக்கட்டிகள் இல்லாமல் போய்விட்டதாக இஸ்ரோ கூறியுள்ளதே... இந்நிலை நீடித்தால் என்னவாகும்?

! கடலின் நீர் மட்டமும் இதர நீர் நிலைகளின் உயரமும் கூடும். ஊர்கள் மூழ்கும்; உயிர்ச்சேதம் விளையும்... ●

எனக்குக் கோபமே வரவில்லை 'இவன்' மீது
விரல் சொடுக்கில் என்னை அழைக்கும் 'இவன்'
இயந்திரம் துப்பிய 'உற்பத்தி' பரிசோதித்து
உதடு பிதுக்குகின்ற 'இவன்'
தாமத வருகைக்கு எனது ஒருநாள் ஊதியத்தை
ரத்து செய்யக் காரணமாயிருந்த 'இவன்'
தலை நரைத்த தண்ட கருமாந்திரம் என்று
என்னை ஏசுகின்ற 'இவன்'
இருக்கின்றான் என் மகனைப் போலவே.
இவனைப் போல என் மகன் எங்காவது யாரிடமாவது
எப்பொழுதாவது நடந்துகொண்டதாய் அறிய நேர்ந்தால்
என் கண்ணுக்குத் தெரிவான் யாரோ போல...

என்னைப் போல் ஒருவன்



வே.எழிலரசு கவிதைகள்



பாலை

கண் தெறிக்கும் மணல்வெளி
முழுதாகத் தேர்ச்சியடையாத சிற்பியோ கடவுள்.
ஒற்றை ஒற்றையாய் ஈச்ச மரங்கள்.
தந்திக் கம்பங்கள் வந்தமரும் தேன்சிட்டுகள் இல்லை.
பயணத்தில் பார்க்க முடியவில்லை
பெருமரங்கள் உராய்ந்து முயங்கும் களிறு இணைகள்
பேன் பார்த்துக் காதல் செய்யும் மந்தி ஜோடிகள்
கலங்கிய குட்டையில் நீரருந்தும் மான்கள்
நீர்மட்டம் விட்டு மேலெழும்பி முத்தமிடும் டால்ஃபின்கள்.
கூடவே பயணித்தன கண்முனை நீர் துடைத்து
வழியனுப்ப அசைந்த வளைக்கரங்கள்.
தட்டில் நிரப்பப்பட்ட ஒட்டக இறைச்சி மிதக்கும் சோறும்
நிலைக் கண்ணாடி முன் கிடக்கும் மயிர்க்கற்றையில்லா சீப்பும்
வதைக்கின்றன என்னை... நீ பார்த்துக்கொண்டிருக்கும்
நெடுந்தொடர் முடிவதற்குள் நான் திரும்பி வந்துவிட,
நீ பிரார்த்திக்கிறாய் அறிவேன் நான்
என் வேலையை பிடுங்கி என்னை விரட்டும் மற்றுமோர்
சர்வதேசப் பொருளாதார வீழ்ச்சியையும்..!

ரெட்டிகாரு இருந்திருந்தால்?

ரோசையா வந்த பிறகு, உட்பூசல்கள் அதிகரிக்க, இதுதான் தக்க தருணம் என்று சாகும்வரை உண்ணாவிரதம் உட்கார்ந்து விட்டார் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் கே.சி.சந்திரசேகர ராவ். மத்திய அரசு இத்தனை சுலபமாக தெலங்கானாவுக்கு ஓ.கே. சொல்லும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை!

'காங்கிரஸ் கட்சி சரியான நேரத்தில், சரியான முடிவுகளை எடுக்கும்' என்று சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி அறிக்கை விட்டாலும், உண்மையில் அது ஒரு உடான்ஸ்தான். சோனியா காந்திக்குத் தரப்பட்ட சில உளவுத் துறை தகவல்கள் அவருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தன. ராவின் உடல்நிலை மோசமடைந்து அவரது உயிருக்கு ஏதாவது ஆகிவிட்டால், ஆந்திராவின் சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்குலைந்துவிடும் என்றும், ரோசையாவின் தலைமையை இன்னமும் ஏற்றுக் கொள்ளாத காங்கிரஸ்காரர்கள் அவரைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு தெலங்கானா காயைச் சாமர்த்தியமாக நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உளவுத் துறை, சோனியா காந்திக்குத் தகவல் கொடுத்தது. தெலங்கானா போராட்டத்தில் ஏராளமான மாணவர்கள் பங்கெடுத்துக் கொண்டதையும் உளவுத் துறை கவனித்துச் சொன்னது. அதைவிட உளவுத் துறை சொன்ன இன்னொரு அதிர்ச்சியான தகவல், தெலங்கானா பகுதியில் நக்சலைட்கள் ஆதிக்கம் அதிகம். தெலங்கானா பிரச்னையை சரியானபடி கையாளவில்லை என்றால், அந்தப் பகுதி முழுவதும் நக்சலைட்களின் கை ஓங்கி விடும். இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டுதான், தெலங்கானா கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவித்தது மத்திய அரசு. 'ராஜசேகர ரெட்டி மட்டும் இப்போது உயிருடன் இருந்திருந்தால் தெலங்கானா பிரச்னையை மிகத் திறமையாகச் சமாளித்திருப்பார்' என்று மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுவது அக்மார்க் நிஜம்.



* ராஜசேகர ரெட்டி



* மோகன்பாபு

எட்டு கிலோ எடைகுறைப்பு!

56 கிலோ எடை இருந்த ராவ், 11 நாள் உண்ணாவிரதத்தில் எட்டு கிலோ எடை குறைந்துவிட்டார். மாநிலமெங்கும் அமளிகள் சற்றே அடங்கினாலும்கூட, சந்திரசேகர ராவ் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகவில்லை. அவசர சிகிச்சைப்



பிரிவிலிருந்து அவரை வெளியே அழைத்து வந்தபோது, வெளியில் திரண்டிருக்கும் மக்களைப் பார்த்தே தீருவேன் என்று அவர் பிடிவாதம் பிடிக்க, வீல் சேரில் அமர்த்தி அவரை வெளியில் அழைத்து வந்தார்கள். மனுஷர் ரொம்ப பலவீனமாகவே இருந்தார். ரொம்ப கஷ்டப்பட்டு, சக்தியைத் திரட்டி, இரண்டு கைகளையும் கூப்பி, வணக்கம் சொல்லி தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

பல்வேறு கட்சித் தலைவர்களும் ஆஸ்பத்திரிக்கு வந்து தெலங்கானா ஹீரோவைப் பார்த்துவிட்டுச் சென்றாலும், அவர் வாய் திறந்து ஒருவருடனும் பேச முடியவில்லை. சோனியா காந்திக்கு மட்டும் ஃபோன் போட்டு, 'கோரிக்கையை நிறைவேற்றியதற்கு நன்றி' என்று கூறினார்.

ரியல் எஸ்டேட்காரர்கள் வயிற்றில் புளி!

ஏற்கெனவே பொருளாதார மந்த நிலையால் அடி வதங்கித் தளர்ந்திருக்கும் ரியல் எஸ்டேட் அதிபர்கள், இப்போது இன்னமும் மிரண்டு போயிருக்கிறார்கள். ஒருங்கிணைந்த ஆந்திராவில் அன்னிய முதலீடு ஏராளமாகக் கொட்டுகிறது. ஆனால், பிரிக்கப்பட்ட பிறகு...?

பதறும் டோலிவுட்!

தெலங்கானா போராட்டத்தால் சில தெலுங்கு சினிமா பெரும் புள்ளிகளுக்கு உதறல் எடுத்துள்ளது. தெலுங்கு ஹீரோ மோகன் பாபுவின் படமான சலீம், 23 கோடியை விழுங்கிவிட்டு, ரிலீஸுக்குக் காத்திருக்கிறது. தெலங்கானா பிரச்னை ஆரம்பித்தது முதலே தியேட்டர்களில் முப்பது சதவிகிதம் வருமானம் குறைந்துவிட்டதாக ஹைதராபாத் ஃபிலிம் சேம்பர்காரர்கள் வருத்தத்தில் இருக்கிறார்கள்.


பெரிய தம்பி; சின்ன தம்பி!

தெலங்கானா பிரிந்துபோனால், ஆந்திரா எப்படி இருக்கும்? இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ச.கி.மீ மொத்தப் பரப்பளவில் தெலங்கானாவுக்கு ஒரு லட்சத்து 14 ஆயிரம் ச.கி.மீ போக, ஆந்திராவுக்கு அதைவிடக் கூடுதலாக 46 ஆயிரம் ச.கி.மீ. கிடைக்கும். தெலங்கானா மக்கள் தொகை 3 கோடி. ஆந்திரா: நாலரை கோடி. மொத்தமுள்ள 294 சட்டமன்றத் தொகுதிகளில் தெலங்கானாவுக்கு 119; ஆந்திராவுக்கு 175 கிடைக்கும். லோக் சபாவில் தெலங்கானாவுக்கு 17 இடங்கள்; ஆந்திராவுக்கு 25 இடங்கள்.

- (ஹைதராபாதிலிருந்து)
எஸ். சந்திரமௌலி

சமையலறையில்





■ கசகசாவைப் பாலில் அரைத்து முகத்தில் பூசிக் கொண்டு பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு கழுவினால் முகம் பளபளப் பாக இருக்கும்.

■ சில சொட்டுகள் குங்குமப்பூ ஆயிலை எடுத்துக் கொண்டு முகத்தில் தடவி மசாஜ் செய்துகொண்டு வெது வெதுப்பான நீரில் கழுவி வந்தால் இரத்த ஓட்டம் அதிகரித்து முகம் பொலிவாகும்.

■ அகலமான பாத்திரத்தில் வெண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு ஸ்பூன் உப்பு, ஒரு ஸ்பூன் எலுமிச்சம் பழச்சாறு எடுத்துக் கொண்டு 15 நிமிடங்கள் பாதங்களை ஊற வைத்து, உடம்பு தேய்க்கும் பிரஷ்ஷால் இறந்த செல்களை எடுத்தபின், கொழுந்து வேப்பிலை மஞ்சள் சேர்த்து அரைத்துப் பூசி கழுவி வந்தால் பாதம் ஆரோக்கியமாக பளபளப்பாக இருக்கும்.

■ உருளைக் கிழங்குச் சாற்றைக் கண்களுக்கு



அட! தோ பாருடா!

கல்கி இன்டர்நெட் சிறப்பிதழில், கமலுக்கு இணையதளம் வேண்டாமா என்று எழுப்பியிருந்த வினாவுக்கு விடை

பியூட்டி பார்லர்!

அடியில் பூசி வந்தால் கருக்கம் போய்விடும்.

■ காய்ச்சாத பாலைப் பஞ்சில் நனைத்து கண்களின் மீது வைப்பது, வெள்ளரிக் காயை வட்டமாக நறுக்கி கண்களின் மீது வைப்பது கண் சோர்வைத் தடுக்கும்.



■ நெல்லிக்காயை தினமும் ஏதோ ஒரு விதத்தில் சாப்பிடுவதும், பூண்டை அடிக்கடி உணவுடன் சேர்ப்பதும் இளமையைத் தக்க வைக்கும் இரகசியங்கள்.

சமையலறையிலேயே சகல அழகும் கிடைக்குமாமே? வெண்ணெயை வீட்டில் வைச்சுட்டு, இனி நெய்க்குத் திண்டாடலாமா?





செய்தி : ஆர்.பாலா

உடனே கிடைத்திருக்கிறது ரசிகர்களுக்கு விருந்தாக. கல்கியில் வெளியான செய்தியைக் கண்ணுற்ற கமல், எழுத்தாளர் இரா.முருகனின் துணையோடு தமது இணைய தளத்தைத் 'தொடங்க இருக்கிறாராம். அது புத்தாண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும் என்கிறார்கள். கமல் ரசிகர்களுக்கென நடத்தி வந்த 'மய்யம்' இதழ் இனி இணையத்தில் புதுப்பொலிவோடு வெளிவருமாம்!

இணையத்திலும் கலக்குங்க ஸார்!

நான் சொல்லும் காலத்தில் பள்ளிக்கூடத்தில் முப்பது குழந்தைகள் இருந்தன. அக்கிரகாரத்திலிருந்து ஐந்து குழந்தைகள்; வேளாளத் தெருவிலிருந்து ஏழெட்டுப் பேர்; பாக்கிக் குழந்தைகள் குடியானத் தெருவிலிருந்து வந்தன.

குடியானக் குழந்தைகளில் நாலைந்து பெண்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருத்திக்குச் சந்திரமதி என்று பெயர். அவள் நாட்டாண்மைக்கார நல்லானின் மகள். தாயில்லாக் குழந்தை. அவளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு பாரதியாரின் பின்வரும் வரிகள் ஞாபகத்துக்கு வரும்:

'பச்சைக் குழந்தையடி - கண்ணில்
பாவையடி சந்திரமதி
இச்சைக்கினிய மது - என்
இருவிழிக்குத் தேன்நிலவு!



அவளுடைய முகத்தில் களை சொட்டிற்று. கருவண்டுகளைப் போன்ற அவளுடைய பரந்த கண்கள் யாருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். தலை மயிரை அலட்சியமாய் எடுத்து ஒரு சொருக்குப் போட்டுக் கொண்டு வருவாள். அப்போது அவளைப் பார்த்தால் பண்டை காலத்துத் திறமை வாய்ந்த சிற்பி ஒருவன் சாமுத்திரிகா லட்சணத்தில் அணுவளவும் பிசகாமல் அமைத்த ஒரு சிலை உயிர் பெற்று நடந்து வருவதுபோல் தோன்றும்.

நாலைந்து வருஷங்கள் சென்றன. சந்திரமதி நான் எதிர்பார்த்தது போலவே அழகு வடிவும் இளமங்கையானாள். அவளுடைய கல்யாணமும் நான் எதிர்பார்த்தது போலவே நடக்குமென்று தோன்றிற்று. குளக்கரைக்கோ, ஆற்றங் கரைக்கோ நான் போகும்போது சில சமயம் சந்திரமதி எதிர்ப்படுவாள். ''ஸார்! சௌக்கியந்தானா?'' என்று கேட்பாள். எனக்கு உடம்பு பூரித்துப் போகும். ஒரு நாள் காலை நேரத்தில் குளக்கரையில் இருந்த இலுப்பந்தோப்பில் தரையிலே புஷ்பப் பாவாடை விரித்தது போல உதிர்ந்திருந்த இலுப்பைப் பூக்களை



இருவிழிக்குத் தேன் நிலவு!

அவள் திரட்டிக் கொண்டிருந்தாள். மேலே மரக்கிளைகளில் நானாவிதமான பட்சிகள் பாடிக் கொண்டிருந்தன. இலுப்பைப் பூவின் மனோகரமான மணம் கம்மென்று வீசிக் கொண்டிருந்தது! அந்தக் காட்சியும், கீதமும், மணமும் என்னைப் பூரணமாய் வசிகரித்தன. அவ்விடத்தில் சற்று நின்று,


''என்ன, சந்திரமதி! உனக்குக் கல்யாணமாமே?''

என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அவளுடைய கண்களில் ஜலம் துளித்ததைக் கண்டதும், என்னுடைய சிரிப்பு சாம்பலாகிவிட்டது.

- 'சந்திரமதி'

கதையிலிருந்து...



கிரேஸியைக் கேளுங்கள்



காதுக்கு

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை**

உங்களுக்குப் பிடித்த வெளிநாடு எது...?

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய மந்தை வெளிநாடு..!

● **என்.கோமதி, நெல்லை**

யானை படுத்தால் குதிரை மட்டம்... எறும்பு படுத்தால்?

அந்த எறும்பு மகா மட்டம்... சுறுசுறுப்பான எறும்பு சோம்பேறியாகப் படுக்கலாமா!

● **ஆர்.ரங்கநாதன், தி.நகர்**

மாதா, பிதா, குரு, தெய்வம்... ஏன் இந்த வரிசையில் மனைவியை விட்டு விட்டார்கள்?

வரிசையில் முதலிடமே அப்பாவின் மனைவிக்குத்தானே!

● **ராகினி, டெல்லி**

கன்னத்தில் குழி விழுந்தால் அதிர்ஷ்டமா கிரேஸி...?

எனக்கு ஒரு நண்பன். அவன் துரதிர்ஷ்ட வேதாளத்தைத் தோளில் சுமக்கும் Bad luckரமாதித்தன். 'இவ்விடம் ஆட்கள் வேலை செய்கிறார்கள்' என்று போர்ட் போடும் அளவுக்கு அவன் கன்னத்தில் பாதாளமாகக் குழி விழும். பாவம் அவன் பல்லாங்குழி ஆடும்போது, கை தவறி சோழி பல்லில் பட்டு ஸெப்டிக் ஆகி அப்'பல்'லோவில் அட்மிட் ஆனான். இதற்கு என்ன சொல்கிறீர்கள்!

● **புதுவை கிருஷ்ணன், புதுச்சேரி**

நடிகைகளுக்குள் 'இடைத்' தேர்தல் வைத்தால் உங்கள் வாக்கு யாருக்கு?

பொதுத் தேர்தலில் வாக்களிக்க பதினெட்டு வயதுக்கு மேல் இருக்க வேண்டும். நீங்கள் கேட்ட 'இடைத்' தேர்தலில் வாக்களிக்க பதினெட்டு வயது இளமை வேண்டும். கள்ள வோட்டு போடக்கூட எனக்கு அருகதை கிடையாது. கிருஷ்ணன் சார், எப்படி நடிகைகளுக்கு 'இடையே' மாட்டிக் கொள்ளாமல் எஸ்கேப் ஆனேன் பார்த்தீர்களா!

● **பா.அசோக், விருதுநகர்**

கிரேஸியாரே... முத்தத்துக்கு மணம் உண்டா?

கொடுப்பவர்களைப் பொறுத்து, முத்தம் மணம் மாறும் செண்ட்(scent). மனைவி கொடுத்தால் டீசன்ட்; காதலி கொடுத்தால் ப்ளசன்ட்; குழந்தை கொடுத்தால் இன்னொசன்ட்; ஃப்ளையிங் கிஸ், ஜஸ்ட் சென்ட் (sent)!

● **வே.ஈஸ்வரன், இராஜபாளையம்**

கண்ணுக்கு மை அழகு; காதுக்கு?

மெய் அழகு!

● **ரேவதிப்ரியன், ஈரோடு**

தமிழ் நன்கு பேசத் தெரிந்தும், ஆங்கிலத்தில் பேசிப் பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் பற்றி?

நோ கமெண்ட்ஸ்!

● **அ.அப்துல் காதர், மேற்கு தாம்பரம்**

ஒருவன் முட்டாள் என்பதை எப்படி அறிவது?

க்விஸ் நிகழ்ச்சியில் அவனை அமர

'மெய்' அழகு!

வைத்து 'உங்கள் பெயர் என்ன?' என்று கேளுங்கள். அவன் 'pass' என்றால் ஃபெயில் ஆன முட்டாள். 'எனி க்ளு?' என்று கேட்டால் அடி முட்டாள்!

• வ.வைகுண்டம், நங்கநல்லூர்

'பட்டணத்தில் பூதம்' போன்று ஒரு பூதம் நாட்டை ஆண்டால் நன்றாக இருக்குமல்லவா?

'பட்டணத்தில் பூதம்' படத்தில் வரும் பூதம் 'ஜி பூம் பா' என்ற மந்திரத்தைச் சொல்ல, கேட்டதைக் கொடுக்கும். அந்த 'ஜி பூம் பா'வைத் திருப்பிப் போட்டால் 'பாபூஜி'. 'பாபூஜி' மஹாத்மா காந்தி எதிர்பார்த்த ராமராஜ்யம் நடந்தால் நன்றாகத்தான் இருக்கும்!

• ஜே.துரைராஜ், சென்னை

தற்போதைய கிரேஸி மோகனுக்கும் இருபது வருடத்துக்கு முன்பு இருந்த கிரேஸி மோகனுக்கும் என்ன வித்தியாசம்?

தற்போதைய கிரேஸி மோகனுக்கு கேள்வி கேட்டால் பொறுமையாகப் பதில் சொல்லும் விடைத்தனம் இருக்கு. இருபது வருடத்துக்கு முன்பு, கேள்வி கேட்டால் எதிர்க்கேள்வி கேட்கும் விடலைத்தனம் இருந்தது!

கே.எஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்

கிருபானந்த வாரியாரின் சிஷ்யை மங்கையர்க்கரசி பற்றி?

வாரியாருக்குப் பிறகு வேறு யார் என்ற கேள்விக்குப் பதிலாகக் கிடைத்தவர் மங்கையர்க்கரசி... மங்காத தமிழ் நாவுக்கரசி!



'வலை'யில் சிக்கிய

வட்டமேஜை

✉ 'இன்டர் நெட் ஸ்பெஷல்' வாசகர்களை நவீன வாசிப்புத் தளத்துக்கு அழைத்துப் போன முழுமையான முயற்சி; டிவிட்டர் கதையெழுத சவால் விட்டதோ, வாசகர் திறமையை வளர்க்கும் பயிற்சி.

-மல்லிகா அன்பழகன், சென்னை

✉ 'பளிச்' என்று புன்னகைக்கும் 'நச்' நயனின் அட்டைப்படம் வெகு அழகு! ஒருவேளை அழகு ஸ்பெஷல் இதழ் அட்டையை மறதியாக முன்னமே போட்டு விட்டீர்களோ?

-க.சுந்தர், நெய்வேலி

✉ கல்கி இன்டர்நெட் ஸ்பெஷல், வாசகர்களை வலையில் சிக்கிய மீன்களாக்கிவிட்டது!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

✉ 'நச்' நயன்தாரா வலையோகிராஃபி; வசீகரிக்கும் இளமை யோகிராஃபி.

- ஏபி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்

✉ திருச்செந்தூர், வந்தவாசி இடைத் தேர்தல்கள் பற்றி இஞ்ச் பை இஞ்ச்சாக விசாரித்து எழுதியிருந்தவிதம் அசத்தல்!

- ஆர்.அஜிதா, கம்பம்

✉ இன்டர்நெட் ஸ்பெஷலில் என்டர் ஆனதுதான் தெரியும். வலைகளில் மாட்டிக் கொண்டு வெளியே வர முடியாமல் தவித்தோம். வலையை நல்லா பின்னியிருக்கீங்க!

- என்.சீத்தாலட்சுமி, சென்னை-40

✉ நெட் ஜோசியத்துல ''இண்டர்வியூ போறேன். என்ன கலர் சட்டை போடணும்?''னு கூட கேட்பாங்களா...? அட மக்கா... இன்னும் திருந்தவே இல்லையா..?

- எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

✉ இன்டர்நெட் ஸ்பெஷல் செய்திகளில் மட்டுமல்ல, ஸ்பெஷல் எச்சரிக்கைகளிலும் வாசகர்கள்பால் உங்கள் அக்கறையைக் கண்டு அகம் மகிழ்கிறோம்.

- சி.என்.ஸ்ரீனிவாசன், சென்னை-40

✉ ஆந்திரப்பிரதேசத்தைப் பற்றிய கார்ட்டூன் அருமை!

- காமாட்சி சத்தியநாராயணன்

✉ கூகுள் குரோம் வளர்கிறது; மைக்ரோசாஃப்ட் தேய்கிறதா? தொழில்

நுட்பச் சக்கரமும் சுழல்கிறது.

- கே.வி.ராமன், சென்னை-73

✉ எழுத்தாளர் வெங்கடேஷின் நெட்வொர்க்கில் உருவான 'இன்டர்நெட் ஸ்பெஷல்' மனத்தை விட்டு அகலாத புதுமையான சிறப்பிதழ்.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

✉ 'அமிர்தா'வின் மெருகூட்டிய செய்தியில் உள்ளத்தை வருடின, ஸ்ரீராம் சந்தோஷின் உன்னத உணர்வுச் சித்திரங்கள்.

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

✉ 'இன்டர்நெட் ஸ்பெஷல்'

வாசக மீன்கள்!



அருமையான தகவல் பெட்டகம்!

- மயிலை கோபி, சென்னை - 83

✉ அமரர் கல்கியின் 'புலிராஜா' கதை, அவர் நகைச்சுவையாக எழுதுவதில் புலி என்பதை நினைவூட்டி மகிழ வைத்தது.

- கே.கஸ்தூரி, காட்பாடி

✉ தீபு + கோபு = அதிரடியான ஜோடி, வெடிச் சிரிப்பு!

- வே.ந.கதிர்வேல், வேலூர்

✉ தனி தெலங்கானாவைத் தொடர்ந்து, ஆந்திராவை மேலும் பல பிரிவாய்த் துண்டாடத் துடிக்கும் நிஜத்தை, சுடும்படி தந்திருக்கிறது கார்ட்டூன்! **- ஜி.ரெஜினா பானு, பழனி**

நான் அவன் இல்லை–2



முதல் படத்தில் உள்ள அதே கேரக்டர்கள்; ஹீரோயின்ஸ் மட்டும் புதுசு. மந்தபடி படம் பார்ப்பதற்கு பாகம் -1தான். வெவ்வேறு திசையில் மிதக்கும் 4 ஹீரோயின்களை ஏமாற்றும் அதே கதைதான். முதல் பாகத்தில் ஜீவன் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று அங்கு ஒரு பெண்ணை ஏமாத்த ஆரம்பிக்கிறதா காமிச்சிருப்பாங்க. அங்கிருந்து ஆரம்பிக்குது படம்.

பல கெட்டப்பில் வந்து ஏமாற்றும் ஜீவன், சங்கீதாவின் பின்னால் அலையும்போது சோகமான மிருதுவான மொட்டை கேரக்டரில் வருகிறார். இதில் சங்கீதாவின் கேரக்டர் பரவாயில்லை. காலை இழுத்து இழுத்து நடப்பது, திக்கித் திக்கிப் பேசுவது, ஒரு பெண் குழந்தைக்குத் தாய் என தமக்குக் கொடுத்த கேரக்டரை இலகுவாகச் செய்துள்ளார். படத்தில் இவருக்கு ஒரு ஃப்ளாஷ் பேக். அதில் இலங்கையைச் சேர்ந்தவராக வருகிறார். இவருக்கு உதவ எண்ணுகிறார் ஜீவன்.

முதல் பாகத்தில் போலீஸாக வரும் ராஜ்கபூர். அவரின் தங்கைதான் லக்ஷ்மிராய். அண்ணனிடம் தன்னை ஏமாற்றியவனைப் பற்றிக்கூற, அவரும் ஃபோட்டோவைக் கேட்க, அதைப் பார்த்தவருக்கு அதிர்ச்சி. யாரோட கேஸை இந்தியாவில் கண்டுபிடித்தாரோ அவனே தனது தங்கையின் வாழ்விலும் விளையாடியதை எண்ணி அதிர்ச்சி ஆகிறார். உடனே, முதல் பாகத்தில் ஏமாற்றிய ஜீவனின் கெட்டப்களை நமக்கு நினைவு கூர்கிறார் இயக்குநர்.

மாடர்ன் பெண்ணாக வருபவள், திருமணமான இந்தியப் பணக்காரர்களை தன் வலையில் விழவைத்து பின் அவர்களின் மனைவிக்கு ஃபோன் செய்து மாட்டிவிட்டுப் பணம் பறிப்பது ஒரு ரகம்.

லோக்கல் தாதாவான பெண்ணிடம் தாம்தான் கவிஞர் வாலி என்று அவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது, அதில் உருகி எல்லா பணத்தையும் அவனிடம் கொடுத்து விட்டு அவர் சாமியாராக மாறுவது என்பது கொஞ்சம் டூமச்!

சங்கீதா தவிர, நான்கு நாயகிகளும் ஆடைக் குறைப்பில் அதிக கவனம் காட்டியுள்ளார்கள். இடையிடையே வரும் சங்கீதாவின் கேரக்டர் பெரிதாக இல்லாவிட்டாலும் சற்று ஆறுதல். ஜீவன் நடிப்பும் சற்று மந்தம்தான். வழக்கம்போல் ஆர்ப்பாட்டமில்லாமல் கேஷுவல் நடிப்பு. இளமை கேரக்டருக்குத் தகுந்த வேகம் குறைவு.

க்ளைமேக்ஸ் காட்சியில் போப் போல உடை அணிந்து ஜீவன் பேசுவது காமெடி!

படத்தில் இடம்பெறும் ஸ்விட்சர்லாந்து காட்சிகளை இன்னும் செதுக்கிக் காட்டியிருக்கலாம். மரியா பாடல் பரவாயில்லை.

நான் அவன் இல்லை-2 ரசனை சற்றுக் குறைவான விருந்து.

– சிவன்

THE CHAIRMAN, MANAGEMENT & STAFF
OF

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

No. 1, Radial Road, Pallikaranai, Chennai – 600 100.



Solicits your gracious presence
on the occasion of the

INAUGURATION OF THE
STATE OF ART DUAL ENERGY HIGH END
DIGITAL LINEAR ACCELERATOR WITH IMRT AND IGRT

on the 27th December 2009
at 11.30 a.m. in our Hospital Premises

by

Shri. SURJIT SINGH BARNALA

His Excellency The Governor of Tamilnadu

and

Shri. A.R. ANSARI

Chairman cum Managing Director
Neyveli Lignite Corporation

has kindly consented to be the Chief Guest

Dr. T.G.Govindarajan
Chairman

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

CHAMPA

சம்பாவின்

புதிய வரவுகள்



திருமணம் போன்ற எல்லா சுபகாரியங்களுக்கும் நாள் முழுவதும் சம்பாவின் பட்டோ என்று எல்லோருக்கும் வியக்கும் காட்டன் புடவைகளை அணிந்து கொண்டாடுங்கள், **Grand look Salwar Kameez**-களும் உள்ளன. சம்பாவிற்கு வாருங்கள்.


பொங்கல்

சிறப்புச் சலுகை

10%

01.01.2010 முதல்
13.01.2010 வரை





'கிராண்ட் லுக்'
ஜரிகை வேலைப்பாடுடன், வண்ணமயமான புடவைகளின் ஆலயம்

சம்பா!

Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m | Sunday Holiday | Visa, Master & BOB Cards Accepted